வெளியீடு 15-6-2003 Issued 15-6-2003

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

புதன்கிழமை, அக்டோபர் 30, 2002 – தொகுதி 32 – எண் 2

**Wednesday the 30th October, 2002 – Volume 32 – No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George, Chennai - 600 009**

**Price Rs. 3.00**

## 30-10-2002

### உள்ளடக்கம்

5O6 / 2003


பக்கங்கள்

1. வினாக்கள்-விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் 201-250

2. தகவல் கோரல்—

(அ) முகையூரில் பாட்டாளி மக்கள் கட்சி பொதுக் குழுக் கூட்டம் 250

(ஆ) சாலைப் பணியாளர்கள் பணி நீக்கம் 252

(இ) அரசு ஊழியர்களில் ஒரு பிரிவினர் 23-10-2002 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளது 256-273

3. விதி 111-ன்கீழ் திருத்த அறிக்கை—

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை அலுவலக கூடுதல் ஆணையர் பதவிக்கு அங்கீகாரம் வழங்கும் சட்டத் திருத்தம் குறித்து அத்துறை அமைச்சரின் திருத்த அறிக்கை 251-252

4. கவன ஈர்ப்பு—

வேலூரில் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் தொடங்குதல் 252-256

5. அறிக்கைகள் அளித்தல்—

(அ) பொதுக் கணக்குக் குழு 273

(ஆ) பொது நிறுவனங்கள் குழு 273

(இ) அரசு உறுதிமொழிக் குழு 273

(ஈ) மனுக்கள் குழு 274

| | பக்கங்கள் |
|---|---|
| 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)— | |
| (அ) தமிழ்நாடு நபர் ஒருவரை உயிருடன் புதைக்கின்ற சடங்கு மற்றும் பழக்கத் தடைச் சட்டமுன்வடிவு, 2002 | 274-275 |
| (ஆ) தமிழ்நாடு கட்டாய மதமாற்றத் தடைச் சட்டமுன்வடிவு, 2002 | 275-277 |
| (இ) தமிழ்நாடு பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலைத் தடைசெய்கின்ற (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 | 278-279 |
| (ஈ) தமிழ்நாடு பல்கலைக்கழக (திருத்தச்) சட்டங்களுக்கான திருத்தச் சட்டமுன்வடிவு, 2002 | 279 |
| (உ) சென்னைப் பல்கலைக்கழகச் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 | 279-280 |
| (ஊ) திருவள்ளுவர் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 | 280-281 |
| (எ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (எட்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 | 281 |
| (ஏ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஒன்பதாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 | 282 |
| (ஐ) தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச) சட்டமுன்வடிவு, 2002 | 283 |
| (ஒ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 | 283-284 |
| (ஓ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்த) திருத்தச் சட்டமுன்வடிவு, 2002 | 284-285 |
| (ஔ) தமிழ்நாடு கால்நடை மருத்துவ மற்றும் விலங்கின அறிவியல்கள் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 | 285-286 |

| | பக்கங்கள் |
|---|---|
| 7. அறிவிப்புகள்— | |
| (அ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஒன்பதாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 (ஆஇ) | 282 |
| (ஆ) பேரவை அலுவல்களில் மாற்றம் | 350 |
| 8. அமைச்சரவையின் குறிப்பிட்ட ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம்— | |
| பொது விநியோக முறையில் வழங்கப்படும் அரிசியின் விலை உயர்வு | |
| டாக்டர் க. பொன்முடி | 287-292, 327 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 293-304 |
| திரு. ஜி. பழனிசாமி | 304-310 |
| மாண்புமிகு திரு. ப. தனபால் | 311,312,313, 334-346 |
| திரு. ஜி.கே. மணி | 312-319, 348 |
| திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் | 319-334, 347 |
| 9. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)— | |
| தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, 2002 | 348-350 |
| மாண்புமிகு திரு. சி. பொன்னையன் | 349-350 |
| 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— | 351-356 |

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
225173
சென்னை 600 008
நூலகம்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**ஐப்பசி 14, சித்ரபானு-திருவள்ளுவர் ஆண்டு 2033**

**2002 அக்டோபர் 30, புதன்கிழமை**

*மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை
எண்ணி இடத்தாற் செயின்."

ஒரு செயலுக்குரிய வழிமுறைகளைக் குறையின்றிச் சிந்தித்துச் செய்யும் இடத்து, அஞ்சாமை ஒன்றைத் தவிர வேறு துணை தேவையில்லை.

### 1. வினாக்கள்—விடைகள்

**உடுக்குறியிட்ட வினாக்கள்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 67, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை அமைச்சர்.

67—

**பக்கிங்காம் கால்வாய்**

***9480—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை சென்ட்ரல் வழியாக இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் 3,8,10 ஆகிய வட்டங்களின் வழியாகச் சென்று எண்ணூர் கடலில் கலக்கும் பக்கிங்காம் கழிவுநீர்க் கால்வாயைச் சுத்தம் செய்து கழிவுநீர் தேங்காமல் இருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2002 அக்டோபர் 30

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கழிவு நீர் தேங்காமலிருக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கின்றது.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்கிங்காம் கால்வாயில் கலக்கும் கழிவு நீர், மழை நீர் தேங்கி நிற்காமல் தடையின்றிச் செல்ல நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்புக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். சுமார் 17 கிலோமீட்டர் நீளமுள்ள இந்த பக்கிங்காம் கால்வாய் எண்ணூரில் தொடங்கி ஆர்.கே. நகர் தொகுதியில் பெரும்பான்மையான நீளம் ஓடி, பேசின் பாலம், சென்ட்ரல் வழியாக நேப்பியர் பாலத்தின் அருகே கடலில் கலக்கிறது. ஆர்.கே. நகர் தொகுதியில் கட்டப்பட்டுள்ள அனைத்து மழை நீர் வடிகால் கால்வாய்களும்—வரும் மழை நீர் பக்கிங்காம் கால்வாய்க்குள் சென்று—கடலில் கலக்குமாறு அமைக்கப்பட்டுள்ளன. ஆனால், எனது தொகுதியில் அமைந்துள்ள தெருக்களின் மட்டத்திலிருந்து கால்வாயின் நீர் மட்டம் 2 அடிதான்—பள்ளம்—உள்ளது. பல ஆண்டுகளாகத் தூர் வாரப்படாததால், கால்வாயில் 90 சதவீதம் கழிவுப் பொருட்கள் நிறைந்துள்ளன. இதனால், சிறிதுநேர மழைக்குக்கூடத் தொகுதியில் பல பகுதிகளில் தண்ணீர் தேங்கி நிற்கின்ற நிலை உள்ளது. இதனால் பகுதிவாழ் மக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். ஆகவே, விரைவாக போர்க்கால அடிப்படையில் பக்கிங்காம் கால்வாயைத் தூர் வாரிச் சுத்தப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டுகளில் யானைக்கவுனி, பேசின் பாலம், மூலக் கொத்தளம், கொருக்குப்பேட்டை ஆகிய பகுதிகளில் வடக்கு பக்கிங்காம் கால்வாய் அகலப்படுத்தப்பட்டும், குறிப்பாக கொருக்குப் பேட்டை பகுதியில் தூர் வாரியும், ஓட்டேரி நல்லா கால்வாய் வெள்ள நீர் எளிதில் பக்கிங்காம் கால்வாயில் விழ ஏதுவாகவும் வழிவகைகள் செய்யப்பட்டன. தற்போது ஆங்காங்கே மண் திட்டுகள் மற்றும் கோரைப் புற்கள் ஏற்பட்டு நீரோட்டத்திற்குத்தடையாக இருந்து வருகின்றன.. கேப்டன் காட்டன் கால்வாய் மற்றும் கொடுங்கையூர் கால்வாய், வடக்கு பக்கிங்காம் கால்வாயோடு சேரும் இடங்களில், வரும் மழைக்காலங்களில் நீரோட்டம் சீராக இருப்பதற்கான தற்காலிக முறையில் தடையாக இருக்கும் மண் திட்டுக்கள் மற்றும் கோரைப் புற்களை அகற்றும் பணி ரூபாய் 3 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. இதற்கு நிரந்தரத் தீர்வாக பேசின் பாலம் முதல் கொடுங்கையூர் வாய்க்கால் சேரும் இடம் வரை சுமார் 4 கிலோமீட்டர் நீளத்திற்கு தூர் வாருவதற்கு ரூபாய் 55 இலட்சத்தில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு பெற்று பணி எடுத்துக்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2002 அக்டோபர் 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ரூபாய் 3 இலட்சம் கோரைப் புற்களையும், மரங்களையும் வெட்டுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளதாக அறிவித்ததற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இந்தப் பகுதிகள் நிரந்தரமாக மழைக் காலத்தில் அல்லலுக்கு ஆட்படாமல் இருக்க வேண்டுமென்றால் எண்ணூரிலிருந்து சி.பி. ரோடு, ஐ.ஓ.சி., புது வண்ணாரப்பேட்டை ஆகிய பகுதிகளிலே படிந்திருக்கின்ற கழிவுப் பொருட்களை அகற்றினால்தான் மழைக் காலங்களில் அந்தப் பகுதிகளில் வாழும் மக்கள் வெள்ள அபாயத்திலிருந்து காப்பாற்றப்படுவார்கள் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இந்த பக்கிங்காம் கால்வாய் ஒரு காலத்தில் வியாபார ரீதியில் பொருட்களை ஏற்றிச் செல்லும் நீர்வழிப் போக்குவரத்துக்கு உதவியாக இருந்தது. மீண்டும் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் நீர்வழிப் போக்குவரத்து நடக்கும் வகையில் அதனைத் தூர் எடுக்கவும், அதே சமயம் கழிமுகப் பகுதியான நேப்பியர் பாலம் அருகில் மீண்டும் மிதவை மணல் வாரும் இயந்திரம் கொண்டு ஆழப்படுத்தவும் நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர்களால் தற்போது கூறப்பட்டிருக்கின்ற பகுதிகளையும் சேர்த்து ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[2002 அக்டோபர் 30

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்த பக்கிங்காம் கால்வாயினுடைய கடைசிப் பகுதி என்னுடைய தொகுதியினுடைய மையமாக இருந்து கொண்டிருக்கிறது. கடைசியிலே இருக்கின்ற காரணத்தினாலே வண்டல் அதிகமாகவும், தூர் அதிகமாகவும் இருக்கிறது. அமைச்சர் அவர்கள் தூர் வாருகின்ற முயற்சி எடுக்கப்பட்டதாகச் சொல்கின்றார்கள். அது திருப்தியாக நடைபெற்றிருப்பதாக என்னால் எடுத்துக்கொள்ள முடியவில்லை. ஒரு கரைப்பகுதியிலே குடிசை அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே, அவர்கள் செய்கின்ற அசுத்தங்களும் கரையோரம் இருக்கின்ற Stainless Steel Factory-களால் ஏற்படுகின்ற அசுத்தங்களும் இந்த பக்கிங்காம் கால்வாயை மிகவும் அசிங்கப்படுத்திக் கொண்டிருக்கின்றன. ஒரு பக்கத்திலே கரையரிப்பு ஏற்பட்டு, யானைக்கவுனி பாலத்திற்கு ஆபத்து ஏற்படுகின்ற நிலையில்கூட இருக்கிறது. அதன் விளைவாக அதன் பக்கத்திலே இருக்கின்ற குடிசைமாற்று வாரிய குடியிருப்புகளுக்கும் ஆபத்து ஏற்படலாம் என்கின்ற ஐயம் இருக்கிறது. ஆகவே, அமைச்சர் அவர்கள் நேரில் வந்து பார்வையிட்டு தகுந்த நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அந்தப் பகுதிகளுக்கு நான் நேரிடையாகச் சென்று ஆய்வு செய்து பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 68, டாக்டர் பி. வள்ளல் பெருமான், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.

**68—**

**மகளிர் சுய உதவிக் குழு**

***16676—டாக்டர் பி. வள்ளல் பெருமான்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* மதுவை ஒழிப்பதற்கு மகளிர் சுய உதவிக் குழு நிறுவனங்களை பயன்படுத்திக்கொள்ள அரசிடம் திட்டம் உள்ளதா?



2002 அக்டோபர் 30]

*(ஆ)* ஆம் எனில், அச்சங்கத்தினர்களுக்கு தகுந்த பாதுகாப்புக் கொடுக்க அரசிடம் சலுகைகள் உள்ளனவா?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ)* மற்றும் *(ஆ)* ஆம். நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் பி. வள்ளல் பெருமான், இருக்கையில் இல்லை. திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கான தனியான ஒரு விவர அறிக்கையும் கொடுத்திருக்கின்றார்கள். அந்த விவர அறிக்கையைப் பார்க்கின்றபோது, 5-2-2002 அன்று மதுவிலக்குக் குற்றங்களுக்கு எதிரான போராட்டத்தில்—எதிரான போராட்டம் என்பதை விட எதிரான பிரச்சாரத்தில் என்றிருந்தால் சரியாக இருக்கும்—அரசு சாரா நிறுவனங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், சுய உதவிக் குழுக்கள் ஆகியவற்றின் ஒத்துழைப்புப் பெறப்படுகிறது. அதற்காக, பெறப்படுவதற்காக கூடுதல் காவல் துறை இயக்குநர் (அமலாக்கம்), தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு மகளிர் வளர்ச்சிக் கழகம், நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் மற்றும் சில மாவட்டங்களில் சுய உதவிக் குழுக்களின் திட்ட அலுவலர்கள் கலந்துகொண்டு ஒரு கூட்டம் கூட்டப்பட்டு, அதன் மூலமாக மகளிர் சுய உதவிக் குழுக்களின் ஒத்துழைப்புக் கோரப்பட்டிருக்கிறது என்ற விவரத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். தேவைப்படின் பாதுகாப்பு அளிக்கப்படும் என்கிறார்கள். ஆனால், ஒரு கிராமத்திலோ இன்னும் அதைவிட சிறிய குக்கிராமத்திலோ மகளிர் குழுக்களில் இருக்கக்கூடியவர்கள் இப்படிக் கள்ளச் சாராயத்தைத் தடுக்கும் விதமாகப் புகாரினைத் தருகின்றபோது, திரும்ப அவர்கள் அந்தக் கள்ளச் சாராய வியாபாரிகள் மூலமாகவே தாக்கப்படுவதும், அதற்காகப் பயந்துகொண்டு அல்லது அவர்களுடைய மிரட்டலுக்குப் பயந்துகொண்டு அவர்கள் புகார் கொடுக்க வராமல் இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலையும் நாட்டில் நிலவிக் கொண்டிருப்பதை நாம் அறிவோம். ஆகவே, மகளிர் துணிச்சலாகவும், தைரியமாகவும் செயல்பட வேண்டும் என்றால், அவர்களுக்குரிய பாதுகாப்பு என்பது புகார் தருகின்ற நிலையிலேயே இருக்கும்வகையில், நேரடியாக அவர்கள் தருகின்ற புகாரை மாவட்டக்

கண்காணிப்பாளர் பெற்று அவர் மூலமாக நடவடிக்கை எடுப்பதற்கு அரசு வழிவகை காணுமேயானால், ஓரளவிற்கு மகளிர் சுயஉதவிக் குழுக்கள் துணிச்சலாக மாவட்டக் கண்காணிப்பாளர் மூலமாக நடவடிக்கை எடுக்க முடியும். ஆகவே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்களே பதில் சொன்னால் எப்படி? கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** ஆகவே, எடுக்க முடியுமா என்பதற்காக அமைச்சரிடம் அந்த ஆலோசனையைக் கூறி அப்படி ஒரு நடவடிக்கை எடுக்கவும், மகளிருக்குப் பாதுகாப்புக் கொடுக்கவும் அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுவிலக்குக் குற்றங்களுக்கு எதிரான போராட்டத்தில் அரசு சாரா நிறுவனங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், சுய உதவிக் குழுக்கள் ஆகியவற்றின் ஒத்துழைப்பு ஏற்கெனவே பெறப்பட்டு வருகிறது. கள்ளச் சாராயம் மற்றும் மெத்தனாலின் தீமைகள் குறித்து மாநிலம் தழுவிய விழிப்புணர்வுக் கூட்டத்தை நடத்தவும், அதில் பங்கேற்கவும், சுய உதவிக் குழுக்களின் ஒத்துழைப்புப் பெறும் வகையில் செயலர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு மகளிர் வளர்ச்சிக் கழகம், கூடுதல் காவல் துறை இயக்குநர் (அமலாக்கம்), நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் மற்றும் சில மாவட்டங்களில் உள்ள சுய உதவிக் குழுக்களின் திட்ட அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்ட உயர்மட்டக் கூட்டமானது 5-2-2002 அன்று நடத்தப்பட்டது. இம்முயற்சியில், மகளிர் சுய உதவிக் குழுக்களின் ஒத்துழைப்பும்—அவர்களுக்கு மதுவிலக்குக் குற்றவாளிகளுடன் முரண்பாடு ஏற்படாத வகையில்—உரிய காலத்தில் பெறப்படும். தேவைப்படின் அவர்களுக்குச் சட்டபூர்வமான பாதுகாப்பும் அரசின் மூலம் அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களிலே கள்ளச் சாராயம் அதிக அளவில் விற்பனை செய்யப்படுகிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் இந்தக்





கள்ளச் சாராய வியாபாரிகளுக்கு எதிர்ப்புக் கொடுக்கக்கூடிய வகையிலே, அதிலும் இன்னும் அழுத்தமாகச் சொல்ல வேண்டுமானால் சிம்மசொப்பனமாக விளங்கக்கூடியவர்கள் இந்த மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த பெண்கள். எங்கள் தருமபுரி மாவட்டத்திலே அதிக அளவிலே மகளிர் சுய உதவிக் குழுக்கள் இருக்கின்ற காரணத்தினாலே பெண்கள் எல்லாம் ஒன்றாகக் கூடிப் பேசி, எந்தக் கிராமத்திலே கள்ளச் சாராயம் விற்கப்படுகின்றதோ, அவற்றையெல்லாம் ஒரு முடிவுக்குக் கொண்டு வர வேண்டுமென்று, பெண்களே அந்தக் குழுக்களின் மூலமாகச் சென்று காவல் நிலையங்களிலே புகார் செய்கிறார்கள். அப்படிச் செய்கிற நேரங்களிலே ஒரு சில காவல் நிலையங்களிலே நல்ல முடிவு ஏற்படுகிறது. அந்த சுய உதவிக் குழுக்களுக்கு ஆதரவாகச் செயல்படுகிறார்கள். ஆனால் சில இடங்களிலே காவல் துறையினரே அந்தக் கள்ளச் சாராய வியாபாரிகளுக்கு ஆதரவாக நின்று இந்தப் பெண்களை அடித்து விரட்டக்கூடிய, மானபங்கப்படுத்தக்கூடிய நிலை எல்லாம் ஏற்பட்டிருக்கிறது. அதை பற்றி நாங்கள் எல்லாம்கூட, காவல் துறை அதிகாரிகளிடத்திலே பலமுறை சென்று வாதிட்டிருக்கிறோம். ஆகவே, இப்படி இருக்கக்கூடிய சூழ்நிலையிலே இந்த மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் செயல்படுத்தக்கூடிய இந்த நல்ல காரியங்களுக்கு, அந்தந்தக் காவல் துறை துணைக் கண்காணிப்பு அலுவலர் அளவிலே அல்லது ஆய்வாளர் அளவிலேகூட அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்து அதன் மூலம் உரிய நடவடிக்கை எடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலமாக இந்த மாதிரியான கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களுக்கு மறு வாழ்வு அளிப்பதற்குண்டான திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. ஏதோ மகளிர் சுய உதவிக் குழுக்களில் அங்கம் வகிக்கின்ற தாய்மார்களை போலீஸ் துறை அடக்கி, ஒடுக்கி மிரட்டுகிறது போன்ற தொனியில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசினார்கள். ஒட்டுமொத்தமாக அவர் அப்படிப்பட்ட பேச்சிலிருந்து விடுபட்டு குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சியைச் சொல்லி, அங்கு நடந்திருக்கிறது என்று ஆதாரபூர்வமாகச் சொல்வார்களேயானால், சட்டப்படி தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) மூலக் கேள்விக்குத் தொடர்பற்றது. (குறுக்கீடு) திரு. பிச்சாண்டி. (குறுக்கீடு) திரு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே திருவள்ளூர் மாவட்டத்திலே மகளிர் சுய உதவிக் குழுக்களில் உள்ள....

**திரு. சி. ஞானசேகரன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. கு. பிச்சாண்டி:** இரண்டு பெண்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவங்கள் எல்லாம் நடைபெற்றிருக்கின்றன. (குறுக்கீடு) மகளிர் சுய உதவிக் குழுக்கள் என்பது அவர்கள் முன்னேறுவதற்காக அமைக்கப்பட்ட ஓர் அமைப்பு. ஆனால் அதை எயிட்ஸ் ஊர்வலத்திற்கும், குடும்பக் கட்டுப்பாடு ஊர்வலத்திற்கும், இப்படிப்பட்ட புகார்கள் கொடுக்கின்ற நிலைகளிலும் ஈடுபடுத்தப்படுவதால் அவர்களுடைய முன்னேற்றம் தடைபடுகின்ற காரணத்தால் மகளிர் சுய உதவிக் குழுக்களை இதுபோன்ற நிலைகளில் ஈடுபடுத்தாமல் இருக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வி மூலக் கேள்வியிலிருந்து மாறுபட்டிருப்பதால், தனி வினாப் போட்டு, விடை பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் சுய உதவிக் குழுக்களை மதுவை ஒழிப்பதற்காகப் பயன்படுத்துகிற முறைகளில், தமிழ்நாட்டில் பல கிராமங்களிலேயுள்ள மகளிர் குழுக்கள் வெற்றிகரமாக நிறைவேற்றியிருக்கிறார்கள் என்பது உண்மைதான். ஆனால் அதன் மூலமாக அந்தக் குழுக்களுக்கு மிகப்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.





பெரிய பாதிப்பு; சில இடங்களிலே உயிரிழப்பே கூட ஏற்பட்டிருக்கிறது. கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களாலே உயிரிழப்பு ஏற்பட்டிருக்கிறது. அதேபோல, விழுப்புரம் மாவட்டத்திலே ஓர் இடத்திலேகூட, இதுகுறித்துக் காவல் நிலையத்திற்குச் சொன்னார் என்ற காரணத்தினாலேயே, 12 வயது சிறுவனையே வெட்டி மணலிலே புதைத்துவிட்ட கொடூரமும் நடந்திருக்கிறது. இதில் அச்சம் ஏற்படுகிற நிலை ஏற்பட்டுக் கொண்டேயிருக்கிறது. ஆகவே, மகளிர் சுய உதவிக் குழுக்களைப் பயன்படுத்துகிறோம் என்று சொன்னாலும், பாதுகாப்பு அளிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிலே சொல்லியிருந்தாலும் இப்படி நடைபெறுகிற சம்பவங்கள் தொடர்கின்றனவே, அதில் உறுதியான நடவடிக்கையை மது விலக்குத் துறையின் மூலம் முறையாக, சரியாக எடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்காக அரசு மதுவிலக்குத் துறையின் மூலம் பல்வேறு வகையான தொடர் நடவடிக்கைகளைச் சட்டத்தின் மூலம் எடுத்து வருகிறது. கள்ளச் சாராயத்தை அந்தக் கிராமத்தில் ஒழிப்பதற்கு தாமாகவே முன் வருகின்ற மகளிர் சுய உதவிக் குழுக்களைத்தான் அரசு பயன்படுத்திக்கொள்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தது போல், தெரிவிக்கப் பட்ட குற்றச்சாட்டினால் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ஏதாவது பாதிப்பு ஏற்படுகின்ற வகையில் ஏதாவது ஓர் இடத்தில் நிகழ்ச்சி நடைபெறுமானால், அவர்களுக்கு முழுப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் அரசு அத்துணை நடவடிக்கைகளையும் எடுத்து, தகவல் சொல்லுகின்ற மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குச் சட்டப் பாதுகாப்பு உறுதியாக அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

(முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 69, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு நிதி அமைச்சர்.

[2002 அக்டோபர் 30

69—

## சிறுசேமிப்பு

***16585—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1999-2001ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் சிறுசேமிப்பு மூலம் எவ்வளவு தொகை வசூலிக்கப்பட்டுள்ளது?

(ஆ) நடப்பாண்டில் எவ்வளவு தொகை வசூலிக்க அரசு திட்டம் தீட்டியுள்ளது?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 1999-2000 ஆம் ஆண்டில் ரூ.1604.74 கோடியும், 2000-2001ஆம் ஆண்டில் 1818.04 கோடி ரூபாயும் நிகர வசூல் செய்யப்பட்டுள்ளது.

(ஆ) நடப்பாண்டில் 2,400 கோடி ரூபாய் வசூலிக்க அரசு திட்டம் தீட்டியுள்ளது.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நாட்டிலே மிக முக்கியமான ஒரு நல்ல நாளிலே, சிறு சேமிப்பு நாளிலே இந்தச் சிறுசேமிப்பு கேள்வியை எடுத்துக்கொண்ட சபாநாயகர் அவர்களுக்கு உள்ளபடியே நன்றியைச் சொல்ல நாடு கடமைப்பட்டுள்ளது. இதற்கு வித்தகராக இருந்த நிதி அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். வீட்டுக்கு மட்டுமல்ல, நாட்டுக்கும் சிறுசேமிப்பு எவ்வளவு முக்கியம் என்பதனை எடுத்துச் சொல்லக்கூடிய வகையிலே, சிறப்பான முறையிலே விளம்பரங்களைச் செய்து 1,604 கோடி ரூபாய் 2000ஆம் ஆண்டும், அதன் பிறகு 2 ஆண்டிலே இந்த அரசு எடுத்துக்கொண்ட தீவிர முயற்சியின் காரணமாக 2,400 கோடி ரூபாய் அளவிற்கு இந்தச் சிறுசேமிப்பு சேகரித்திருப்பதாக அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது சொன்னார்கள். அது உள்ளபடியே மிக்க மகிழ்ச்சியை அளிக்கிறது. இன்று நாட்டிலே மிகப்பெரிய பொருளாதாரத் தட்டுப்பாடு இருந்தபோதிலும், இந்தச் சிறுசேமிப்பு 2,400 கோடி ரூபாய்க்கு எட்டியிருக்கிறது. அதே வகையிலே இந்தச் சிறுசேமிப்பை ஊக்குவிக்கக்கூடிய வகையிலே இன்றுகூடப் பிரச்சார வண்டிகளை



2002 அக்டோபர் 30]

அனுப்பப் போவதாகப் பத்திரிக்கையிலே செய்தி வந்திருக்கிறது. இன்னும் கிராமப்புறத்திலே—அமைச்சர் அவர்களுக்கும், சபை நாயகர் அவர்களுக்கும் தெரியும்—சீட்டுப் போட்டு, ஏமாந்து பல வழியிலே இந்த நாட்டிலே படிக்காத ஏழைகள் பல்வேறு துன்பங்களுக்கு ஆட்பட்டு இருக்கிற இந்தக் காலகட்டத்திலே சிறுசேமிப்பு மூலம் வீட்டையும், நாட்டையும் தூக்கி நிறுத்தக்கூடிய இந்தத் திட்டத்தை இன்னும் வலுவான முறையிலே அரசு மேற்கொண்டு, கிட்டத்தட்ட ரூ.2,400 கோடி என்பதனை 4,000 கோடி ரூபாய்க்கு சேகரித்தால் நமக்கு 70 சதவிகிதம் மீறும். இதனால் குடிநீர் வசதி, சாலை வசதி, மருத்துவ வசதி, சுகாதார வசதி மற்றும் கல்வி வசதி போன்ற...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் என்ன செய்ய வேண்டும்?

**திரு. ஐ. கணேசன்:** அனைத்துக் காரியங்களுக்கும் உதவியாக இருக்கக்கூடிய இந்தச் சிறுசேமிப்பின் பிரச்சாரத்தை அரசினர் தீவிரமாக நடத்துவார்களா என்பதனை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ. கணேசன் அவர்களுடைய இந்த ஆலோசனை பாராட்டுதற்குரிய ஆலோசனை. ரூ.4,000 கோடி என்று சிறுசேமிப்பின்மூலம் நிதி வருகிறபோது, அரசுக்குப் பல ஆக்கப் பணிகளைச் செய்வதற்கு இது வழிவகுக்கும் என்பதை அரசு ஏற்கிறது. அந்த அடிப்படையில்தான் சிறுசேமிப்பு இயக்குநரகம், சிறந்த சேமிப்பு நலத் திட்டங்கள் குறித்து செய்தித்தாள், தொலைக்காட்சி மற்றும் வானொலி மூலமாகச் சிறப்பான முறையிலே பிரச்சாரத்தை மேற்கொண்டு, இதை மக்கள் மத்தியிலே தற்போது பாப்பி வருகிறது. மேலும், சிறுசேமிப்பின் நிகர வசூலினை முழுமையாக அடைய, பணி ஓய்வு பெறும் பணியாளர்களின் ஓய்வூதியப் பயனை மாதாந்திர வருவாய்த் திட்டத்தின்கீழ் முதலீடு செய்தல், வரி செலுத்துவோர் பட்டியல் பெற்ற வரிச் சலுகையுடன் இணைந்த சேமிப்பினைத் தரும் சேவைப் பணியைச் செய்யும் தேசிய சேமிப்புப் பத்திரம், பொது வருங்கால வைப்பு நிதித் திட்டத்தில் முதலீடு செய்ய ஊக்குவித்தல், முகவர்களுக்குச் சிறந்த பயிற்சி அளித்தல், பரிசுகள் மற்றும் வெகுமதிகளை இன்னும் அதிகமாக வழங்குதல், பொதுமக்களின் வசதிக்காகத் தொலைபேசியுடன் இணைந்த தகவல் அறியும் திட்டத்தை அனைத்துப் பகுதிகளிலும் நடைமுறைப்படுத்தல் ஆகிய புதிய முயற்சிகளை அரசு தற்போது தொடங்க இருக்கிறது. அதன்மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணியவாறு நம்முடைய

வருவாயினுடைய இலக்கு, இதன்மூலம் கிடைக்கின்ற இந்த வசூலினுடைய இலக்கு, அதிகமாகும் என்ற நம்பிக்கை அரசுக்கு இருக்கிறது.

*(முற்பகல் 10-20)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலங்களிலிருந்து பெறப்படுகின்ற நிதியில் 1.56 சதவிகிதம்தான் மத்திய அரசால் மாநில அரசுக்குக் கொடுக்கப்படுகிறது என்ற யதார்த்த நிலையை நேற்றைக்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இங்கே கூறினார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் வசூல் ஆகின்ற சிறுசேமிப்புத் தொகை, மாநில அரசுக்கு எப்படிப் பயன்பட்டு இருக்கிறது; அந்தச் சிறுசேமிப்புத் தொகை என்னென்ன இனங்களுக்காகத் தமிழக அரசால் செலவிடப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகாறும் சிறுசேமிப்பு வசூலிலே 80 சதவிகிதத்தை மத்திய அரசு மாநில அரசுக்குக் கடனாகத் தந்து கொண்டிருந்தது. தற்போது 100 சதவிகிதமும் கடனாகத் தருகிறார்கள். அப்படிக் கடனாகப் பெறுகின்ற அந்தப் பணத்தைப் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்குப் பயன்படுத்த வேண்டுமென்ற கண்டிப்புடன் அவர்கள் தருகிறார்கள். அனைத்துத் துறை வளர்ச்சித் திட்டங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டு அது பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று உலக சிக்கன நாள். இந்தச் சிக்கன நாளிலே நிதி நெருக்கடியிலே இருக்கக்கூடிய நம்முடைய மாநிலம், சிக்கன நடவடிக்கை மேற்கொள்ளக்கூடிய அதேநேரத்திலே, நாம் நிதி உதவி கேட்டுப் பெறக்கூடிய நிலையிலே இருந்து கொண்டிருக்கிறோம். அந்தவகையிலே இந்தச் சிறுசேமிப்பை மேலும் மக்கள் மத்தியிலே எடுத்துச் சென்று, இன்னும் அதிகமாகச் சேமிக்கும் பழக்கத்தை உருவாக்கக்கூடிய வகையிலே படித்து வேலையில்லாத இளைஞர்களை முகவர்களாகக் கூடுதலாக நியமிப்பதற்கு இன்னும் வழிவகை செய்யவேண்டுமென்ற அந்தக் கருத்தை வலியுறுத்துகிறேன். அதே நேரத்திலே நாம் இந்த ஆண்டின் இலககாக 2400 கோடி ரூபாய் பெறுவதாக நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதைப் பாராட்டக்கூடிய அதேநேரத்திலே, இவ்வளவு பெற்றுத் தரக்கூடிய நம்முடைய அரசுக்கு, grant-ஆகக் கூடுதலான தொகை பெறுவதற்கு மத்திய அரசைக் கோருவதற்கு மாநில அரசு முன்வருமா? இதைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவதற்குக் காரணம், பாட்டாளி மக்கள் கட்சி ஏற்கெனவே இதை வற்புறுத்திக் கொண்டிருக்கிற காரணத்தாலே, மாநில அரசு இதைப் பெறுவதற்கு முன்வருமா? எந்த அளவிலே என்று சொன்னால், கூடுதலாகப் பெறுவதற்கு, ஏதோ குறைந்த அளவிலே என்று இல்லாமல் கிராண்ட்-ஆக முழுமையாகப் பெறுவதற்கு மாநில அரசு முன்வருமா என்பதைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான கேள்வி. மைய அரசைப் பொறுத்தவரைக்கும், National Small Savings Fund என்ற ஒன்றைச் சில ஆண்டுகளுக்கு முன்னால் தொடங்கி, அதிலே அவர்கள் கிட்டத்தட்ட 45 ஆயிரம் கோடி ரூபாய் வைப்பு நிதியாகப் போட்டார்கள். அது இப்போது கிட்டத்தட்ட 1 இலட்சம் கோடியைத் தாண்டியிருக்கிறது என்று தெரிகிறது. அதிலே இருக்கின்ற அந்தப் பணத்தை அவர்கள் securities-ல் invest செய்து, அதன்மூலமாக வருகிற பணத்தைக் கொண்டு டெபாசிட்தாரர்களுக்கு அவர்கள் பணத்தைத் தந்து விடுகிறார்கள். இந்த நிலையில் நாம் 2400 கோடி ரூபாயை மாநிலத்திலேயிருந்து வசூல் செய்கிறபோது, அந்த 2400 கோடி ரூபாயைக் கடனாகத் தருவதற்குப் பதிலாக, grant-ஆகத் தருவார்களேயானால், மாநிலங்களுடைய சுமை குறைந்துவிடும் என்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை மிகவும் பாராட்டக்கூடிய ஒன்று. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், தற்போதைய முதலமைச்சர்கள் மாநாட்டில் இதே கருத்தை வலியுறுத்தியிருக்கிறார்கள். இந்தக் கருத்துக்கு முக்கியத்துவம் தந்து, டெல்லியிலே நீங்களும், இந்தக் கோரிக்கையை எழுப்பி இருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். மாநில அரசினுடைய நிதித் தட்டுப்பாட்டை நீக்க பாட்டாளி மக்கள் கட்சி எடுக்கின்ற முயற்சிக்கு அரசின் சார்பிலே பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுசேமிப்புத் துறையில் முதலீடு செய்யும் பணத்திற்கு எவ்வளவு வட்டி வழங்கப்படுகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்கவேண்டும்.

[2002 அக்டோபர் 30

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 9 சதவிகிதம் வட்டி இதற்கு வழங்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுடைய நலனைப் பாதுகாக்கக்கூடிய முறையிலே உள்ள திட்டங்களுக்கு இந்தச் சிறுசேமிப்பு நிதி செலவு செய்யப்படுமா, குறிப்பாக மருத்துவமனைகள் அமைப்பதற்கு, அதேபோன்று சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கு எல்லாம் இந்த நிதி பயன்படுத்தப்படுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமா அவர்கள் கூறியதைப்போல, (சிரிப்பு) அதுபோன்ற துறைகளுக்கும் இது பயன்படுத்தப்பட்டு வருகிறது. தொடர்ந்து அது பயன்படுத்தப்பட்டு வரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்திலே இருக்கக்கூடிய நடுத்தர வர்க்கத்தினர், பொதுவாக தங்களுடைய சிறுசேமிப்பை—Unregistered Chit என்று பலபேர் நடத்திக் கொண்டிருக்கிற காரணத்தினால், அதை 'Finance' என்று சிலபேர் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்; கிராமப்புறங்களிலே, நகரப் பகுதிகளிலேயெல்லாம், அந்த Unregistered Finance கம்பெனிகளிலே போட்டு ஏமாந்துவிடுகிறார்கள். ஆகவே, காவல் துறையை வைத்து நீங்கள், Unregistered Chit நடத்துகிறவர்களையும், Finance நடத்துகிறவர்களையும் முழுமையாகக் கைது செய்து உள்ளே போட்டு, அதைத் தடுத்து நிறுத்துவீர்கள் என்று சொன்னால், இப்போது வரக்கூடிய சிறுசேமிப்பினுடைய தொகை, நிச்சயமாக மூன்று மடங்கு பெருகும் என்கிற காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், காவல் துறை மூலம் அந்த Unregistered Chitகாரர்களை ஒடுக்குவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2002 அக்டோபர் 30]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஓராண்டு காலமாக, Unregistered Chits and Money Lending மீது கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களிட்ட ஆணைக்கேற்ப, காவல் துறை கடுமையான நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. அதன் காரணமாகத்தான் தற்போது மக்கள் சிறுசேமிப்பிலே அதிகப்படியான deposit போட முன்வந்திருக்கிறார்கள். இந்த முயற்சியில் அரசு மிகத் தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுசேமிப்பை ஊக்குவிக்கின்ற வகையிலே, சிறுசேமிப்புதாரர்களுக்கு அதிகமான வட்டிதர, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மைய அரசுதான் 11 சதவிகிதமாக இருந்த அந்தச் சிறுசேமிப்பு வட்டியை, 9 சதவிகிதமாகக் குறைத்துவிட்டது. அவர்கள் மைய அரசிடம் வற்புறுத்தி, அதை உயர்த்தித் தந்தால், நமக்குச் சிறுசேமிப்பு மூலமாக இன்னும் அதிகமான deposit வரக்கூடிய வாய்ப்பு உருவாகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அதை டெல்லியிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். உறுப்பினருடைய உறுதுணையும் இதற்குத் தேவை என்பதைக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹக்கீம்.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இது தொடர்பாக ஒரு சந்தேகத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்க வேண்டுமென்று எதிர்பார்த்தேன். அதை, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ. கணேசன் அவர்கள் திரும்பக் கேட்டுவிட்டார்கள். 9 சதவிகிதம் என்ற இந்த வட்டி விகிதம், குறைவான வட்டி விகிதம் என்று நினைத்துக் கொண்டு Finance கம்பெனிகாரர்கள் வட்டி அதிகமாகத் தருகிறார்கள் என்று ஆசைப்பட்டுக் கொண்டு, சாதாரண ஏழை எளிய மக்கள், கொஞ்சம் நஞ்சம் இருக்கின்ற பணத்தை அவர்களிடம் போடுகிறார்கள். இதனால் கோடிக்கணக்கான பணம் 'cheating' நடந்து கொண்டிருக்கிறது. அதனால், 9 சதவிகிதம்

என்பதனை இன்னும் கொஞ்சம் கூடுதலாகத் தந்து, அவர்களை attract செய்து, ஈர்க்கக்கூடிய வகையில், தாங்கள் சிபாரிசு செய்து மேல் நடவடிக்கை எடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுசேமிப்புக்காக இருந்த வட்டி விகிதத்தை மைய அரசு, புள்ளி ஐந்து சதவிகிதம் குறைத்ததை எதிர்த்து, அதை மீண்டும் உயர்த்த வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்கு எழுதியிருக்கிறார்கள்; வற்புறுத்தியுள்ளார்கள். மிகவும் ஈர்ப்பு சக்தியுள்ள பரிசுத் திட்டங்களை அறிவித்து, அதன்மூலம் மக்கள், இந்தத் துறையில் டெபாசிட் செய்யக்கூடிய ஒரு நிலையை உருவாக்க அரசு சிறப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச். ராஜா.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுசேமிப்பிலே வட்டி விகிதம், புள்ளி ஐந்து சதவிகிதம் குறைக்கப்பட்டிருக்கிற காரணத்தினாலே, சென்ற ஆண்டிலே இருந்து, இந்த ஆண்டு சிறுசேமிப்பிலே எவ்வளவு நமக்குக் குறைவு ஏற்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை உங்கள் மூலமாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைவு ஏற்படவில்லை. சிறப்பு நடவடிக்கைகள் எடுத்து, மக்களை ஈர்க்கக்கூடிய விளம்பரங்களைச் செய்த காரணத்தினால், அதனுடைய வருவாய் சென்ற ஆண்டைவிட அதிகரித்து இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுசேமிப்பை, நாம் அதிக அளவிலே கொண்டுவந்தால், அதில் அதிக அளவு தமிழக அரசுக்குக் கடன் கிடைக்கும் என்று நிதி அமைச்சர் சொன்னார்கள். இப்போது பொதுப் பணித் துறை மற்றும் உள்ளாட்சித் துறை போன்ற பல்வேறு துறைகளிலே நடைபெறுகிற டெண்டர்களிலே, டெபாசிட்டுகள் பெறப்படுகின்றன. அந்த டெபாசிட்டுகள் எல்லாம், சிறுசேமிப்புப் பத்திரங்களாகக் கண்டிப்பாக இருக்க வேண்டும் என்று உத்தரவிட்டால், அதன்மூலம் தமிழகத்திலே சிறுசேமிப்பினுடைய தொகை உயரக்கூடும். அதைக் கொண்டுவர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனையை மைய அரசுக்கு நாங்கள் தெரிவிப்போம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பதிலுரையிலே, நடப்பாண்டில், 2400 கோடி ரூபாய் வசூலாகும் என்று கூறியுள்ளார்கள். அதாவது இந்தியாவிலேயே சேமிக்கின்ற எண்ணம் உள்ள ஒரு மாநிலம் தமிழகம்தான்; தமிழக மக்கள்தான். இந்த அடிப்படையில் பார்க்கின்றபோது இந்த ஆண்டு வசூலாகின்ற தொகையில் மத்திய அரசிடமிருந்து, மத்திய தொகுப்பிலிருந்து அல்லது மத்திய அரசின் இந்தத் துறையிலிருந்து கூடுதலாக நிதியைப் பெற்று தமிழகத்தினுடைய வளர்ச்சிப் பணிகளிலே—வளர்ச்சிப் பணிகள் என்றால், infra-structure பணிகளிலே—முதலீடு செய்வதற்கு மாநில அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன். குறிப்பாக, இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்கள் எல்லாம் நம்மைக் காட்டிலும் மிகக் குறைவாகத்தான் சிறுசேமிப்புகளிலே வசூல் சாதனை ஏற்படுத்தினார்கள் என்று கேள்விப்பட்டிருக்கின்றேன்; ஆகவே, இவற்றையெல்லாம் கணக்கிலே வைத்து இந்த ஆண்டு கூடுதலாக, மிக அதிக அளவில் நிதியைப் பெறுகின்ற முயற்சியை மாநில அரசு எடுத்துள்ளதா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான பதிலை ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பிய வினாக்களுக்கு அளித்த விடையிலேயே நான் தந்திருக்கிறேன். மாநில அரசைப் பொறுத்தவரைக்கும் மைய அரசு இந்தப் பணத்தைக் கடனாக மாநில அரசுக்குத் தருகிறது; தருகின்றபோது வளர்ச்சித் திட்டங்களுக்குத்தான் இது ஒதுக்கப்பட வேண்டுமென்ற நிபந்தனையோடு தருகிறது. அடிப்படை வசதிகள் உள்ளிட்ட அனைத்து வளர்ச்சித் திட்டங்களுக்குத்தான் பகிர்ந்தளிக்கப்படுகிறது. இந்த வருவாயைப் பெருக்குவதற்கு நான் ஏற்கெனவே கூறியதுபோல பல்வேறு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 70, திரு. கே.சி. கருப்பணன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

70—

### சுற்றுலாத் தலம்

***7634—திரு. கே.சி. கருப்பணன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி பவானி, சங்கமேஸ்வரர் கோயிலுக்குப் பல்வேறு மாநில மக்கள் வருவதால், இத்தலத்தைச் சுற்றுலாத் தலமாக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்நிதியாண்டிலேயே எடுத்துக் கொள்ளப்படுமா?

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி வட்டம் மற்றும் நகரில் உள்ள அருள்மிகு சங்கமேஸ்வரர் திருக்கோயிலை 'சுற்றுலாத் தலமாக்கும்' கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.சி. கருப்பணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கோயில் என்பது பக்தியை வெளிப்படுத்தும் இடம் என்பதோடு, சமூகப் பொறுப்புகளை நிறைவேற்றும் இடமும்கூட என்பதை நிரூபித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சிந்தனையில் உதித்த அகில உலகத்தில் எந்த ஒரு அரசியல் தலைவரும் செய்ய முடியாத, குறிப்பாகச் சொல்லப்போனால், இந்தியாவில் எந்த ஒரு மாநில முதலமைச்சரும் செய்யாத ஒரு மாபெரும் சாதனையாக 144 திருக்கோயில்களில் திருக்கோயில் அன்னதானத் திட்டத்தை நடத்தியும், 1008 ஏழை மக்களுக்கு இலவசத் திருமணத்தை நடத்தியும், பவானி அருள்மிகு சங்கமேஸ்வரர் திருகோயிலை 144 அன்னதான கோயில்களில் ஒரு கோயிலாக அறிவித்தும் மற்றும் சுற்றுலாத் துறையின் மூலம் கடந்த ஆண்டு 37 இலட்சம் ஒதுக்கி மராமத்துப் பணிகளைச் செய்ய உத்தரவிட்ட சரித்திரம் படைத்துக் கொண்டிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது பவானி தொகுதி மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த



நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன். அதேபோல், இப்போது இந்தியாவில் அனைத்து மாநிலங்களிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் இத்திருக்கோயிலுக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, ஐயப்பன் மலைக்குச் செல்கின்ற அனைத்து பக்தர்களும் அந்தக் கோயிலுக்கு வந்து தரிசித்துச் செல்கிறார்கள். அது காவிரி ஆறும் பவானி ஆறும் இணைகின்ற ஒரு முக்கூடலாகும். இந்தக் கோயிலினுடைய வருமானம் வருடம் ஒன்றுக்கு 50 இலட்சம் ரூபாய் வரையில் இருக்கின்றது. ஆகவே, இந்தத் திருக்கோயிலில் வாகனங்கள் நிறுத்துவதற்கு மிகவும் சிரமமாகவும், வரும் பக்தர்கள் தங்குவதற்கு இடவசதி இல்லாமலும் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இந்தக் கஷ்டத்தைப் போக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாநில மற்றும் மைய சுற்றுலாத் துறை மூலம் நிதி ஒதுக்க சிபாரிசு செய்யுமாறு அன்புடன் கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானி உட்பட 38 இடங்கள் புனிதத் தலங்களாக அறிவிக்கப்பட்டு, அப்புனிதத் தலங்களில் அடிப்படை வசதிகள் உட்பட பல்வேறு வசதிகள் செய்யப்பட வேண்டுமென அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், பவானி கூடுதுறையில் அடிப்படை வசதிகள், கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றை மேம்படுத்திட ரூ.39 இலட்சம் செலவில் உரிய பணிகளை மேற்கொள்ள ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவரால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, மேற்படி பணிகளை ஈரோடு, பொதுப்பணித் துறை கட்டடக் கோட்டம், செயற் பொறியாளர் அலுவலகம் மூலம் வேலைகள் மேற்கொள்ளப்பட உள்ளன என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 71, திரு. எம். சுப்பையா பாண்டியன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

71—

### ஆரம்ப சுகாதார நிலையம்

***3984—திரு. எம். சுப்பையா பாண்டியன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2002 அக்டோபர் 30

கடையநல்லூர் தொகுதி, ஆனைகுளம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியம், ஆனைகுளம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் எதுவும் இல்லை.

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்தில் மருந்தும் இல்லை; மருத்துவர்களும் இல்லை என்ற நிலையிலிருந்த சூழ்நிலையில் இதயதெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அவற்றையெல்லாம் போக்கி, பொதுமக்களுக்குத் தாராளமாக மருந்துகளையும் மருத்துவர்களையும் வழங்கினார்கள். அப்படி வழங்கிய டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு முதற்கண் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடையநல்லூர் தொகுதி, கடையநல்லூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட ஆனைகுளம் கிராமத்திற்கு ஆரம்ப சுகாதார நிலையம் கட்டிக் கொடுத்தால், ஆனைகுளம் ஊராட்சிக்கு உட்பட்ட ஆனைகுளம், அம்மையாபுரம், அய்யாபுரம், அருணாசலபுரம் மற்றும் குணையநேரி, சுப்பையாபுரம், பூப்பாண்டியாபுரம், ரெட்டைகுளம் ஆகிய கிராமங்களில் உள்ள சுமார் 10,000 பேர்கள் பயன் அடைவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு 30 படுக்கை வசதிகள் செய்து கொடுக்கும் இந்த நிலையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இப்போது கட்டித் தர இயலாது என்று கூறி இருக்கிறார்கள். நாங்கள் எல்லாம், சக சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் செல்லும்போது எங்களை அன்போடு வரவழைத்து, எந்தக் காரியமாக இருந்தாலும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆணைக்கிணங்க செய்து கொடுக்கின்ற மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இதனை மறுபரிசீலனை செய்து அங்கு ஒரு துணைச் சுகாதார மையம் கட்டிக் கொடுக்க முன்வருவார்களா என்பதைச் சட்டப் பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பகுதிகளுக்கு



2002 அக்டோபர் 30]

கூடுதலான மருத்துவ சேவையை வழங்குகிற வகையில்தான் நம்முடைய மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், கடையநல்லூரில் உள்ள வட்டம்சாரா மருத்துவமனைக்கு நபார்டு வங்கியினுடைய நிதி உதவியோடு ஒரு தாலுக்கா மருத்துவமனையில் என்னென்ன வசதிகள் இருக்கவேண்டுமோ அனைத்து வசதிகளையும் செய்து கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 72, திரு. தி. வேல் முருகன், மாண்புமிகு கூட்டுறவு, உணவு நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

**72—**

**மண்ணெண்ணெய் பங்க்**

***18599—திரு. தி. வேல் முருகன்:**

மாண்புமிகு கூட்டுறவு உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரில் திருவதிகையை மையமாகக் கொண்டு ஒரு கிளை மண்ணெண்ணெய் பங்க் அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி-பண்ருட்டி நகரில் திருவதிகையை மையமாகக்கொண்டு ஒரு கிளை மண்ணெண்ணெய் பங்க் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரத்தில் 45,000-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் வசித்து வருகிறார்கள். பண்ருட்டி நகரின் மையப் பகுதியில் மட்டும்—ஒரே ஒரு இடத்தில் மட்டும்—இப்போது மண்ணெண்ணெய்

[2002 அக்டோபர் 30

பங்க் அமைத்து அங்கு மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது. அப்படி வழங்கப்படுகின்றபோது, அந்த நகரிலே வாழ்கின்ற 45,000-க்கும் மேற்பட்ட மக்கள் அந்த மண்ணெண்ணெய்க் கிடங்கிற்குச் சென்று—மறுநாள் மண்ணெண்ணெய் ஊற்றுகிறார்கள் என்று சொன்னால், முதல் நாள் இரவே சென்று—அவர்கள் காத்துக் கிடக்கின்றார்கள். ஆயிரக்கணக்கான மக்கள் கியூவில் நின்று இருக்கிறார்கள். ஒவ்வொரு முறை மண்ணெண்ணெய் வழங்கப்படும்போதும், காவல்துறை வரவழைக்கப்படுகின்றது. பல்வேறு அடிதடி பிரச்சினைகள் எல்லாம் ஏற்படுகின்றன. காவல் நிலையத்தில்கூட வழக்குப் பதிவு செய்யப்படுகிறது. ஒரு மாதத்திற்கு 42,000 லிட்டர் அங்கு மண்ணெண்ணெய் வழங்கப்படுகின்றது. அப்படி 42,000 லிட்டர் ஒரு சில குறிப்பிட்ட நாட்களில் மட்டும்தான் நம்முடைய அரசால் அங்கு வழங்கப்படுகின்றது. அதனால் அந்த மையப்பகுதியில் பெரும்பாலான மக்கள் பலன் அடைகின்ற வகையிலும், யாருக்கும் சிரமம் ஏற்படாத வகையிலும், அரசு செயல்படுத்துகின்ற திட்டங்கள் எளிதில் மக்களிடத்திலே சென்று அடைவதற்கு ஏதுவாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மீண்டும் பரிசீலனை செய்து அப்பகுதியில் ஒரு மண்ணெண்ணெய் பங்க் அமைப்பதற்கு வழிவகை காணுவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டு இருக்கின்ற இந்தப் பகுதியிலே 2684 குடும்ப அட்டைகள்தான் உள்ளன. இதிலே மண்ணெண்ணெய் வழங்கவேண்டும் என்று சொன்னால் 13,627 லிட்டர் மண்ணெண்ணெய்தான் வழங்கமுடியும். ஆகவே 13,627 லிட்டருக்காக ஒரு மண்ணெண்ணெய் பங்க் அமைப்பது என்பது அரசாங்கத்தினுடைய விதிக்குட்பட்டு வரவில்லை. 50,000 லிட்டர் வழங்கக்கூடிய அளவுக்கு இருந்தால் மட்டுமே புதிய மண்ணெண்ணெய் பங்க் அமைக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டு இருக்கின்ற இந்தப் பகுதி ஏற்கெனவே பண்ருட்டியில் இருக்கிற அந்தப் பகுதியோடு இணைத்து 44,000 லிட்டர் வழங்கக்கூடிய அளவிற்கு மட்டும்தான் அந்த பங்க் இருக்கிறது. ஆகவே அதுவே விதிமுறைகளுக்கு உட்படாமல் ஏற்கெனவே நஷ்டத்தில் இயங்கிக்கொண்டு இருக்கிறது. மேலும் ஒரு பங்க் அமைக்கவேண்டுமென்று உறுப்பினர் கேட்பது மேலும் மிகப்பெரிய நஷ்டத்தை உருவாக்கும் என்பதையும் ஆகவே அதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கின்ற



2002 அக்டோபர் 30]

பண்ருட்டி பங்க் மூலம் மண்ணெண்ணெய் வழங்கக்கூடியதிலே இருக்கிற இடர்பாடுகளை, குறைபாடுகளைப் போக்குகிற வகையிலே இந்த அரசு உரிய அறிவுரைகளை அந்த பங்க்-க்கு வழங்கும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 73, திருமதி கே. பவானி கருணாகரன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

73—

### கோட்டாட்சியர் அலுவலகம்

***1752—திருமதி கே. பவானி கருணாகரன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் கோட்டாட்சியர் அலுவலகம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரக்கோணம் கோட்டாட்சியர் அலுவலகம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழாது.

**திருமதி கே. பவானி கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் தமிழகத்தின் விடிவெள்ளி, இருண்டு கிடந்த பெண்கள் சமுதாயத்தைத் தட்டி எழுப்பி, நான் இருக்கிறேன் உங்கள் வாழ்வில் ஒளி ஏற்றுவதற்கு என்று சொல்லாமல் செயலில் பெண்களுக்குப் பல திட்டங்களை வாரி வழங்கிய எங்கள் அன்னை, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவின் கமல மலர் பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி என் வினாவினைத் தொடுக்கின்றேன். அரக்கோணம் தொகுதி, வட ஆற்காடு மாவட்டத்தின் கடைசியாக உள்ளதால் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்,

கோட்டாட்சியர் அலுவலகம், வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் போக வேண்டும் என்றால் எல்லாமே வேலூர், ராணிப்பேட்டை, தலா 80 கிலோ மீட்டர், 50 கிலோ மீட்டர் தூரம் போக வேண்டியுள்ளது. வறட்சி நிறைந்த தொகுதியான அரக்கோணத்தில் எந்தவித அலுவலகமும் இல்லாமல் மக்கள் மிகவும் கஷ்டத்திற்கு உள்ளாகிறார்கள். தங்களுடைய குறைகளை எடுத்துச் சொல்வதற்கு கோட்டாட்சியர் அலுவலகம் செல்லக்கூட வழி இல்லாமல், இன்றும் பலர் இருக்கும் இந்த நிலையில், எங்கள் தொகுதி மக்களுக்கு இந்த ஆண்டு இல்லாவிட்டாலும், வரும் நிதியாண்டிலாவது கோட்டாட்சியர் அலுவலகம் அரக்கோணத்தில் அமைத்துத் தருவாரா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து மாண்புமிகு பேரவைத் தலைவரின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்தில் மொத்தம் 3 கோட்டங்கள் இருக்கின்றன; ராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர். ராணிப்பேட்டையின்கீழ் 3 வட்டங்கள் இருக்கின்றன; ஆற்காடு, வாலாஜா, அரக்கோணம். வேலூரின்கீழ் வேலூர், குடியாத்தம் வட்டங்கள் இருக்கின்றன. திருப்பத்தூரின்கீழ் காட்பாடி, திருப்பத்தூர், வாணியம்பாடி; ஆக வேலூர் மாவட்டத்தில் மொத்தம் 8 வட்டங்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது அரக்கோணத்திலே வருவாய்க் கோட்டம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அங்கே கிராம மக்களின் தொகை மிகவும் குறைவாக இருக்கிறது. மேலும் ஒரு கோட்டத்தை உருவாக்க வேண்டுமென்றால் கிராம மக்கள் தொகை குறைந்தது 7 இலட்சத்திலிருந்து 9 இலட்சமாக இருக்க வேண்டும். எனவே, புதிய கோட்டம் அமைக்கும் திட்டம் தற்சமயம் இல்லை என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 74, திரு. பி.ஜி. இராஜேந்திரன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**74—**

**வட்டாட்சியர் அலுவலகம்**

***8210—திரு. பி.ஜி. இராஜேந்திரன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



ஆலங்குளம் வட்டாட்சியர் அலுவலகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆலங்குளம் வட்டாட்சியர் அலுவலகம் கட்ட அரசு ஆவன செய்யுமா என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிறார். அதற்கு பதில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி.ஜி. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குளம், தொகுதியின் தலைநகரமாகும். மொத்தம் இரண்டு வட்டாட்சியர் அலுவலகங்கள்தான் உள்ளன. இரண்டும் வாடகைக் கட்டடத்தில்தான் இயங்கி வருகின்றன. ஆகவே, ஆலங்குளத்திற்கும் வி.கே. புதூருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, வரும் நிதியாண்டிலாவது சொந்தக் கட்டடம் கட்டித் தருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே மொத்தம் 206 வட்டாட்சியர் அலுவலகங்கள் உள்ளன. அதிலே 182 அலுவலகங்கள் அரசுக் கட்டடங்களில் உள்ளன. போடிநாயக்கனூர், தேனி, வேப்பந்தட்டை, பூந்தமல்லி, பள்ளிப்பட்டு மற்றும் கிருஷ்ணராயபுரம் ஆகியவற்றுக்குக் கட்டடம் கட்டுவதற்காக இப்போது பரிசீலனையில் உள்ளது. இருந்தபோதிலும் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 75, திரு. ப. பொன்னம்பலம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**75—**

**சமுதாயக் கிணறு**

***7882—திரு. ப. பொன்னம்பலம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* ஒருபோகச் சாகுபடி விவசாயிகளுக்கு மழை எதிர்பார்த்து நாற்றங்கால் பாவ, சமுதாயக் கிணறு வெட்டும் திட்டம் இருக்கிறதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ)* ஒருபோகச் சாகுபடி விவசாயிகளுக்கு மழை எதிர்பார்த்து நாற்றங்கால் பாவ, சமுதாயக் கிணறு வெட்டும் திட்டம் ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*(ஆ)* வினா எழவில்லை.

**திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைகை மற்றும் முல்லை ஆற்றுப் பாசன நிலமுடைய விவசாயிகளுக்கு மழை இல்லாத காலங்களில், அதாவது பருவமழை இல்லாத காரணத்தால் காவிரி ஆற்றுப் பாசன விவசாயிகளைக் காட்டிலும் கஷ்டப்படுகிறார்கள். எனவே, இருபோக, ஒருபோகச் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஜீவன்தாரா திட்டத்தின்கீழ் சமுதாயக் கிணறு வெட்டித் தரும் திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அரசு மறுபரிசீலனை செய்யுமா? காவிரி பாசன ஏழை விவசாயிகளுக்கு தீபாவளிப் பரிசு கொடுத்ததைப் போல வைகை, முல்லை ஆற்றுப் பாசன ஏழை விவசாயிகளுக்கும் விவசாயக் கூலிகளுக்கும் தீபாவளிப் பரிசை இதயம் காத்த இதய தெய்வத்தின் அரசு (மணியடிக்கப்பெற்றது) தருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயக் கிணறுகள் அமைக்கும் பணி, வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தின்கீழ் மானாவாரி நிலப் பகுதிகளில் 1995 ஆம் ஆண்டு வரை மேற்கொள்ளப்பட்டு வந்தது. மத்திய அரசினுடைய புதிய வழிகாட்டு நெறிமுறைகளின்படி வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம் தற்போது ஊராட்சி வளர்ச்சி முகமையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சமுதாயக் கிணறு அமைக்கும் பணி இத்திட்டத்திலிருந்து நீக்கப்பட்டு தற்போது நடைமுறையில் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-45)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 76, திரு. டி. மணி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.



**76—**

## மிளகுக் கன்றுகள்

***15221—திரு. டி. மணி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், களியல் கிராமம், சிறோபாயிண்ட் பகுதியிலுள்ள நல்லமிளகுச் செடிகளை உற்பத்தி செய்யும் பண்ணையில் கடந்த 1999-2000, 2000-2001 ஆம் ஆண்டுகளில் எவ்வளவு கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன?

*(ஆ)* நல்லமிளகுச் செடிகளுக்கு வரும் நோயைத் தடுக்க வேளாண்மைத் துறையிலிருந்து எந்த வகையான மருந்துகள் வழங்கப்பட்டு வருகின்றன?

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ)* மற்றும் *(ஆ)* கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், களியல் கிராமம், சிறோபாயிண்ட் பகுதியிலுள்ள நல்லமிளகுச் செடிகளை உற்பத்தி செய்யும் பண்ணையில் 1999-2000 ஆம் ஆண்டில் 3.12 இலட்சம் கன்றுகளும், 2000-2001 ஆம் ஆண்டில் 3.00 இலட்சம் கன்றுகளும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. நல்லமிளகுச் செடிகளுக்கு வரும் நோயைத் தடுக்க தோட்டக்கலைத் துறையினரால், தாமிர ஆக்ஸிகுளோரைடு என்ற மருந்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி, இருக்கையில் இல்லை. திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நல்லமிளகு பயிரிடப்படுகிற அந்தப் பண்ணையில் தற்போது அந்தச் செடிகளுக்கு சில நோய்கள் வந்து அவை பாதிக்கப்பட்டிருக்கின்றன என்ற தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, தரமான செடிகள் அங்கே வளர்க்கப்பட்டு, அவற்றை மேலும் அபிவிருத்திப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிளகுக் கன்றுகளைத் தாக்கும் நோய்களுக்கு காப்பர் ஆக்ஸிகுளோரைடு மருந்து விநியோகிக்கப்படுகிறது. அங்கே இருக்கிற விரிவாக்க அலுவலர்களிடம் கேட்டால் அவர்கள் அதைப் பார்த்துத் தேவையான மருந்துகளை அளிப்பார்கள் என்பதை இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உற்பத்தியாகின்ற மிளகு என்ன விலைக்குத் தனியாருக்குக் கொடுக்கப்படுகிறது? பொதுவாக, நமது தமிழகத்தில் பல்வேறு வனப் பகுதிகளிலே அரசுக்குச் சொந்தமான நிலங்கள் தரிசாக இருக்கின்றன. அப்படிப்பட்ட பகுதிகளில் விலையுயர்ந்த ஜாதிக்காய், கிராம்பு போன்ற செடிகளையும் பயிரிட்டு அதன்மூலம் அரசுக்கும் வருமானத்தை ஈட்டித் தரும் தரமான வாசனைப் பொருட்களை உற்பத்தி செய்வதற்காக அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ளுமா? இந்த ஆண்டே அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா என்பதை உங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராம்பு, ஜாதிக்காய் போன்ற வாசனைப் பொருட்கள் தட்பவெப்ப நிலைக்கேற்ப பயிரிடப்படுகிற பயிர்களாகும். இப்படி பயிரிடப்படுகிற இந்தப் பயிர்கள் தரமாகப் பயிரிடப்பட வேண்டுமென்பதற்காக அரசு பல்வேறுபட்ட நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. உலகத் தரத்தோடு போட்டியிடுகிற அளவுக்கு நம்முடைய விவசாயிகள் தரமான கன்றுகளை நட வேண்டுமென்பதற்கான அறிவுரைகள் வழங்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 77, திரு. அ. பாப்பா சுந்தரம், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

77—

### வைப்பீட்டுத் தொகை

***7334—திரு. அ. பாப்பா சுந்தரம்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





பெண் சிசுக்கள் பிறந்தால் அரசு வைப்பீட்டுத் தொகை வழங்குவது போல் ஊனமுற்ற பெண் சிசுக்கள் பிறந்தால் சிறப்பு வைப்பீட்டுத் தொகை அளிக்கப்படுமா?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 1992 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் இரண்டு பெண் குழந்தைகள், ஒரு குடும்பத்தில் பிறந்தால் திட்ட விதிகளுக்கு உட்பட்டு அவ்விரு பெண் குழந்தைகளுக்கு அரசு அளித்துள்ள வைப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், பிறந்த பெண் குழந்தை நல்ல உடல் நலத்துடன் உள்ளதா, ஊனமுற்ற குழந்தையா என்று அறியப்படுவதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. பாப்பா சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டுவந்த திட்டத்தின்கீழ் இந்தப் பெண் குழந்தைக்கான வைப்பீட்டுத் தொகையினால் மக்கள் தொகை கட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன், பெண் சிசுக் கொலையும் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆனால், அதே நேரத்திலே ஊனமுற்ற சில குழந்தைகள் சிசுவிலேயே கொலை செய்யப்படுவதாக அறிகிறோம். எனவே, அந்த ஊனமுற்ற குழந்தைகளைப் பாதுகாக்கின்ற வகையிலே, எப்படி இரண்டு பெண் குழந்தைகளைப் பெற்று எடுத்தால் அவர்களுக்கு வைப்பீட்டுத் தொகை வைக்கப்படுகிறதோ, அதைப்போல ஊனமுற்ற பெண் குழந்தைகளைப் பெற்றெடுத்தால் அவர்களுக்கும் வைப்பீட்டுத் தொகை வைக்கப்படுகின்ற திட்டம் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-50

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படித் தனியாக ஊனமுற்ற பெண் குழந்தைகள் என்று பிரித்துப் பார்ப்பதில்லை. அதற்குப் பதிலாக ஊனமுற்றோர் நலத் துறையின் சார்பில், ஊனமுற்ற யாராவது ஒருவரை குறிப்பாகக் கண் பார்வை உள்ள நபர்கள் கண் பார்வை இல்லாத ஒருவரைத் திருமணம் செய்து கொண்டால் திருமண உதவித் தொகையாக ரூ.10,000 வழங்கப்படுகிறது. அதிலே, ரூ.7,000 சேமிப்புப் பத்திரம்,

ரூ.3,000 ரொக்கம் வழங்கப்படுகிறது. கை, கால் ஊனமுற்றோரைத் திருமணம் செய்துகொள்ளும் ஊனமில்லாதவர்களுக்கு உதவித் தொகையாக ரூ.7,000 வழங்கப்படுகிறது. அதிலே ரூ.5,000 சேமிப்புப் பத்திரம்; ரூ.2,000 ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது. காதுகேளாதோரைத் திருமணம் செய்துகொள்ளும் சாதாரண நபர்களுக்கு திருமண ஊக்கத் தொகையாக ரூ.7,000 வழங்கப்படுகிறது. அதிலே ரூ.5,000 சேமிப்புப் பத்திரம், ரூ.2,000 ரொக்கத் தொகையாக வழங்கப்படுகிறது. ஆக, தனியாக ஊனமுற்ற பெண் குழந்தைகள் என்று பிரித்துப் பார்ப்பதில்லை. வைப்பீட்டுத் தொகை, முறையாகப் பெண் குழந்தைகளை திட்ட விதிகளுக்கு உட்பட்டு பதிவு செய்தால், வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம் என்பது பெண் இனத்திற்கே பெருமை சேர்க்கின்ற ஓர் அருமையான திட்டம். ஆனாலும்கூட இந்தத் திட்டமானது ஏட்டளவில், எழுத்தளவில் இருக்கிறதேயொழிய இன்னமும் யதார்த்த வாழ்க்கையிலே செயலாக்கம் பெறவில்லை என்பது தான் ஏழையெளிய மக்களின் ஆதங்கம். ஏன்? எல்லோருடைய ஆதங்கமும்கூட. ஏனென்று கேட்டால், இந்தத் திட்டத்தின்கீழ் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப் படிவங்கள் அதிகாரிகள் மட்டத்திலே பெறப்படுவதில்லை; மறுக்கப்படுகின்றன. சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரைக் கடிதம் கொடுத்தால் அதனைப் பெற்றுக்கொண்டு அதற்காக ஒரு டோக்கன் கொடுக்கிறார்கள். அந்த டோக்கனைப் பெற்றுக்கொண்டு அவர்கள் நாட்கணக்கிலே, மாதக் கணக்கிலே அதிகாரிகளிடம் நடந்து கொண்டிருக்கிறார்கள். ஆனாலும்கூட, அந்தத் திட்டத்தின் பலன் அவர்களை வந்து சேரவில்லை. இன்னும் சில அதிகாரிகள் இந்தத் திட்டத்திற்கு நிதியொதுக்கம் செய்யப்படவில்லை என்ற தவறான தகவலைக் கூடத் தந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் கூடுதல் செலவினத்திற்கான 2002-2003 நிதியொதுக்கீட்டைப் பார்க்கும்போது இந்தத் திட்டத்திற்கு நிதியொதுக்கீடு செய்யப்படவில்லை. அன்னபூர்ண திட்டத்திற்குத்தான் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆகவே, இந்தத் திட்டத்திற்குப் போதுமான நிதியொதுக்கீடு ஏற்கெனவே செய்யப்பட்டுள்ளது என்பதுதான் பொருள். அதிகாரிகளின் தரப்பிலே இப்படிப்பட்ட அலட்சியப் போக்கு எதனால் உள்ளது என்று தெரியவில்லை. சாமி வரம் கொடுத்தாலும், பூசாரி வரம் கொடுக்க





மாட்டார் என்று ஒரு வழக்குச் சொல் உண்டு. ஆகவே, இந்த அருமையான திட்டத்தின் பலன்கள் எதனால் ஏழையெளிய மக்களுக்கு மறுக்கப்படுகின்றன? எதனால் இந்த அதிகாரிகள் மட்டத்திலே இப்படிப்பட்ட அலட்சியப் போக்கு இருக்கிறது? இதனை அரசு அறியுமா? இதனைக் களைய அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் நிதியொதுக்கீடு செய்து இருக்கிறது என்பது உண்மை. ஆனால், ஒரு மாவட்டத்தில் இத்தனை மனுக்கள் பெறப்பட்டு தகுதியுள்ள மனுக்களுக்கு, இத்தனை நபர்களுக்குத் தரவேண்டும் என்கிற இலக்கு நிர்ணயம் செய்திருக்கிறோம். இந்தத் திட்டம் அருமையான திட்டம் என்று தெரிந்ததற்குப் பிறகு பொதுமக்களிடமிருந்து அதிகமான விண்ணப்பம் வருகின்றது. அந்தந்த மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிற நிதியொதுக்கீட்டை மையமாக வைத்துத்தான் மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு நிதி வழங்கப்படுகிறது. அதனால், வரப்பெறுகின்ற மனுக்கள் அத்தனையுமே இந்த நிதியொதுக்கீடு பெறப்பட்டு முடிந்ததற்குப் பிறகு காலதாமதமாக வருவதால் அடுத்த நிதியொதுக்கீடு அந்த மாவட்டத்திற்கு வருகின்றபோது, இந்த மனுக்களுக்கு முன்னுரிமை கொடுத்து வழங்கப்பட்டு வருகிறதே தவிர, மாண்புமிகு உறுப்பினர், அவர்கள் சொல்வதைப் போல் இந்தத் திட்டத்தின் மூலமாக எந்தக் குறைபாடும் ஏழையெளிய மக்களுக்கு இருப்பதாக அரசினுடைய கவனத்திற்கு வரவில்லை. அப்படி அதிகாரிகள் தவறு செய்தார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எங்கள் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார்களேயானால் நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 40 வயதுக்குக் கீழுள்ள பெண்கள் இரண்டு பெண் குழந்தைகளைப் பெற்றால், அதற்குப் பிறகு அறுவைச் சிகிச்சை செய்துகொண்டால், அவர்கள் குடும்ப வருமானம் ஆயிரம் ரூபாய்க்குக் கீழ் இருந்தால் இந்த அரசு சலுகைகளை அறிவித்துள்ளது. ஒரே சமயத்தில், எஞ்சியுள்ள தகுதிகள் உள்ள ஒரு பெண்ணுக்கு, 2 பெண் குழந்தைகள் ஒரே நேரத்தில் இரட்டைப் பெண் குழந்தைகளாக பிறந்து விட்டால், இந்தச் சலுகை அவர்களுக்குக் கிடைக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[2002 அக்டோபர் 30

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மா அவர்கள் முதல் பிரசவத்தில் 2 பெண் குழந்தைகள் பெற்றாலும் அல்லது 2-வது பிரசவத்தில் 2 பெண் குழந்தைகள் பெற்றாலும்கூட அவர்களை இந்தத் திட்டத்திலே ஏற்றுக்கொண்டு இந்தத் திட்டத்தின் சலுகைகள் வழங்கப்படும் என்பதை அம்மா அவர்கள் ஏற்கெனவே அறிவித்திருக்கிறார்கள் என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 78, திரு. என்.ஆர். ரங்கராஜன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**78—**

**போக்குவரத்து அலுவலகம்**

***9848—திரு. என்.ஆர். ரங்கராஜன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டையில் மண்டலப் போக்குவரத்து அலுவலகக் கிளை தொடங்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் தொடங்கப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பட்டுக்கோட்டையில் புதிய பகுதிநேர மண்டலப் போக்குவரத்துக் கழக அலுவலகம் தொடங்க தற்போது வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-55

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை தொகுதியைப் பொறுத்தவரையிலே, சுமார் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தனியார் வாகனங்கள், சுமார் 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இரு சக்கர வாகனங்கள், தனியார் பேருந்துகள், லாரிகள் மற்றும் மினி வேன்கள் கிட்டத்தட்ட 1500-க்கும் மேற்பட்டவை அந்தப் பகுதியில் ஓடிக்கொண்டு இருக்கின்றன.



2002 அக்டோபர் 30]

அதுபோலவே ஓட்டுநர் உரிமம் பெற்றவர்கள், தொகுதியைப் பொறுத்தவரையிலே கிட்டத்தட்ட 50 ஆயிரம் பேருக்கு மேல் உள்ளார்கள்; இவர்கள் ஒவ்வொரு முறையும் பதிவுக்கோ, வாகனங்களைப் புதுப்பித்து லைசென்ஸ் பெறுவதற்கோ தஞ்சைக்குச் செல்ல வேண்டியுள்ளது. பட்டுக்கோட்டையிலே இருந்து தஞ்சைக்குப் போகவும், வரவும் கிட்டத்தட்ட 200 கிலோமீட்டர் வருகிறது. எனவே, இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு, மரியாதைக்குரிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பட்டுக்கோட்டை பகுதி மக்களுடைய கோரிக்கையான இந்த R.T.O.. அலுவலகத்தை வரக்கூடிய காலங்களிலாவது தொடங்க முன்வருவாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டையில் புதிய பகுதி அலுவலகம் அமைப்பது தொடர்பான கருத்துரு பகுதி 2 திட்டம் 2001-2002-ல் பரிசீலிக்கப்பட்டது. அரசின் நிதிநிலைமையைக் கருத்தில்கொண்டு தற்போது புதிய அலுவலகங்கள் கட்டுவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. எனவே, இந்தப் புதிய அலுவலகம் அமைப்பது தொடர்பாக தற்போது வாய்ப்பு ஏற்படவில்லை. இருந்தபோதும், தற்போது வாய்ப்பு இல்லை என்றுதான் குறிப்பிட்டிருக்கிறோமேதவிர, எப்போதும் வாய்ப்பு இல்லை என்று நாங்கள் சொல்லவில்லை. புரட்சித் தலைவியினுடைய அரசு நிச்சயமாக நிதிநிலைமை சீரடைந்த பின்பு மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையைக் கனிவுடன் பரிசீலிக்கும் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண். 79, திரு. சி. சிவசாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**79—**

**கட்டடம்**

***19915—திரு. சி. சிவசாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தமாகக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருப்பூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட 80 சென்ட் நிலம், திருப்பூர் வீடு கட்டும் சங்கத்தினரால் தானமாக வழங்கப்பட்டு போக்குவரத்துத் துறைக்கு நில மாற்றம் செய்யப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு பெறப்பட்டவுடன் கட்டடம் கட்டும் பணி தொடங்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரம் ஓர் ஏற்றுமதி நிறைந்த தொழில் நகரம் ஆகும். அங்கே நாள்தோறும் எண்ணற்ற புதிய, புதிய வாகனங்கள் எல்லாம் அதிகப்படியாகப் பதிவு செய்யப்படுகின்றன. இதனால் போக்குவரத்துத் துறைக்கு மாபெரும் நிதி வருமானம் வ்ருகிறது. தமிழகத்திலே இருக்கின்ற ஏனைய பகுதிகளைக் காட்டிலும் கூடுதலான வருமானத்தைப் பெற்றுத்தரக்கூடிய போக்குவரத்து அலுவலகம் திருப்பூர் நகரிலே இருக்கக்கூடிய அலுவலகம் ஆகும். அங்கே இருக்கக்கூடிய அந்தப் போக்குவரத்து அலுவலகம் காதி போர்டுக்குச் சொந்தமான இடத்தில் வாடகை கொடுத்து இயங்கி வருகிறது. அவர்கள் அந்த அலுவலகத்தைக் காலி செய்ய வேண்டுமென்று விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்காக நாங்கள், கூட்டுறவுத் துறையிலே இருந்து, மாற்று இடம்கூடத் தேர்வு செய்து கொடுத்திருக்கிறோம். மாண்புமிகு அம்மா அவர்கள் திருப்பூர் நகருக்கு வருகை தந்தபோதுகூட அந்த இடத்திலே அடிக்கல் நாட்டிவிட வேண்டுமென்று நாங்கள் கூடுதல் முயற்சி எடுத்தோம். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதைப் பரிசீலிப்பதாகத் தெரிவித்திருந்தார்கள். எனவே, தற்போது அந்த காதி போர்டு அலுவலகத்திலே இருக்கின்ற அந்தப் போக்குவரத்து அலுவலகம் காலி செய்யப்பட வேண்டிய நிலையில் இருக்கின்ற காரணத்தால் போர்க்கால அடிப்படையில் விரைவாக அதற்குப் புதிய கட்டடம் கட்டித் தருவதற்கு அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நிதி நிலைமைக்கு ஏற்ப இதனைச் சிந்திக்கும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 80, திரு. எஸ்.எம். பாலன், மாண்புமிகு மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

**80—**

**துணை மின் நிலையம்**

***6681—திரு. எஸ்.எம். பாலன்:**

மாண்புமிகு மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி, வாளாடி பகுதியில் புதியதாக 110/11 கி.வா. துணை மின் நிலையம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி, வாளாடி பகுதியில் 110/11 கி.வா. துணை மின் நிலையம் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதைச் சொல்லிக்கொண்டு, வருகின்ற பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் அது அமைத்துக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ்.எம். பாலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய லால்குடி தொகுதியில் துணை மின் நிலையம் அமைக்க அனுமதி அளித்த கடையேழு வள்ளல்களின் மறுபிறவி மாண்புமிகு தமிழக முதல்வர், இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி, என்னுடைய லால்குடி தொகுதி மக்களின் சார்பாகவும், எனது சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 81, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் வீட்டுவசதித் துறை அமைச்சர்.

[2002 அக்டோபர் 30

**81—**

**குடியிருப்புகள்**

***1110—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் வீட்டுவசதி நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்பட்டு விற்பனையாகாமல் உள்ள குடியிருப்புகளின் எண்ணிக்கை எத்தனை?

(ஆ) அதன் மதிப்பு எவ்வளவு?

(இ) அவற்றை விற்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வீட்டுவசதி வாரியத்தால் 1.10.2002 தேதி வரை விற்கப்படாத வீடுகள் 7,033. இதில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் பங்கு 4,907. அரசினுடைய பங்கு 2,126.

(ஆ) மொத்தமாக விற்கப்படாத வீடுகள் மதிப்பு ரூ. 314 கோடியே 20 இலட்சம்.

(இ) மாண்புமிகு அம்மா அவர்களின் அரசில் இக்குடியிருப்புகளை விரைவாக விற்பதற்கு ஒரு உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டு அக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் பல்வேறு சலுகைகளை அளித்தும் சில நிபந்தனைகளை நீக்கியும் அரசு பங்கீட்டின்கீழ் வீடுகள், மனைகள் ஒதுக்கீடு பெறுவதற்குத் தகுதியுடைய, ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்ட பிரிவினரைத்தவிர கூடுதல் பிரிவினருக்குச் சேர்த்துக் குடியிருப்புகளை விரைவாக விற்பனை செய்வதற்கு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.



2002 அக்டோபர் 30]

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இப்போது வீட்டுவசதி வாரியம் கட்டியிருக்கக் கூடிய 314 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள வீடுகள் இன்னும் விற்கப்படாமல் இருந்து கொண்டிருப்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். இதிலே மதுரையிலே மட்டும் கிட்டத்தட்ட 1,000 வீடுகள் இன்னும் விற்கப்படாமல் இருக்கின்றன. அதேபோல, திருப்பூர்; இன்னும் பல பகுதிகளிலே ஒரு wrong selection of the site என்ற வகையில், பொதுவாக அந்த இடத்தை எங்கே தேர்வு செய்யக் கூடாதோ அந்த இடத்தைப் போய்த் தேர்வு செய்து வீடுகளைக் கட்டியிருக்கிறார்கள். மதுரையில் கட்டி இருக்கக்கூடிய வீடுகள் எல்லாம் இப்பொழுதே விரிசல் கண்டு, ஒழுகிக் கொண்டு புதர்கள் மண்டிக் கிடந்து இருக்கக்கூடிய ஒரு நிலையை நாங்கள் எல்லாம் பார்த்தோம். அந்த அளவிற்கு மோசமாக இருந்தால், யாரும் வந்து அதை வாங்கவே மாட்டார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த விரிசல் கண்டிருக்கக்கூடிய வீடுகளை எல்லாம் கூடிய விரைவிலே ரிப்பேர் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்போது குழுவைப் போட்டு இருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். அதன் விலை கொஞ்சம் அதிகமாக இருக்கிறது. இப்போது Real Estate எல்லாம் ரொம்ப படுத்துப்போய் இருக்கிற காரணத்தினால், வெளி மார்க்கெட்டில் நல்ல standard-ஆன வீடுகளே குறைந்த விலைக்குக் கிடைக்கிற காரணத்தால் இந்த Housing Board வீடுகளின் விலையைக் குறைக்க வேண்டும். நீங்கள் இன்னும் 14 சதவிகிதம் வட்டியை வருடா வருடம், ஏற்றி ஏற்றிப் போட்டு, இப்போது அதிகமான விலையைப் போட்டிருக்கிற காரணத்தினால்தான் அதிகமாக விற்காமல் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அரசு ஒரு முடிவை எடுத்து, விலையைக் கொஞ்சம் குறைத்தாவது இன்னும் ஓராண்டு காலத்திற்குள் இந்த வீடுகளை எல்லாம் விற்பதற்கு நடவடிக்கை எடுக்குமா? அதேபோல Government quota அதாவது Minister quota என்று இருக்கக்கூடிய வீடுகள் நிறைய அப்படியே தேக்கத்தில் இருக்கின்றன. அவற்றையெல்லாம் உடனே clear பண்ணுவதற்கு ஒரு மாதம் இலக்கு வையுங்கள். Within a month whether it could be cleared and all the houses will be disposed...

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்மட்டக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் 30.6.2000-க்குள் கட்டி முடிக்கப்பட்ட, 30.12.2000-குள் விற்பனை ஆகாமல் உள்ள வீடுகளுக்கு அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு, கட்டி

[2002 அக்டோபர் 30

முடிக்கப்பட்ட தேதி முதல் அது விற்கப்படும் நாள் வரை வட்டி முதலாக்கம் செய்வது நீக்கப்பட்டுள்ளது. மேலும், மதுரைப் பகுதிக்கும் இந்தச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. உடனடியாக அரசு பங்கீட்டு வீடுகளுக்கும் நாங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் மேற்பார்வைப் பொறியாளர்கள் தலைமையில் விற்பனைக் குழுக்கள் அமைத்துள்ளோம். அங்கு வாங்குவோருக்கு அரசுப் பங்கீட்டை உடனடியாக நாங்கள் அரசின் மூலமாகத் தந்துவிடுகிறோம் என்று குறிப்பாணைகளை, விவரங்களை அவர்கள் மூலம் தெரிவித்துள்ளோம். அந்த அடிப்படையில் கட்டுமானக் கழகங்கள் மூலம் பிரிவு நிறுவனங்கள் நடத்தும் பொருட்காட்சியிலும் இந்த வாரியம் மூலமாகப் பங்கேற்பதற்கு மேற்பார்வைப் பொறியாளர்களை நாங்கள் அறிவுறுத்தி அனுப்பியுள்ளோம். அந்த அடிப்படையிலே உடனடியாக அத்தனை அரசு குடியிருப்பு வீடுகளையும் வாரியக் குடியிருப்பு வீடுகளையும் விற்பனை செய்வதற்கு அரசு துரித நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Housing Board வீடு என்று சொன்னாலே அது கொஞ்சம் தரம் குறைந்திருக்கிறது என்கின்ற ஒரு நிலையில், ஒரு அபாயச் சங்கு போல யாருமே அதன்கிட்டேயே போக மறுக்கிறார்கள். ஆகவே, இனி அரசு வீடு கட்டுவதில்லை என்று முடிவு எடுத்து Plot-களாக விற்றீர்கள் என்று சொன்னால், நிறைய விற்கும். ஆகவே, இனி வீடு கட்டுவதை முழுமையாக நீங்கள் நிறுத்திவிட்டு Plot-களை மட்டுமே போட்டு விற்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் முதல்வர் அவர்களுடைய அரசு விற்றபின் வீடுகளைக் கட்டும் திட்டத்திற்கு முடிவு செய்யப்பட்டு இருக்கிறது. முன்போல் இனி வீடுகளைக் கட்டுவதில்லை என்று முடிவு எடுத்துள்ளது. அதோடு மட்டுமல்லாமல் விற்றபின் கட்டுதல் என்ற திட்டத்தை நாங்கள் வாரியத்தின் மூலமாக அமல்படுத்தியுள்ளோம். 25 சதவிகிதம் வீடு வேண்டுவோரிடமிருந்து வாங்கிக் கொண்டு, அவர்களுக்கு வீடுகளைக் கட்டித் தரும் திட்டத்தை நாங்கள் வேலூரில்கூடத் தற்சமயம் செயல்படுத்தியுள்ளோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இனி, மேம்படுத்தப்பட்ட மனைகளையும், வீடுகளையும் வாரியத்தின் மூலமாக மிகப் பெரிய முயற்சிகளை எடுத்து உடனடியாக விற்பதற்கு இந்த அரசு முன்வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2002 அக்டோபர் 30]

முற்பகல் 11-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. உசேன். (குறுக்கீடு) போதும், போதும். திரு. ஞானசேகரன் நீங்கள் இரண்டு கேள்விகள் கேட்டாகிவிட்டது. விடுங்கள். (மணியடிக்கப்பெற்றது) திரு. உசேன் கேளுங்கள்.

**திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் கேட்கட்டும்.

**திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே வீட்டுவசதி வாரியம் மூலமாகக் கட்டப்பட்டுள்ள வீடுகள் விற்பனையாகாமல் 314 கோடியே 20 இலட்சம் ரூபாய் நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இதுபோல அரசுக்கு வருமானம் வராமல் இருக்கக்கூடிய நிலையின் காரணமாகத் தான் இப்போது அரசு ஊழியர்கள் அல்லது பொது மக்கள் குடியிருக்கக்கூடிய வீட்டுவசதி வாரிய வீடுகளுக்கு மிகக் கடுமையாக வாடகை ஏற்றப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல் 900 ரூபாய் கட்டக்கூடிய அந்த வீடுகளுக்கு 6,500 ரூபாய் வாடகை என்றும், 40,500 ரூபாய் முன்பணம் செலுத்தவேண்டும் என்றெல்லாம் அறிவிப்புத் தந்திருக்கிறார்கள். அதன் அடிப்படையில் தமிழகத்திலுள்ள அனைத்து வீட்டுவசதி வாரியம் மூலமாக இருக்கக்கூடிய வாடகைதாரர்கள் மிகவும் துன்பத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். அதில் காரணம் காட்டப்பட்டிருப்பது; சொத்து வரி அதிகமாகச் செலுத்த வேண்டியிருக்கிறது என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் பார்த்தால் சொத்து வரியைக் கணக்கிட்டுப் பார்க்கும்போது மாதத்திற்கு ஒரு ரூபாய் கூட வராது என்ற அளவில்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. உசேன், மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லாதது. தனியாகக் கேள்வி போடுங்கள் இதற்கு.

**திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** முடித்துவிடுகிறேன். மிகவும் துன்பத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கக்கூடிய அந்த வாடகைதாரர்களுக்குச் சலுகைகள் அளிக்கக்கூடிய வகையில் ஏற்கெனவே இருந்த வாடகையையே அறிவிக்க வேண்டும் என்பதை நான் தெரிவித்துக் கொண்டு அப்படிப்பட்ட துன்பத்திற்கு ஆளாகியிருக்கக்கூடிய பொதுமக்களுக்கு நலன் பயக்கும் வகையில் இந்த வாடகை உயர்வை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. உசேன் அவர்கள் இதற்குத் தனிக் கேள்வி போட்டால் பதில் அளிப்பேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை எல்லீஸ் நகர் பகுதியில் இந்த வீட்டுவசதி வாரியக் குடியிருப்பில் குடியிருக்கக்கூடிய மக்கள் அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட தொகையைச் செலுத்திய பிறகும் இன்னும் பத்திரம் கிடைக்கவில்லை என்கிற ஒரு தொடர்ச்சியான குற்றச்சாட்டு இருக்கிறது. இதுகுறித்து அரசு விரைந்து நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லீஸ் நகர் பகுதியிலே பத்திரம் வழங்கப்படவில்லை என்று சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். முழுமையாகப் பணம் செலுத்திய நபர்களுக்கு நாங்கள் பத்திரம் வழங்கிக்கொண்டு வருகிறோம். மேலும் பணம் செலுத்தாத நபர்கள் உடனடியாகப் பணத்தைச் செலுத்தி பத்திரத்தை வாங்கிக்கொள்ளும்படி தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் முழு விளக்கத்தைத் தந்தார்கள், plot தான் விற்கிறோம். வீடு கட்டுவதில்லை என்று. ஆனால் நீங்கள் plot-ஐக் கொடுத்துவிட்டாலும்கூட அந்த plot-ஐ யாருக்கு allot செய்கிறீர்களோ அவர்களிடம் பணத்தை வாங்கி நீங்களே கட்டித் தரக்கூடிய ஒரு திட்டத்தைத்தான் இப்போது நீங்கள் வேலூரிலேகூட அமல்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள். அதைக்கூட விட்டுவிட்டு plot ** என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது....

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள்**

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





என்று கூறியது அவை மரபிற்கு மாறானது. அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்படி அமங்கலமான வார்த்தைகளை எல்லாம் பயன்படுத்துவது நல்லதல்ல. அவைக் குறிப்பிலிருந்து அது நீக்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 82, டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி, மாண்புமிகு உள்ளாட்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்.

**82—**

### ஜீவன்தாரா கிணறுகள்

***4744—டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:**

மாண்புமிகு உள்ளாட்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதியில் ஜீவன்தாரா கிணறுகள் திட்டத்தை மீண்டும் செயல்படுத்த வாய்ப்புள்ளதா?

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சி மற்றும் வீட்டுவசதி நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஜீவன்தாரா கிணறு திட்டம், மத்திய அரசின் திட்டமாகும். இத்திட்டம் 1999-2000 ஆம் ஆண்டு முதல் நிறுத்தப்பட்டு, பொன் விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் ஜீவன்தாரா திட்டத்தினை மீண்டும் செயல்படுத்த வாய்ப்பில்லை.

**டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எண்ணியது எண்ணியாங்கு எய்துவர்" என்பதற்கு இலக்கணமாக காவிரித் தண்ணீரைத் தமிழக காவிரிப் படுகை விவசாயப் பெருமக்களுக்கு தீபாவளி இனிப்பாக வழங்கி வாடிய விவசாயப் பெருமக்களின் வாழ்வில் ஒளி ஏற்றி கூடுதல் இனிப்பாகவும், பத்து இலட்சம் ஏழை எளிய குடும்பங்களுக்கு தீபாவளி பரிசுப் பை ஒன்றையும் அறிவித்து தமிழகம் தத்தளிக்கும் கடுமையான

நிதிநெருக்கடியிலும் 21 கோடி ரூபாய் ஒதுக்கிய "வான் பொய்ப்பினும் தான் பொய்யா" வள்ளலின் வாரிசே, எங்களின் மாண்புமிகு அன்னையே; பயன்பெறும் புதுக்கோட்டை மாவட்ட மக்கள் சார்பாக கோடானுகோடி நன்றியைத் தங்கள் பொற்பாதங்களில் சமர்ப்பித்துக்கொண்டு, ஏழையெளிய மக்களின், விவசாய மக்களின், தாழ்த்தப்பட்ட மக்களின் ஏந்தலாகத் தொடர்ந்து விளங்கக்கூடிய அம்மா அவர்களின் நல்லாட்சியில் மத்திய அரசு அறிவித்த ஜீவன்தாரா கிணறு திட்டத்தினை மீண்டும் தமிழகத்திற்குக் கொண்டுவரக் கனிவோடு அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11.10

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜீவன்தாரா கிணறு திட்டம் பொன் விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தோடு இணைக்கப்பட்டுள்ளது. அந்தத் திட்டம் சுய நிதி உதவிக் குழுக்களை அமைத்து, விவசாயம் சார்ந்த தொழில்களைத் தெரிவு செய்துகொண்டு குழு சார்பு முறையில் பாசன வசதியின் பொருட்டு, கிணறுகளை வெட்டிக்கொள்ள மானியத்துடன்—50 சதவீதம் மானியமும், 50 சதவீதம் வங்கிக் கடனும்—உதவி பெற வாய்ப்புள்ளது. எனவே, குளத்தூர் வட்டாரத்தில் பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தில் கிணறு வெட்டிக்கொள்ள மானியம் எதுவும் அனுமதிக்கப்படவில்லை. ஜீவன்தாரா கிணறு திட்டம் பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தோடு இணைக்கப்பட்டுள்ளதால் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 83, திருமதி செல்வி முருகேசன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**83—**

### கால்நடை கிளை மருத்துவமனை

***19957—திருமதி செல்வி முருகேசன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காங்கேயம் தொகுதி, சென்னிமலை ஒன்றியத்தில் முருங்கத்தொழுவில் கால்நடை கிளை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?



**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**திருமதி செல்வி முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறுவை, சம்பா சாகுபடி இன்றி இன்னலுறும் காவிரிப் படுகை விவசாயிகளின் குடும்பங்களில் தீபாவளி தீபம் ஏற்றி, தீபாவளி சிறக்க 10 இலட்சம் விவசாயத் தொழிலாளத் தோழர்களுக்கு ரூபாய் 210 மதிப்புள்ள தீபாவளிப் பரிசு வழங்க இருக்கும் கருணை வள்ளலே, எங்கள் அன்னையே, ஏழையெளிய மக்களின் நலன் காத்திட, அரிசி விலை உயராமல் தடுத்திட, அரிசிக்கு விதித்த வரியினை அடியோடு இரத்து செய்து மக்களைக் காத்திட்ட காவல் தெய்வமே, இதயம் காப்போம் திட்டம் கொணர்ந்து, ஏழைகளின் இதயம் காத்த இதய தெய்வமே, தங்களின் பொற்பாதங்களை வணங்கி நன்றி மலர்களைக் காணிக்கையாக்கிக் கொள்கிறேன்.

எனது காங்கேயம் தொகுதி சென்னிமலை ஒன்றியத்தில் உள்ள முருங்கத்தொழுவு பஞ்சாயத்து கிட்டத்தட்ட 10 கிராமங்களை உள்ளடக்கியது. இங்கே கால்நடை வளர்ப்பும், விவசாயமுமே பிரதானத் தொழில்களாக இருந்து வருகின்றன. இங்கு இருக்கும் பால் சொசைட்டிகள் எல்லாம் நல்லமுறையில் நடந்து வருகின்றன. அப்படிப்பட்ட பஞ்சாயத்தில் கால்நடை மருத்துவமனை என்பது கே.ஜி. வலசில்தான், அதாவது 5 கிலோமீட்டருக்கு அப்பால்தான் உள்ளது. ஆகையால், இங்கு இருக்கும் கால்நடைகளை அங்கே எடுத்துச் செல்வதற்கு மிகவும் சிரமமான சூழ்நிலை உள்ளது. ஆகையினால், வரும் நிதியாண்டிலாவது கால்நடைக் கிளை மருத்துவமனை அமைத்துத்தர அரசு முன்வருமா என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கேயம் தொகுதி, சென்னிமலை ஒன்றியம், முருங்கத்தொழுவு கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுள்ளார்கள். சென்னிமலை ஒன்றியத்தில் சென்னிமலை, வெள்ளோடு ஆகிய இடங்களில் கால்நடை மருந்தகங்கள் உள்ளன. சென்னியன் கிரிவலசு, ஈங்கூர், கன்னடக்கவுண்டன்வலசு, புதுப்பாளையம், சிறுவாஞ்சி, ஓயப்பாடி, அனுப்பப்பள்ளி, முத்தையாபாளையம், பெரியவேடுபாளையம், பெருந்துறை ஆர்.எஸ். ஆகிய 10 இடங்களில் கால்நடைக் கிளை நிலையங்கள் செயல்பட்டு

வருகின்றன. மேலும் புதிய கால்நடைக் கிளை நிலையங்கள் தொடங்குவதற்குத் தற்காலிகமாகத் தடையுள்ளது. மேற்படி தடை நீங்கியதும் நிதிநிலைக்கேற்ப, மாண்புமிகு உறுப்பினர் கோரியுள்ளபடி முருங்கத்தொழுவு கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் ஒன்று அமைப்பது பற்றி ஆய்வு செய்து, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு முடிவு செய்யும் என்பதை இந்த மாமன்றத்தின் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 84, திரு. கே. ஆறுமுகம், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**84—**

**மாணவர் விடுதி**

***4905—திரு. கே. ஆறுமுகம்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பின்தங்கிய மாணவர்கள் தங்கும் விடுதியில் அங்குள்ள விடுதிக் காப்பாளர்களே மாணவர்களுக்குப் பயிற்றாசிரியர்களாகவும் பணியாற்ற வேண்டும் என்ற ஆணையைப் பிறப்பிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மாணவ, மாணவிகள் தங்கும் விடுதிகளில் அங்குள்ள காப்பாளர்களே மாணவர்களுக்கு டியூட்டர்களாகப் பணியாற்ற வேண்டும் என்று ஏற்கெனவே ஆணையிடப்பட்டுள்ளது. துறையின் கையேட்டில் பகுதி 2-இல் பிற்சேர்க்கையில் விதி 6-ன்படி விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவிகள் தங்கள் பாடங்களை ஒழுங்குமுறைப்படுத்தி நல்லமுறையில் பயின்று வருகின்றனரா மற்றும் தேர்வில் நல்ல மதிப்பெண்கள் பெறுகின்றனரா என்பதைக் காப்பாளர்கள்/காப்பாளினிகள் கண்காணிக்க வேண்டும். மேலும், விதி 20-ன்படி, மாணவ மாணவிகள் சிறந்த முறையில் கல்வி பயில, காப்பாளர்கள்/காப்பாளினிகள் பயிற்சி அளித்து உதவ வேண்டும். மேலும், பதிவேடு ஒன்றைப் பராமரித்து, அதில் மாணவ மாணவிகள் மதிப்பெண்களைப் பதிவு செய்து அவர்களது கல்வி முன்னேற்றத்தைக் கண்காணிப்பது காப்பாளர்கள்/காப்பாளினிகளின் முக்கியப் பணிகள் ஆகும் என்று ஏற்கெனவே ஆணையிடப்பட்டுள்ளது. எனவே பிற்படுத்தப்பட்டோர்,





மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் நல மாணவர்கள் தங்கும் விடுதியில் அங்குள்ள காப்பாளர்கள்/காப்பாளினிகள் மாணவர்களுக்கு டியூட்டர்களாகவும் பணியாற்ற வேண்டும் என்று மீண்டும் புதிதாக ஆணை பிறப்பிக்கத் தேவையில்லை என்று இம்மாமன்றத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*முற்பகல் 11-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது அரசாங்கம் அறிவித்திருக்கிற அறிவிப்புக்கிணங்க அங்கே ஒவ்வொரு மாணவர் விடுதியிலும் படிக்கின்ற மாணவர்களை ஊக்குவிக்கிற பயிற்சியாளர்களுக்கு, சிறப்பாகப் பணியாற்றுகிற அந்த விடுதிக்கு, ஊக்கத் தொகையும் பரிசும் வழங்கப்படுமா? அதுமட்டுமல்லாமல், பல்வேறு மாணவர் விடுதியிலே, இப்பொழுது அங்கே இருக்கிற பயிற்சியாளர்களும் சமையலர்களும், தங்குவது என்பதிலே குறைபாடு இருக்கிறது. அவற்றையெல்லாம் களைய அரசு முன்வருமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது அரசு ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்கே சிரமமாக இருக்கிறது. இந்த நிலையில் ஊக்கத்தொகை எங்கிருந்து கொடுப்பது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களே ஆலோசனை கூறவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது மாணவர் விடுதியிலே படிக்கிற மாணவ மாணவிகள் மிகவும் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறவர்கள். நாம் அவர்களை மேலும் ஊக்கப்படுத்த வேண்டும். இப்பொழுது பணக்காரர்கள் தங்களது பிள்ளைகளைக் காலை எழுந்ததும் டியூஷனுக்கு அனுப்புகிறார்கள். ஆனால் அந்த விடுதியில் இருக்கின்ற மாணவ மாணவிகள் சரியாகப் படிக்க வேண்டும். அவர்களும் டாக்டர், இன்ஜினியர் போன்ற மேற்படிப்புக்கு வர வேண்டும். ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற தேர்வுக்கு வரவேண்டும் என்று சொன்னால், அவர்களை அந்த விடுதியிலே உள்ள காப்பாளர்கள் மிகவும் ஊக்குவித்தால்தான் மேலுக்கு வரமுடியும். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும் இதற்கு உதவ வேண்டும். ஒரு சிறிய நிதிதான் இதற்குச் செலவாகும். அப்படி ஊக்குவித்தால் மிகச் சிறந்த மாணவ, மாணவிகளை நாம் உருவாக்க முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆறுமுகம், ஆசிரியர்கள் மாணவர்களை ஊக்குவிக்க வேண்டுமேயொழிய, ஆசிரியர்களை நாம் எப்படி ஊக்குவிப்பது? வினா எண் 85, திரு. நா. சந்திரமோகன், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

**85—**

**மணி மண்டபம்**

***5925—திரு. நா. சந்திரமோகன்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி கோவிந்தராஜனுக்கு சீர்காழி நகரில் மணி மண்டபம் கட்டுவதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருஞானசம்பந்தருக்கு ஞானப்பால் கொடுத்த வரலாற்றுச் சிறப்புமிக்க சீர்காழி தொகுதியில் பிறந்த திரைப்படப் பின்னணிப் பாடகர், கலைமாமணி சீர்காழி கோவிந்தராஜன் அவர்கள். தமிழிசையை மூச்சாகக் கொண்டவர்கள். கர்நாடக சங்கீதத்தை மரபு முறை வழுவாமல் மிகச் சிறப்பாகப் பாடியவர்; எண்ணற்ற பக்திப் பாடல்களைப் பாடியவர்; திரை இசையில் தனக்கே உரித்தான தனித் தன்மையோடு ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடி, கம்பீர கான மணி என்ற பட்டம் பெற்றவர். தமிழக அரசின் கலைமாமணி விருதும், மத்திய அரசின் பத்மஸ்ரீ விருதும், தமிழக அரசின் சிறந்த பின்னணிப் பாடகர் என்ற விருதும், சங்கீத நாடக அகாடமி விருதும், இதுபோன்ற பல விருதுகளைப் பெற்றவர். ஆலயங்கள் கட்டுவதற்கு இசை நிகழ்ச்சிகளை நடத்தியவர். ஏழை மக்கள் கல்வி பயில உதவிகள் வழங்கியவர். தமிழக மக்களின் காவல் தெய்வமாகவும். உச்ச நீதிமன்றத்தின் மூலம் காவிரித் தண்ணீரைப்



பெற்றுத் தந்து தமிழக மக்களின், விவசாயிகளின் வயிற்றில் பாலை வார்த்த காவிரித் தாய் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் அம்மா அவர்கள் நடித்த 'முத்துச் சிப்பி' என்ற படத்தில் "தொட்ட இடம் துலங்க வரும் தாய்க்குலமே வருக" என்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க பாடலையும், மறைந்த மாமேதை, பொன்மனச் செம்மல் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் நடித்த 'இதயக்கனி' என்ற திரைப்படத்தில், "நீங்கள் நல்லா இருக்கணும் நாடு முன்னேற, இந்த நாட்டிலுள்ள ஏழைகளின் வாழ்வு முன்னேற" என்ற பாடலையும், "வெற்றியின் நாளை சரித்திரம் சொல்லும்" என்ற பாடலையும் பாடி, இப்படி எண்ணற்ற பாடல்கள் மூலம் ஏழைகளின் முன்னேற்றத்திற்காகப் புரட்சித் தலைவர் பாடுபட்டதைப் பாடலாகப் பாடிக் காட்டியவர் பத்மஸ்ரீ டாக்டர் சீர்காழி கோவிந்தராஜன் அவர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீர்காழியைப் பற்றித் தெரியும். என்ன செய்ய வேண்டும்?

*முற்பகல் 11-20*

**திரு. நா. சந்திரமோகன்:** தமிழக திரைப்படத் துறையினருக்கு எண்ணற்ற பல நன்மைகளைச் செய்துவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே திரைப்படப் பின்னணிப் பாடகர் கலைமாமணி டாக்டர் சீர்காழி கோவிந்தராஜன் அவர்களை நினைவுகூரும் வகையில், வருகின்ற நிதி ஆண்டிலாவது ஒரு மணிமண்டபம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா என்று பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டின் சுதந்திரத்திற்காகவும், சமுதாய முன்னேற்றத்திற்காகவும் அயராது பாடுபட்ட தலைவர்களுடைய நினைவுகளைப் போற்றிச் சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கிற மாண்புமிகு அம்மாவினுடைய அரசு நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 86, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்.

[2002 அக்டோபர் 30

**86—**

## பயிற்சி நிலையம்

***13182—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, தரமணியிலுள்ள இந்திய ஆடை அலங்காரப் பயிற்சி நிலையத்தின் பணி முடிவடைந்துவிட்டதா?

(ஆ) ஆம் எனில், எப்போது திறக்கப்படும்?

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தரமணியிலுள்ள இந்திய ஆடை அலங்காரப் பயிற்சி நிலையத்தினுடைய கட்டடப் பணிகள் நிறைவடைந்து, திறக்கும் நிலையிலே உள்ளது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அது திறக்கும் நிலையிலே உள்ளது என்று தெரிவித்திருக்கிறார்கள். அதைத் திறப்பதற்கு நானும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் கலந்துகொண்டு ஏற்கெனவே திறந்து வைத்துவிட்டோம். எனவே, திறக்கும் நிலையிலே இல்லை, திறக்கப்பட்டுவிட்டது. அதற்குப் பிறகு அந்தப் பயிற்சி நிலையத்திலே சேருவதற்கு இப்போது மாணவர்களுக்கு என்ன தகுதிகள் நிர்ணயித்திருக்கிறோம், அப்படி எத்தனை மாணவர்களுக்கு ஆண்டுக்கு பயிற்சி அளிக்க இருக்கிறோம், அப்படிப் பயிற்சி அளிக்கப்படுகிற மாணவர்களுக்கு அரசு உதவித் தொகை ஏதாவது வழங்குகிறதா, அப்படியானால், எவ்வளவு உதவித் தொகை வழங்கப்படுகிறது, அதுமட்டுமல்லாமல், இந்தியாவிலேயிருக்கிற இந்த ஆடை அலங்காரப் பயிற்சி நிலையத்தில் சேர்க்கைக்காகத், தமிழ்நாட்டிற்காக ஏதாவது தனி விகிதாச்சாரம் இந்த அரசு கேட்டிருக்கிறதா என்பது போன்ற விவரங்களைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு தவறான



2002 அக்டோபர் 30]

கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். 27-7-2002 அன்று மாண்புமிகு மத்திய ஜவுளித் துறை அமைச்சர் திரு. காசி ராம் ராணா அவர்கள் இந்நிறுவனத்தைத் தொடங்கி வைக்க வருகை தந்தார்கள். ஆனால், அன்று பாரத துணை ஜனாதிபதி மறைவினை முன்னிட்டு, அந்த கட்டடத் திறப்பு விழா தள்ளி வைக்கப்பட்டது என்பது இங்கேயிருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகையினாலே, பின் ஒரு தேதியிலே அதைத் திறந்து வைக்கலாம் என்று நாங்கள் அனைவரும் அங்கிருந்து வந்துவிட்டோம். ஆகையால்தான் வேறு ஒரு தேதியில் அந்தக் கட்டடத்தைத் திறக்க இருப்பதாக அறிவித்து இருக்கிறோம். 1995 ஆம் ஆண்டில் மத்திய அரசு எடுத்த முடிவின்படி புதுடெல்லிக்கு வெளியிலே NIFT அமைப்பதற்கு எந்த மாநிலம் முன்வருகின்றது எனக் கேட்டபோது, இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் 1995 ஆம் ஆண்டு இந்த இடத்தை ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்லாமல், இந்த NIFT கல்லூரியிலே, தேசிய ஆடை வடிவமைப்பு தொழில்நுட்பக் கழகத்தின் இந்தக் கல்லூரியிலே ஆடை அலங்கார வடிவமைப்பு பட்டயப் படிப்பு, உபகரணங்கள் வடிவமைப்பு பட்டயப் படிப்பு, ஆயத்த ஆடைகள் உற்பத்திக்கான தொழில்நுட்ப மேல் பட்டயப் படிப்பு. பின்னலாடை வடிவமைப்பு தொழில்நுட்ப மேல் பட்டயப் படிப்பு, ஆடை அலங்காரம் மற்றும் தகவல் தொழில்நுட்பப் பட்டய மற்றும் இளங்கலைப் பட்டப் படிப்பு ஆகியவை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதிலே சுமார் 225 மாணவர்கள் படிக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நிகழ்ச்சியைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். ஆகவே, அன்றைக்குத் திறந்து வைத்துத்தான் அங்கே சொன்னார்கள். நான் அதற்குள்ளே நுழைய விரும்பவில்லை. ஆனால் நான் கேட்டது, அந்த மாணவர்களுக்குப் பயிற்சி நேரத்திலே ஏதாவது உதவித் தொகை அளிக்கிறோமா, சேர்க்கைக்காகத் தமிழ்நாட்டிற்கு என்று ஏதாவது தனி சதவிகிதம் நாம் கேட்டிருக்கிறோமா; பெற்றிருக்கிறோமா; அப்படி அளிக்கப்படுகிறதா? இதுவரையில் உலக நாடுகளுடன் போட்டி போடுகிற அளவிற்கு எத்தனை வகையான ஆடை அலங்காரப் பயிற்சிகள் அங்கே

அளிக்கப்பட்டு இருக்கின்றன போன்ற விவரங்களைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்குத் தனிக் கேள்வியாகப் போட்டால், பதில் சொல்லப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வைதியலிங்கம், திறந்து வைத்ததற்குப் பிறகு பாருங்கள். வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பேரவை விதி 111-ன்கீழ் அறிக்கை அளித்தல்....

*முற்பகல் 11-25*

## 2. தகவல் கோரல்

### (அ) முகையூரில் பாட்டாளி மக்கள் கட்சி மாவட்ட பொதுக் குழுக் கூட்டம்

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று விழுப்புரம் மாவட்டம், முகையூரிலே...

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் சட்டமன்றப் பேரவை விதி 111-ன்கீழ் திருத்த அறிக்கையைச் சமர்ப்பிக்கிறேன். 25–10-2002 அன்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொஞ்சம் இருங்கள். திரு. மணி சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று விழுப்புரம் மாவட்டம், முகையூரிலே பாட்டாளி மக்கள் கட்சியினுடைய மாவட்ட பொதுக் குழுக் கூட்டம்...





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அது என் ஆய்வில் இருக்கிறது. இப்போதுதான் கொடுத்திருக்கிறீர்கள். அது என் ஆய்வில் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர்.

## 3. விதி 111-ன்கீழ் திருத்த அறிக்கை

### இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை அலுவலக கூடுதல் ஆணையர் பதவிக்கு அங்கீகாரம் வழங்கும் சட்டத் திருத்தம் குறித்து அத்துறை அமைச்சர் திருத்த அறிக்கை

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் சட்டமன்றப் பேரவை விதி 111ன்கீழ் திருத்த அறிக்கையைச் சமர்ப்பிக்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அறிக்கையை முடித்து விடட்டும்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** 25-10–2002 ஆம் தேதி அன்று சட்டமன்றப் பேரவையில் 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவை அறிமுகப்படுத்தியபோது, பின்வருமாறு என்னால் தெரிவிக்கப்பட்டது.

இன்றைக்குத் தமிழ்நாட்டிலே திருக்கோவில்களுக்கு இருக்கின்ற 4 இலட்சத்து, 76 ஆயிரம் ஏக்கருக்கு மேல் இருக்கிற நிலங்களைச் சரிபார்த்து, அவற்றை எடுப்பதற்காகத்தான் இப்படிப்பட்ட ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியை இங்கே நியமித்திருக்கிறார்களே தவிர, புதிய பொறுப்பிற்கு, புதிய பணிகளில் யாரும் நியமிக்கப்படவில்லை என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுகுறித்துப் பின்வருமாறு திருத்த அறிக்கையை இந்தப் பேரவையின்முன் அளிக்கிறேன்.

1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டத்தில், தமிழ்நாடு சட்டம் 22/1959, கூடுதல் ஆணையர் என்ற பணியிடம் குறிப்பிடப்படவில்லை. கடந்த 7.7.1997 அன்று இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை அலுவலகத்தில் ஒரு கூடுதல் ஆணையர் பணியிடம் பதவி உயர்வின் மூலம் நிரப்பப்படும் வகையில் ஓர் இணை ஆணையரைக் கூடுதல் ஆணையராகப் பதவி உயர்வில் நியமித்து ஆணையிடப்பட்டது. இந்தப் பணியிடத்தை 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டத்தில் இணைக்க ஏதுவாக இச்சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டது. இப்பணியிடத்தில்

[திரு. பி.சி. இராமசாமி] [2002 அக்டோபர் 30

7-7-1997 ஆம் ஆண்டு முதல் கூடுதல் ஆணையர் பணியாற்றி வந்தாலும், அவருடைய பதவி மற்றும் அவருடைய பணிகள் குறித்து இந்து சமய அறநிலைக் கொடைகள் வரையறுத்துச் சொல்லப்படவில்லை. எனவே, அவரது பதவிக்கும், அவரது பணிகளுக்கும் சட்டபூர்வமான அங்கீகாரம் அளிக்கும் பொருட்டு, இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டத் திருத்தம் தேவைப்படுகிறது. அறநிலையத் துறையைப் பொறுத்தவரையில், அறநிலையத் துறைப் பணியாளர்களுக்கான ஊதியம் முதலில் அரசால் வழங்கப்பட்டாலும். பின்னர் திருக்கோவில் உபரி நிதியிலிருந்து அரசுக்குத் திரும்பச் செலுத்தப்படுகிறது. எனவே, இந்தச் சட்டத் திருத்தத்தினால் எந்தவிதமான கூடுதல் செலவுகளும் அரசுக்கு ஏற்பட வாய்ப்பில்லை. ஏற்கெனவே உள்ள கூடுதல் ஆணையர் பதவிக்குச் சட்டபூர்வமான அங்கீகாரம் மட்டும் அதிகாரிகளுக்கு வழங்குவதற்காகத்தான் இந்தச் சட்டத் திருத்தம் தேவைப்படுகிறது.

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (ஆ) சாலைப் பணியாளர்கள் பணி நீக்கம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடு)

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலைப் பணியாளர்களுடைய பணி நீக்கம் குறித்தும், மற்றைய....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள்.

## 4. கவன ஈர்ப்பு

### வேலூரில் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் தொடங்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. ஞானசேகரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,— (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி, கொடுத்திருக்கிறீர்கள். அமைச்சர் வரவில்லை. கேட்டுச் சொல்கிறேன். திரு. சி. ஞானசேகரன்.



2002 அக்டோபர் 30]

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூரில் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் தொடங்க சட்டம் இயற்றியும் இன்னும் தொடங்கப்படாமல் உள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முதல்வர் எங்களுடைய இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஆட்சிப் பொறுப்பேற்ற உடனேயே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், விவர அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது என்று மட்டும் சொன்னால் போதும். அவர் கேள்வி கேட்ட பிறகு சொல்லுங்கள்.

***மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

வேலூரில், திருவள்ளுவர் பல்கலைக்கழகம் தொடங்க 9.3.2002-ல் ஆளுநர் உரையில் அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதற்கிணங்க சட்டப் பேரவையில் இதற்கான சட்டம் இயற்றப்பட்டது. அரசுக் கல்லூரிகளைப் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரிகளாக மாற்றியமைக்கும் சட்டத்தை எதிர்த்துக் கல்லூரி ஆசிரியர்கள் சங்கம் போராட்டம் நடத்தியது. இதைத் தொடர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சங்க பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். ஆசிரியர்களின் பணி உரிமைகள் காக்கப்படும் என வாக்களித்து, அதுபற்றி ஆராய குழு ஒன்று அரசால் நியமிக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சரின் உறுதிமொழிகளை ஏற்று கல்லூரி ஆசிரியர்கள் சங்கம் 2.9.2002 முதல் போராட்டத்தை விலக்கிக் கொண்டது. மேற்சொன்ன குழு தனது பரிந்துரைகளை அரசுக்கு அளித்தது. இப்பரிந்துரைகளைப் பரிசீலித்து முழுமையாக ஏற்று அரசாணை (நிலை) எண் 279, நாள் 1.10.2002ல் தமிழ்நாடு அரசு ஆணையிட்டது. இதைத் தொடர்ந்து அன்னை தெரசா பல்கலைக்கழகங்கள் திருத்தச் சட்டம், 2002 மற்றும் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகச் சட்டம், 2002 ஆகியவற்றிற்குத் திருத்தங்கள்

அவசரச் சட்டம் வாயிலாகக் கொண்டு வரப்பட்டன. திருவள்ளுவர் பல்கலைக்கழகச் சட்டத்திற்கு ஆளுநர் மற்றும் குடியரசுத் தலைவர் ஆகியோரின் ஒப்புதல் பெறப்பட்டு, 16.10.2002 முதல் இச்சட்டம் அமலுக்கு வருவதாகத் தற்போது அரசு ஆணையிட்டுள்ளது.

முனைவர் அன்னாவி சுசீலா திருமாறன், மதுரையிலுள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் மனையியல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் முதல்வரைத் திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தராகவும், முனைவர் எஸ். மகாலிங்கம், வேலூரிலுள்ள சென்னைப் பல்கலைக்கழகத்தின் விரிவாக்க மைய இயக்குநரை அப்பல்கலைக்கழகத்தின் முதல் பதிவாளராகவும் நியமனம் செய்து அரசு ஆணையிட்டுள்ளது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் எங்களுடைய வேலூரில் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் தொடங்குவதற்காக ஆணையிட்டதற்கும், சட்டம் இயற்றியதற்கும் எங்களுடைய நெஞ்சார்ந்த நன்றிகளை நான் இங்கே காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த 11 ஆண்டு காலமாக இங்கே பல்கலைக்கழகம் அமைய வேண்டும் என்று பலமுறை நான் வற்புறுத்தி வந்தேன். இதிலே, சென்னை பல்கலைக்கழகத்தினுடைய விரிவாக்க மையம் வேலூரிலே பல ஆண்டுகாலமாக இயங்கி வந்து கொண்டிருக்கிறது. அதையே இப்போது பல்கலைக்கழகமாக நீங்கள் அறிவித்து, அதற்கான சட்டத்தை இயற்றி, இரண்டு நாளைக்கு முன்னால் Vice-Chancellor முனைவர் அன்னாவி சுசீலா திருமாறன் அவர்களை நியமித்தும், அதேபோல, Registrarஆக திரு. மகாலிங்கம் அவர்களை நியமித்திருப்பதாகவும் இப்போது விவர அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே இயங்கிக் கொண்டிருந்த சென்னை பல்கலைக்கழகத்தினுடைய விரிவாக்க மையத்திற்கு 750 ஏக்கர் நிலத்தை காட்பாடிப் பகுதியிலே தேர்வு செய்து, அதற்கு enter upon permission கூட, 50 ஏக்கருக்குக் கொடுத்து, பணம் இல்லாத காரணத்தினால், இப்போது எந்தவிதமான கட்டடங்களும் அங்கே கட்டப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், கேள்விதான் கேட்கலாம்.





**திரு. சி. ஞானசேகரன்:** ஆனால், இப்போது உடனடியாக இந்தப் பல்கலைக்கழகத்தின் Administrative Office, Department Offices, ஆகியவற்றை அமைப்பதுடன், Librarian, Controller of Examinations போன்ற staff-களையெல்லாம் நாம் நியமிக்க வேண்டும். அதற்கு அலுவலகம் அமைக்கப்பட வேண்டும். இப்போது சென்னை பல்கலைக்கழகத்தினுடைய விரிவாக்க மையம் வேலூர் கோட்டைக்குள்ளே பல ஆண்டுகளாக இயங்கிக்கொண்டிருக்கிறது. காலியாகப் பல கட்டடங்கள் கோட்டைக்குள்ளே இருக்கின்றன. ஆனால், அவை தொல்பொருள் ஆராய்ச்சி நிறுவனத்தினுடைய கட்டுப்பாட்டிலே இருக்கிற காரணத்தினாலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மத்திய அரசினுடைய கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய அந்தத் தொல்பொருள் ஆராய்ச்சி நிறுவனத்தினுடைய அலுவலர்களைச் சந்தித்து அல்லது அவர்களுக்குக் கடிதம் எழுதியாவது, அந்தக் காலியிடங்களையெல்லாம் பெற்று Administrative Office-ஐ கோட்டைக்குள்ளே இருக்கக்கூடிய கட்டடங்களிலேயே தொடங்குவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா? அதேபோல காட்பாடியிலே தேர்வு செய்யப்பட்ட 750 ஏக்கரிலே கட்டடங்கள் கட்டப்படுகிற பணி எப்போது தொடங்கும், அலுவலகம் எப்போது தொடங்கும், என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 11-30*

***மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்புகளை ஏற்றவுடனேயே உயர்கல்வியில் பல மாறுதல்களைக் கொண்டு வந்தார்கள். அதன் அடிப்படையில், வேலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, கடலூர் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதிகளையெல்லாம் சேர்த்து, அங்கு இருக்கும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்களுடைய வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்காக நல்ல கல்வியினைத் தரவேண்டுமென்கின்ற உன்னத நோக்கத்தில் அம்மா அவர்கள் தெய்வப்புலவர் அவர்களுடைய பெயரால், திருவள்ளுவர் பல்கலைக்கழகம் என்று உருவாக்கினார்கள். அப்படி உருவாக்கிய உடனேயே அதற்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அனைத்துப் பணிகளையும் செய்யும்படி எங்களுக்கு ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். அவற்றைச் செய்து கொண்டிருக்கிறோம். அதன் அடிப்படையில்தான் அம்மா அவர்கள் முனைவர் அன்னாவி சுசீலா திருமாறன் அவர்களை-ஒரு பெண்ணை—-இந்தப் பல்கலைக்

[டாக்டர் மு. தம்பிதுரை] [2002 அக்டோபர் 30

கழகத்தினுடைய துணைவேந்தராக நியமனம் செய்திருக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதுபோல அந்தக் கட்டடங்களை எந்த இடத்தில் கட்டுவது என்பது பற்றியெல்லாம் இப்போது ஆய்வில் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, புதிய துணைவேந்தர் அவர்கள், அவர்களுடைய அறிக்கையைச் சமர்ப்பித்த பிறகு அதை ஒரு பெரிய தொடக்க விழாவாக அம்மா அவர்களுடைய திருக்கரங்களால் திறப்பதற்கு விரைவிலே அனைத்து ஏற்பாடுகளும் செய்து அது தொடங்கப்படும் நிலையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்

## உ. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (இ) அரசு ஊழியர்களில் ஒரு பிரிவினர் 23-10-2002 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. பழனிசாமி, என்ன?*

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றும் பல பிரச்சினைகளைக் கிளப்பினோம். முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தோம். ஆசிரியர்-அரசு ஊழியர் போராட்டம் மறுபடியும் தொடருகிறது. தீபாவளி நெருங்கிக் கொண்டு இருக்கிறது. பொது மக்களுடைய நலனை அரசு கருத வேண்டுமென்பதற்காக அதைக் கொண்டு வருகிறோம். அதனாலேதான், இந்தப் பிரச்சினையை முதலமைச்சருடைய கவனத்திற்கு மீண்டும் கொண்டு வருகிறோம். அந்தப் பிரச்சினையில், ஒரு தீர்வு காண வேண்டும். இப்போது அரசு பல்வேறு தரப்பிலே, பல்வேறு சோதனைகளிலே பல்வேறு நெருக்கடியிலே இருந்தாலும் சம்பந்தப்பட்டிருக்கிற அரசு ஊழியர்—ஆசிரியர்களை, முதல்வர் அவர்கள் அழைத்துப் பேசி ஒரு சுமுகத் தீர்வு கண்டு அமைதி நிலை காணவேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். இதில் முதலமைச்சருடைய நல்ல பதிலை எதிர்பார்க்கிறோம். முதலமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. இ. புகழேந்தி:** தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நாங்களும் வலியுறுத்தி இருக்கிறோம். அரசு ஊழியர்கள் சம்பந்தமாக...

**திரு. ஐ. கணேசன்:** தலைவர் அவர்களே,...



2002 அக்டோபர் 30]

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** தலைவர் அவர்களே,...

**திரு. ப. ரங்கநாதன்:** தலைவர் அவர்களே, *(குறுக்கீடுகள்)*

**டாக்டர் க. பொன்முடி:** தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்றே முடிந்து விட்டது. எல்லாம் நேற்றே முடிந்துவிட்டது.

**திரு. இ. புகழேந்தி:** *அரசு ஊழியர்கள் சம்பந்தமாக பிரச்சினை, திராவிட முன்னேற்றக் கழகம் சார்பாக அல்ல....*

**திரு. ஜி.கே. மணி:** இந்தப் பிரச்சினை....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் (குறுக்கீடுகள்) பிரச்சினை ஒன்றுதான். அனைவருடைய சார்பிலேதான் அவர் சொல்லி இருக்கிறார். (குறுக்கீடுகள்) பிரச்சினை என்பது நாட்டிற்கே தெரிந்த பிரச்சினை. திரு. மணி, பிரச்சினை என்பது நாட்டிற்கே தெரியும். நேற்றைக்கு முதலமைச்சர் முழுவதுமாக விளக்கம் சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) உங்களுக்குப் பிரச்சினையை எழுப்ப வேண்டும் என்பதுதான் முக்கியமா? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 23ந் தேதி முதல் ஆசிரியர்கள்-அரசு ஊழியர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு JACTTEO-GEO என்ற அமைப்பைச் சேர்ந்த ஆசிரியர்களும், அரசு ஊழியர்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு போராட்டம் நடத்தி வருகிறார்கள். இதுசம்பந்தமாக இந்தச் சட்டமன்ற கூட்டத் தொடர் தொடங்கிய நாள் முதல் பல்வேறு எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்களும் தினந்தோறும் இந்தப் பிரச்சினையை, இந்த அவையிலே எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு நானும் நிதி அமைச்சர் அவர்களும் விரிவான பதிலைத் தந்திருக்கிறோம். நேற்றுக்கூட இந்த அவையிலே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலர் வெளிநடப்புச் செய்தபின்னர் அல்லது வெளியேற்றப்பட்ட பின்னர் மிகவும் விரிவாக பதிலை அளித்திருக்கிறேன். அந்தப் பதிலைத் தொலைக்காட்சிகளிலும், பத்திரிகைகளிலும் பார்த்து இருப்பார்கள் என்று நம்புகிறேன். இருப்பினும் சில கருத்துகளை இந்த நேரத்தில் சொல்வது அவசியம் என்று கருதுகிறேன்.

*முற்பகல் 11-35*

ஒன்றை நாம் அனைவரும் சிந்திக்க வேண்டும்; இந்த அவையும் சிந்திக்க வேண்டும்; குறிப்பாக மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிந்திக்க வேண்டும்; பொதுமக்களும் சிந்திக்க வேண்டும். இந்த அரசாங்கம், இந்த மாநில அரசு என்பது யாருக்காக இருக்கிறது? இந்த மாநில அரசு யாருக்காகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது? யாருக்காக இயங்கிக் கொண்டிருக்கிறது? நமக்கெல்லாம் மக்கள் வாக்களித்து நம்மையெல்லாம் தேர்தலில் வெற்றி பெறச் செய்து இந்த அவைக்கு அனுப்பிவைத்தார்களே! மக்கள் எதற்காக வாக்களித்தார்கள்? இந்த அரசு அமையவேண்டும் என்பதற்காக மக்கள் வாக்களித்தார்களே, அதனுடைய நோக்கம் என்ன? இந்த அரசு மக்களுக்காக இருக்கிறதா, அல்லது அரசு ஊழியர்களுக்காக இருக்கிறதா? இந்த அரசு என்பது இந்த மாநிலத்தில் உள்ள பொதுமக்களின் பாதுகாப்புக்காகவும் மக்களின் நன்மைக்காகவும் செயல்பட வேண்டுமா, அல்லது அரசு ஊழியர்களின் நன்மைக்காக இந்த அரசு செயல்பட வேண்டுமா? அனைவரும் ஒன்றைச் சிந்திக்க வேண்டும். மக்கள்மீது பல வரிகளைப் போடுகிறோம். அந்த மக்கள்தான் அரசுக்கு வரிப் பணம் செலுத்துகிறார்கள். ஆனால் அப்படி மக்கள் செலுத்துகின்ற வரிப்பணத்தையெல்லாம் என்ன செய்கிறோம்? எப்படிச் செலவிடுகிறோம்? அரசு ஊழியர்களுக்காகவே செலவிடுகிறோம். இதில் ஏதாவது நியாயம் இருக்கிறதா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறேன்.

நேற்றுத்தான் விரிவாகச் சொன்னேன். மக்கள் செலுத்துகின்ற வரிப்பணத்தில், மாநில அரசுக்குக் கிடைக்கின்ற வரிப்பணத்தில் 94 சதவீதம் அரசு ஊழியர்களுக்கே செலவிடப்படுகிறது. அரசு ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கு, 'D.A.' வழங்குவதற்கு, பென்ஷன் வழங்குவதற்கு, இதர படிகள் வழங்குவதற்கு, 94 சதவீதம் வரிப்பணம் செலவிடப்படுகிறது. ஆகவே, இது நியாயமா, ஏற்புடையதுதானா என்பதை அனைவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறேன். இந்த வரிப் பணத்தை வசூல் செய்வதற்கு ஒட்டுமொத்த அரசாங்க நிர்வாகமே, அரசாங்க இயந்திரமே பயன்படுத்தப்படுகிறது. Commercial Taxes-ஐ வசூல் செய்வதற்கு, Liquor மீதான வரிகளை, Excise வரிகளை வசூல் செய்வதற்கு, அரசாங்க இயந்திரத்தின் பெரும்பகுதி இதற்காகவே பயன்படுத்தப்படுகிறது. ஆண்டுதோறும் அவர்கள் இந்தப் பணியைச் செய்து, அரசுக்கு வரிப் பணத்தை வசூலித்துக் கொடுத்ததால் அந்த வரிப் பணம் மக்களுக்காகச் செலவிடப்படுகிறதா? மக்களுக்காகச்



செலவிட முடிகிறதா? 94 சதவீத வரிப்பணம் அரசு ஊழியர்களுக்கே போய்விடுகிறது. ஆகவே மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இந்த அரசு இயங்கிக்கொண்டிருக்கிறதா, அல்லது அரசின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக மக்கள் இயங்கிக் கொண்டு இருக்கிறார்களா? (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் கேள்வியை அனைவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மீண்டும் கேட்கிறேன், மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இந்த அரசு இருக்கிறதா, அல்லது அரசு ஊழியர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக மக்கள் இருக்கிறார்களா?

போனஸ்-ஐப் பற்றி திரும்பத் திரும்பப் பேசுகிறார்கள். போனஸ் என்பது என்ன? முதன்முதலாக போனஸ் என்பது எப்படி வந்தது? ஒரு நிறுவனம் நல்லமுறையில் இயங்கி இலாபம் சம்பாதித்தால் அந்த இலாபம் முழுவதுமே உரிமையாளர்களுக்குப் போவது நியாயம் அல்ல என்று ஒரு கருத்து இருந்தது. அந்த நிறுவனத்திற்கு அந்த இலாபத்தை ஈட்டித் தருபவர்கள் யார்? அந்த நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்கள். ஆகவே, போனஸ் என்பது ஒரு நல்ல எண்ணத்தின் அடையாளமாக, அந்த நிறுவனத்தின் உரிமையாளர்களுக்கு அவ்வளவு இலாபத்தை ஈட்டித் தந்த ஊழியர்களுக்கு அந்த இலாபத்தில் ஒரு பங்கு தருவதுதான் போனஸ் என்பது. போனஸ் என்பதே ஒரு Goodwill Gesture. ஒரு நல்லெண்ணத்தின் அடையாளம். ஒரு நிறுவனம் இலாபகரமாக இயங்கினால் இலாபம் முழுவதையும் உரிமையாளர்களே, நிர்வாகமே, வைத்துக்கொள்வது நியாயமல்ல என்ற கருத்தின் அடிப்படையில் அந்த இலாபத்தின் ஒரு பங்கை ஊழியர்களுக்கும் தருவதுதான் போனஸ். ஆனால், அந்த நிறுவனம் நஷ்டத்தில் இயங்கினாலும் பரவாயில்லை, எங்களுக்கு போனஸ் தந்தேயாக வேண்டுமென்று அந்த ஊழியர்கள் கேட்டால் அது எப்படி நியாயமாகும்? (மேசையைத் தட்டும் ஒலி) அப்படித்தான் இன்றைக்கு அரசின் நிலைமையும் இருக்கிறது. அரசின் நிதி நிலைமை சீராக இருந்தபோது, ஊழியர்கள் போனஸ் கேட்கின்ற அளவுக்கு அரசு வைத்துக்கொள்ளவில்லை.

*முற்பகல் 11-40*

நேற்றுக்கூட இந்த அவையில் தெளிவுபடுத்தினேன். 1991 முதல் 1996 வரை எங்கள் ஆட்சி செயல்பட்டபோது, எப்போதெல்லாம் போனஸ் தரவேண்டியிருந்ததோ, எப்போதெல்லாம் Dearness Allowance தரவேண்டியிருந்ததோ அப்போதெல்லாம் தங்குதடையின்றி, ஊழியர்கள் கேட்பதற்கு முன்னதாகவே இந்த அரசு வழங்கியது.

அன்றையதினம் அரசின் பொருளாதார நிலைமை சீராக இருந்தது. ஆனால் இன்றைக்கோ நிதிநிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது.

அரசை ஒரு நிறுவனத்தோடு ஒப்பிட்டால், இந்த அரசே இன்றைக்கு திவால் ஆகும் நிலையில் இருக்கிறது; நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. அப்படி இருக்கும்போது, எங்களுக்கு போனஸ் வழங்கவேண்டுமென்று கேட்டால் என்ன நியாயம்?

ஒரு மாநிலத்தில் வளம் கொழித்தால், மாநிலத்து நிலைமை சுபிட்சமாக இருந்தால், அந்த சுபிட்சத்தில் அனைவரும் பங்கு கொள்ளலாம். அதற்கு அனைவருக்கும் உரிமை இருக்கிறது, அரசு ஊழியர்களுக்கும் உரிமை இருக்கிறது, பொதுமக்களுக்கும் உரிமை இருக்கிறது. அதை ஏற்றுக்கொள்கிறோம். அதைப்போலவே அந்த மாநிலத்தில் ஒரு நெருக்கடி இருந்தால், ஒரு distress இருந்தால், அதில் அனைவரும் பங்கு கொள்ள வேண்டாமா?

இன்றைக்கு மாநிலத்தில் நெருக்கடி நிலைமை இருப்பதால், நிதிநிலைமை மிகவும் மோசமடைந்துள்ளதால், மாநிலத்திற்கு ஏற்பட்டிருக்கின்ற இந்த distress-ல், இந்த நெருக்கடியில், பொதுமக்கள் பங்கு கொள்ளவேண்டுமென்று கட்டாயப்படுத்தி, பொதுமக்கள், ஏழை எளிய மக்கள் அதில் பங்கு கொண்டிருக்கிறார்கள். இந்த ஆட்சி வந்தபிறகு, கடந்த ஒன்றரை ஆண்டு காலத்தில், பேருந்துகளின் கட்டணங்களை உயர்த்தியிருக்கிறோம்; மின்சாரக் கட்டணங்களை உயர்த்தியிருக்கிறோம்; நியாய விலைக் கடைகளில் வழங்கப்படும் ரேஷன் அரிசியின் விலையை உயர்த்தியிருக்கிறோம். இப்படி மாநிலத்தின் நிதி நிலைமை மிகவும் நெருக்கடியாக இருப்பதால், அதில் பொதுமக்களும், இந்த மாநில மக்களும் பங்கு கொள்ளவேண்டுமென்று மக்கள் மீது கட்டாயமாக இந்த விலை உயர்வுகளை, கட்டண உயர்வுகளைத் திணித்து, அவர்களை ஏற்க வைத்திருக்கிறோம், அவர்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்; செலுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

அப்படியிருக்கும்போது, அரசு ஊழியர்கள் மட்டும் இதற்கு விதிவிலக்காகக் கருதப்பட வேண்டுமென்று எதிர்பார்த்தால் அதில் என்ன நியாயம்? மாநிலத்தின் பொருளாதார நிலைமை சீராக இருந்தால், அப்போது அகவிலைப்படி, போனஸ் இவற்றையெல்லாம் எதிர்பார்ப்பது நியாயம். ஆனால் மாநிலத்தின் நிலைமையே இவ்வளவு மோசமாக இருக்கும்போது, நிதிநிலைமை நெருக்கடியாக இருக்கும்போது, பொதுமக்களே அந்தப் பாதிப்புக்குள்ளாகும்போது அரசு ஊழியர்கள்





மட்டும் எங்களுக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை, நாங்கள் இதற்கெல்லாம் அப்பாற்பட்டவர்கள், எங்களுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டால், அது எப்படி நியாயமாகும்?

ஆக, அரசு ஊழியர்கள் இன்றைக்கு என்ன சொல்கிறார்கள்? மாநிலத்தின் பொருளாதார நிலைமை மோசமாக இருந்தாலும், பொதுமக்கள் பாதிக்கப்பட்டாலும், பொதுமக்கள் வரிப்பணத்தைச் செலுத்தியாகவேண்டும் என்று அரசு கட்டாயப்படுத்தினாலும், ஏழை எளிய மக்கள் செலுத்துகின்ற பேருந்துக் கட்டணங்கள் உயர்த்தப்பட்டாலும், பொதுமக்கள் செலுத்துகின்ற மின்சாரக் கட்டணங்கள் உயர்த்தப்பட்டாலும், ஏழை எளிய மக்கள் ரேஷன் கடைகளில் வாங்கும் அரிசியின் விலை ஏற்றப்பட்டாலும், அது எல்லாம் நியாயம், அதையெல்லாம் செய்யலாம், ஆனால் எங்களுக்கு வழங்கப்படுகிற போனஸ், எங்களுக்கு வழங்கப்படுகின்ற அகவிலைப்படி இவற்றை மட்டும் நீங்கள் நிறுத்தக்கூடாது, குறைக்கக்கூடாது என்றால் என்ன அர்த்தம்? (மேசையைத் தட்டும் ஒலி).

Dearness Allowance--அகவிலைப்படி—என்பது என்ன? ஒட்டுமொத்தமாக, வெளிச்சந்தையில் விலைவாசிகள் உயரும்போது, அந்த விலைவாசி உயர்விலிருந்து ஒரு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்பதற்காக, ஒரு தொகையைத் தருகிறோம். Protection against price raise. அதுதான் அகவிலைப்படி. ஒட்டுமொத்த ஜனத்தொகையில் 2 சதவீதம் அளவுக்கு மட்டும் இருக்கின்ற அரசு ஊழியர்களுக்கு, அகவிலைப்படி தந்து விலைவாசி உயர்விலிருந்து பாதுகாப்புத் தரவேண்டுமென்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நீங்களும் வாதாடுகிறீர்கள். இன்னும் இருக்கிறார்களே இந்த மாநிலத்தில் 98 சதவிகிதம் பேர், அவர்களுக்கு என்ன பாதுகாப்பு? (மேசையைத் தட்டும் ஒலி) விலைவாசி உயர்வு அவர்களைப் பாதிக்கவில்லையா? இன்னும் சொல்லப்போனால், அரசு ஊழியர்களுக்காக நாம் சம்பளம் கொடுக்க வேண்டும்; பென்ஷன் கொடுக்க வேண்டும்; D.A. கொடுக்க வேண்டும் என்பதற்காகப் பொது மக்கள் மீது, ஏழையெளிய மக்கள்மீது அதிகப்படியான வரிகளை விதிக்கிறோம்; கட்டணங்களை உயர்த்துகிறோம்; அவர்களிடமிருந்து கட்டாயமாகப் பணத்தை—வரிப் பணத்தை—வசூலிக்கிறோம். கட்டணப் பணத்தை வசூலிக்கிறோம்; அதையெல்லாம் என்ன செய்கிறோம்? மாநிலத்தின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்துகிறோமா? இல்லை. அரசு ஊழியர்களுக்கு D.A. வாகச் செலுத்துகிறோம்; அவர்களுக்குச்

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2002 அக்டோபர் 30

சம்பளமாகக் கொடுக்கிறோம்; அவர்களுக்கு அகவிலைப்படியாகக் கொடுக்கிறோம்; பென்ஷனாகக் கொடுக்கிறோம். அதில் என்ன நியாயம்?

*முற்பகல் 11-45*

இப்போது எப்படி இருக்கிறது என்று சொன்னால், அரசு என்பது மக்களுக்காகவே இல்லை. The Government is there only to maintain the establishment. இத்தனை இலட்சக்கணக்கான அரசு ஊழியர்கள் பணியாற்றி, இத்தனை வரிகளை ஈட்டி, வரிப் பணத்தை அரசுக்குக் கொடுத்து, திரும்ப அந்தப் பணத்தில் எதுவுமே நாம் பொது மக்களுக்காகச் செலவிட முடியவில்லை; ஏழையெளிய மக்களுக்காக எந்த வளர்ச்சித் திட்டங்களையும் அமல்படுத்த முடியவில்லை. அந்தப் பணமெல்லாம் அரசு ஊழியர்களுக்கே போகிறது என்று சொன்னால், பின்னர் எதற்கு இந்த அரசு? இந்த மாநில மக்கள் எதற்காக வாக்களித்து இந்த அரசை ஆட்சியில் அமர்த்தினார்கள்? மக்களுக்கு ஏதாவது செய்வோம் என்பதற்காகத்தானே! எதிர்க்கட்சி மாமன்ற உறுப்பினர்கள் தினந்தோறும், அரசு ஊழியர்களுக்காக வக்காலத்து வாங்கிக் கொண்டிருக்கிறீர்களே! இந்த மக்கள்தானே உங்களுக்கும் வாக்களித்தார்கள்? (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மக்களுக்காக நீங்கள் ஏதாவது குரல் கொடுப்பீர்கள், செய்வீர்கள் என்று நம்பித்தானே மக்கள் உங்களுக்கு வாக்களித்தார்கள்? (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் மக்களைப் பற்றியே மறந்துவிட்டு, மக்களைப் பற்றியே சிந்திக்காமல் எந்நேரமும் அரசு ஊழியர்களுக்கு இன்னும் தாருங்கள், இன்னும் தாருங்கள் என்று இங்கே கோரிக்கை வைப்பது என்ன நியாயம் என்று கேட்கிறேன். (குறுக்கீடுகள்) நான் இன்னும் முடிக்கவில்லை.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று கூச்சலிட்டனர்.)

I am not yielding. (Interruption) I am not yielding. You sit down. (Interruption). You can talk later. (Interruption) I am not yielding.

நான் ஒரு முக்கியமான அறிவிப்பைச் செய்ய வேண்டும். (கூச்சல்-குழப்பம்) நீங்கள் அப்புறம் பேசுங்கள். (குறுக்கீடுகள்) நான் ஒரு முக்கியமான அறிவிப்பைச் செய்யவேண்டும். (குறுக்கீடுகள்) I will tell. நீங்கள் பிறகு பேசலாம். (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்)



2002 அக்டோபர் 30]

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** நான் ஒரு அறிவிப்பைச் செய்யவேண்டும். (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். எதுவாக இருந்தாலும், பேரவைத் தலைவரைப் பார்த்துச் சொல்லுங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** பிறகு பேசுங்கள். நான் ஒரு அறிவிப்பைச் செய்ய வேண்டும். (கூச்சல்-குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவாதத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க விரும்புகிறேன். தமிழ்நாடு ஆசிரியர்-அரசு ஊழியர் சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழு JACTTEO-GEO என்ற அமைப்பைச் சேர்ந்த அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் கடந்த 23-10-2002 அன்று முதல், வேலைநிறுத்தப் போராட்டத்தில் தொடர்ந்து ஈடுபட்டு வருவது, எந்த அளவுக்கு நியாயமற்ற செய்கை என்பதையும், அரசு நிர்வாகத்தைச் சீர்குலைக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு நடத்தப்படுகின்ற இந்த வேலைநிறுத்தப் போராட்டம் தேவையற்றது என்பதையும் நான் நேற்று, 29-10-2002 அன்று இந்த மாமன்றத்தில் விளக்கிக் கூறினேன். மேலும், அரசு தற்போது சந்தித்து வருகின்ற கடுமையான நிதி நெருக்கடிச் சூழ்நிலையிலும், 4 சதவிகிதம் அகவிலைப்படி உயர்வை, ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்களுக்கு நல்ல எண்ணத்தின் அடிப்படையில், மிகுந்த சிரமங்களுக்கிடையே வழங்கியுள்ளதைக் கருத்தில்கொண்டு, வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களும், அரசு ஊழியர்களும், போராட்டத்தைக் கைவிட்டுப் பணிக்கு உடன் திரும்ப வேண்டுமென்றும் நான் நேற்று என்னுடைய உரையில் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தேன். இருப்பினும், போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்கள், போராட்டத்தைக் கைவிட்டுப் பணிக்குத் திரும்புவதற்குக் கடைசியாக ஒரு வாய்ப்பு அளிக்கவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில், மீண்டும் ஒருமுறை தமிழக அரசின் நிலைப்பாட்டை இந்தப் பேரவையின் வாயிலாக எடுத்துரைக்க விரும்புகின்றேன்.

போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்ற ஆசிரியர்களும், அரசு ஊழியர்களும், 31-10-2002, வியாழக்கிழமைக்குள்ளாக, அதாவது நாளைக்குள்ளாக, பணிக்குத் திரும்ப வேண்டும்; அவ்வாறு அவர்கள் 31-10-2002-க்குள் பணிக்குத் திரும்பி வந்தால், அத்தகையோருக்கு அவர்கள் பணிக்கு வராத நாட்களுக்கு மட்டும். 'No work, no pay' என்ற விதியின்

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2002 அக்டோபர் 30

அடிப்படையில் ஊதியம் வழங்கப்படாமல், இந்த மாதத்தில் அவர்கள் பணிபுரிந்த நாட்களுக்கான ஊதியம், கணக்கிடப்பட்டு வழங்கப்படும். மேலும், அவ்வாறு 31-10-2002-க்குள் பணிக்குத் திரும்பி வருவோர் மீது ESMA சட்டம், அதாவது, 'அத்தியாவசியப் பணிகள் பராமரிப்புச் சட்டம்' உட்பட, வேறு எந்தச் சட்டத்தின்படியும் குற்றவியல் நடவடிக்கைகள் எடுக்கப்பட மாட்டாது என்பதைத் தெளிவுபடுத்திக்கொள்ள விரும்புகிறேன். ஆனால், போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களும், அரசு ஊழியர்களும் தமிழக அரசு நல்லெண்ணத்தின் அடிப்படையில் வழங்குகின்ற இந்தக் கடைசி வாய்ப்பைப் பயன்படுத்தி உடனடியாக, அதாவது, 31-10-2002-க்குள் பணிக்குத் திரும்பாவிட்டால், அத்தகையோர் மீது ESMA சட்டத்தின்படியும், நடைமுறையில் உள்ள இதர விதிகளின்படியும் கடுமையான நடவடிக்கைகள் கண்டிப்பாக எடுக்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 11-50*

தமிழக அரசின் அனைத்துத் துறைகளிலும் பணி புரிகின்ற அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகிய அனைவருக்கும் தற்போது நான் எடுத்துக் கூறிய கருத்துகள் பொருந்தும். தமிழக அரசு தற்போதுள்ள கடுமையான நிதி நெருக்கடியைக் கருத்தில்கொண்டுதான் ஆசிரியர்களுக்கும் அரசு ஊழியர்களுக்கும் மேலும் நிதிச் சலுகைகளை வழங்குவது மிகவும் சிரமம் என்று தொடர்ந்து எடுத்துக்கூறி வருகிறது. இந்நிலையில் யதார்த்த நிலையை மறந்து, ஆசிரியர்களிலும் அரசு ஊழியர்களிலும் ஒரு சாரார் போராட்ட மனப்பான்மையைக் கடைப்பிடித்து வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து நடத்தி வருவது வருத்தத்திற்குரிய செயல் என்பதே பொதுமக்களுடைய கருத்து என்பதை இந்த நேரத்தில் நான் எடுத்துரைக்க விரும்புகிறேன்.

தமிழக அரசின் தற்போதைய நெருக்கடியான நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டும், இந்த வேலை நிறுத்தத்தின் வாயிலாக பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பினைத் தவிர்க்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தின் அடிப்படையிலும், வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோர் அனைவரும் உடனடியாகப் பணிக்குத் திரும்ப வேண்டுமென்று மீண்டும் ஒரு முறை கேட்டுக்கொள்கிறேன்.

பழி வாங்கும் நடவடிக்கையில் இந்த அரசு இறங்க விரும்பவில்லை. மாமன்ற உறுப்பினர்கள் பல்வேறு தகவல்களை, தவறான தகவல்களை



2002 அக்டோபர் 30] [செல்வி ஜெ ஜெயலலிதா]

இந்த அவைக்குத் தந்தபோதிலும், உண்மையை நான் விளக்க விரும்புகிறேன். இதுவரை ESMA சட்டம் யார் மீதும் பயன்படுத்தப்படவில்லை. இதுவரை ஒட்டுமொத்தமாக வேறு செக்ஷன்களின்கீழ் 15 பேர்தான் கைது செய்யப்பட்டுள்ளார்கள். அதுவும் எதற்காக என்றால், கடமை உணர்வோடு பணிக்கு வருகின்ற ஊழியர்களைத் தடுத்ததற்காகவும், வன்முறைச் செயல்களில் ஈடுபட்டதற்காகவும், பெண் ஊழியர்கள் மீது தகாத சொற்களைப் பயன்படுத்தி அவர்களை அச்சுறுத்தியதற்காகவும், இத்தகைய குற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டதால்தான் 15 பேர் மட்டும் இதுவரை கைது செய்யப்பட்டு remand செய்யப்பட்டு இருக்கிறார்கள். ஒட்டுமொத்தமாகத் தமிழகம் முழுவதும் 157 பேர் மட்டும்தான் இதுவரை suspend செய்யப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே, பத்திரிகைச் செய்திகளும், மாமன்ற உறுப்பினர்களும் இதற்கு மாறாக இங்கே தெரிவித்த கருத்துகளெல்லாம் தவறானவை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, மீண்டும் சொல்கிறேன், இதுவரை ESMA சட்டம் யார் மீதும் பயன்படுத்தப்படவில்லை. கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 15 தான். சஸ்பெண்ட் செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 157 தான் இன்றைய நிலவரப்படி. ஆகவே, இதுவரை தமிழக அரசு கடுமையாக நடந்துகொள்ளவில்லை என்பதை மீண்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆனால், இப்போது நான் அறிவித்தது இந்த அரசு தருகின்ற கடைசி வாய்ப்பாகும். நாளை 31-10-2002-க்குள் போராட்டத்தில் ஈடுபட்டு இருக்கின்ற அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் பணிக்குத் திரும்ப வேண்டும். அப்படி 31 ஆம் தேதிக்குள் பணிக்குத் திரும்பினால், அவர்களுக்கு ஊதியத்தில் எத்தனை நாட்கள் அவர்கள் வேலைக்கு வரவில்லையோ அத்தனை நாட்களுக்கு மட்டும்தான் ஊதியம் குறைக்கப்படும். மற்றபடி கடந்த மாதத்தில் அவர்கள் எத்தனை நாட்கள் பணியாற்றி இருக்கிறார்களோ, அத்தனை நாட்களுக்கும் அவர்களுக்கு ஊதியம் வழங்கப்படும். அவர்கள் மீது ESMA சட்டமோ, வேறு சட்டங்களோ பயன்படுத்தப்படமாட்டாது என்ற உத்தரவாதத்தை அளிக்கிறேன். ஆனால், 31-ஆம் தேதிக்குள்—போராட்டத்தில் ஈடுபட்டு இருக்கின்ற ஆசிரியர்களுக்கும் அரசு ஊழியர்களுக்கும் நான் தெரிவித்துக்கொள்வது என்னவென்றால், 31-ஆம் தேதிக்குள் அவர்கள் பணிக்குத் திரும்பவில்லை என்றால், பிறகு இந்த அரசின் நடவடிக்கைகள் மிகவும் கடுமையாக இருக்கும் என்று நான் எச்சரிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2002 அக்டோபர் 30

*முற்பகல் 11-55*

நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். இனிமேல் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு எதுவுமே இல்லை. நாங்கள் ஏற்கெனவே அறிவித்துள்ள அந்த 4 சதவீத அகவிலைப்படியைத் தவிர, வேறு எதுவும் கொடுக்கின்ற நிலையில் இந்த அரசு இல்லை. ஆகவே, யதார்த்த நிலையை உணர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு இருக்கின்ற அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் 31 ஆம் தேதிக்குள் பணிக்குத் திரும்ப வேண்டும் என்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். அப்படி அவர்கள் திரும்பினால் அவர்கள் பணிக்கு வந்த நாட்களுக்கு முழு ஊதியம் வழங்கப்படும். வேலைக்கு வராத நாட்களுக்கு மட்டும் ஊதியம் cut செய்யப்படும். ESMA சட்டமோ, மற்ற சட்டங்களோ அவர்கள்மீது பாயாது. ஆனால் நாளைக்குள் வேலைக்குத் திரும்பாவிட்டால் ESMA சட்டம் உட்பட இன்னும் என்னென்ன சட்டங்கள் இருக்கின்றனவோ அத்தனைச் சட்டங்களும் அவர்கள்மீது பாயும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு நேற்றுச் சொன்னதையே மீண்டும் சொல்கிறேன்; நாளைக்குள் வேலைக்குத் திரும்பாவிட்டால் இந்த அரசு என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யும் என்பதை;த் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி. சொல்லுங்கள். அரசின் நிலைப்பாட்டை முதலமைச்சர் தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடுகள்) என்ன சொல்லுங்கள். (குறுக்கீடு) எஸ்.ஆர்.பி. சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே போனஸ் என்று சொல்வது நல்லெண்ணத்தின் அடிப்படையில் இலாபத்தில் கொடுக்கப்படுகிற ஒரு பங்கு என்று சொன்னார்கள். முன்பு அப்படி ஒரு நிலை இருந்திருக்கலாம். ஆனால் இன்று ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலை என்பது, அது சம்பளத்தின் ஒரு பகுதி. It is a deferred wage. அது சரியான விளக்கமாகாது. அதுபோல...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. எஸ்.ஆர்.பி. அவர்கள், இதில் விவாதத்திற்கு ஒன்றும் இல்லை. விவாதத்திற்கு இடம் இல்லை. அரசின் நிலைப்பாட்டை முதலமைச்சர் தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். நீங்கள் உங்கள் கட்சியினுடைய நிலைப்பாட்டைச்



2002 அக்டோபர் 30] [பேரவைத் தலைவர்]

சொல்லுங்கள். அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) கொஞ்சம் இருங்கள். அவர் பேசி முடிக்கட்டும். அவர் பேசி முடித்த பிறகு நீங்கள் பேசுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அதுபோல அரசு ஊழியர்களுக்கு தமிழகத்தினுடைய வருமானத்தில் 94 சதவிகிதம் செல்கிறது என்று மீண்டும் மீண்டும் குறிப்பிட்டார்கள். என்னைப் பொறுத்தவரையில், நான் அறிந்தவரையில், கிடைத்திருக்கிற தகவலின் அடிப்படையில் மாநிலத்தின் மொத்த வரி வருவாயில் 94 சதவிகிதம் என்பது சரியாக இருக்கலாம். ஆனால், தமிழகத்தினுடைய மொத்த வருவாயில் மத்தியிலே இருந்து வருகிற வருவாய் இனத்தையும் சேர்த்துப் பார்த்தால்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், நான் சொல்வதைக் கேளுங்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றி நான் பேசும்போதெல்லாம் மாநிலத்திற்கு வருகின்ற வரி வருவாயில் 94 சதவிகிதம் என்றுதான் திரும்பத் திரும்பத் தெளிவாகக் கூறியிருக்கிறேன். (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. மாண்புமிகு உறுப்பினர் எஸ்.ஆர்.பி. அவர்கள்...(குறுக்கீடு).

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசு தருகிற நிதியோ, வேறு கடன் வாங்குகின்ற நிதியோ, நிதி நிறுவனங்களிடமிருந்து வருகிற நிதியோ மொத்த வருமானம் என்று மாண்புமிகு உறுப்பினர் கணக்கிடுகிறார். ஆனால் மைய அரசு கண்டிப்பான விதிமுறைகளை வகுத்திருக்கின்றது. நிதி நிறுவனங்கள் கண்டிப்பான விதிமுறைகளை வகுத்திருக்கின்றன. R.B.I..-யும் கண்டிப்பான விதிமுறைகளை வகுத்திருக்கின்றது. அப்படி வருகிற பணத்தை சம்பளம் போன்ற Revenue expenditure-க்கு ஒதுக்கக்கூடாது என்று திட்டவட்டமாகத் தெளிவுபடுத்தப்பட்டு இருக்கிறது என்பதையும் அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**டாக்டர் க. பொன்முடி:** Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசி முடிக்கட்டும்.

[2002 அக்டோபர் 30

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மொத்த வருவாயில் அத்தனையும் அரசு ஊழியர்களுக்குச் செல்லாது. காரணம், ஆளுநர், ஆளுநர் மாளிகை, ஆளுநர் செயலகம், சட்டப் பேரவை, சட்டப் பேரவைச் செயலகம், சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள், அவையினுடைய நேரம் முக்கியம். இன்றைக்கு உங்களுடைய கண்டனத் தீர்மானம்தான் வருகிறது. (குறுக்கீடு) உங்களுடைய கண்டனத் தீர்மானம்தான் இன்றைக்கு வருகிறது. அவையினுடைய நேரம் முக்கியம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசின் நிலைப்பாட்டைத் தெளிவாக, துல்லியமாக விளக்கிவிட்டார்கள். உங்கள் கருத்தை மட்டும் சொல்லுங்கள். என்ன செய்யப் போகிறீர்கள் என்பதைச் சொல்லுங்கள். விவாதம் பண்ணிக் கொண்டிருக்க நேரம் இல்லை. (குறுக்கீடு) சொல்லுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அது சரியான தகவல் ஆகாது என்பது எங்களுடைய நிலை. அதுமட்டுமல்ல, அரசு ஊழியர்கள் வேலைக்குத் திரும்ப வேண்டுமென்று மீண்டும் மீண்டும் சொல்லப்படுகிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புகழேந்தி, திரு. பரிதி இளம்வழுதி, திரு. பொன்முடி ஆகியோர் உட்காருங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அரசு ஊழியர்கள் வேலைக்குத் திரும்ப வேண்டுமென்று நாங்களும் விரும்புகிறோம். ஏனென்றால் அரசின் திட்டங்கள் செயல்பட வேண்டுமென்று சொன்னால், அரசுப் பணியாளர்கள் மீண்டும் வேலைக்கு வரவேண்டும். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டுமேதவிர, அவர்களை எச்சரிப்பதால் அவர்களை வேலைக்கு வரவழைக்க முடியுமா என்பது எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. இது நிச்சயமாக பலமான எச்சரிக்கையாக அமைகிறதே தவிர, வராதவர்கள்மீது ESMA பாயும்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 31 ஆம் தேதிக்குள் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிற ஆசிரியர்களும், அரசு ஊழியர்களும் பணிக்குத் திரும்பாவிட்டால் அவர்கள்மீது ESMA சட்டம் பாயும். இன்னும் என்னென்ன சட்டங்கள் இருக்கின்றனவோ, அந்தச் சட்டங்கள் பயன்படுத்தப்படும். படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர்கள் பணிநீக்கம் செய்யப்படுவார்கள்.



2002 அக்டோபர் 30] [செல்வி ஜெ ஜெயலலிதா]

புதிதாக அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினுடைய நிலையைச் சொல்லி விட்டார்கள். நீங்கள் உங்கள் கட்சியின் சார்பாக என்ன கருத்து என்பதைச் சொல்லுங்கள். அதுபோதும். (குறுக்கீடு) சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** Point of order.

**திரு. இ. புகழேந்தி:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், திரு. புகழேந்தியைக் கூப்பிடுகிறேன். முதலில் எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசி முடிக்கட்டும்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் தெளிவாகச் சொல்கிறேன். பொதுமக்களுடைய சார்பாகவும் (குறுக்கீடு) நான் தெளிவாகச் சொல்கிறேன். அருள்கூர்ந்து அரசு இந்தப் போக்கினைக் கைவிட்டு நிபந்தனை இல்லாமல் அரசு ஊழியர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி, இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமென்று காங்கிரஸ் கட்சியின் சார்பில், எதிர்க்கட்சிகளின் சார்பில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் பேச்சுவார்த்தை நடத்துவதால் என்ன ஆகப் போகிறது? அவர்கள் பழைய கோரிக்கைகளை எல்லாம் வைக்கப் போகிறார்கள்? நாங்கள் முடியாது என்று சொல்லப் போகிறோம். நான் மீண்டும் தெளிவாகச் சொல்லிவிட்டேன்; இந்த 4 சதவீத அகவிலைப்படியைத் தவிர வேறு எதுவும் தருகின்ற நிலையில் இந்த அரசு இல்லை. ஆகவே, நீங்களே ஒரு சுமுகமான முடிவு ஏற்படுவதற்கு ஏதுவாக போராடுகின்றவர்களிடம் பேசி 4 சதவீதம் D.A.-வை ஒத்துக்கொண்டு பணிக்குத் திரும்புங்கள் என்று சொல்லவேண்டியதுதானே?

நண்பகல் 12-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புகழேந்தி, நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் கட்சியின் சார்பாக, திரு. புகழேந்தி உங்களுடைய கருத்தைச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) திரு. புகழேந்தி பேசட்டும். (குறுக்கீடுகள்) அவர் பேசட்டும், (குறுக்கீடு).

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம், ஒரு கருத்தைச் சொல்லிவிடுகிறேன். *(குறுக்கீடுகள்).*

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு பேரில் யாராவது ஒருவர் பேசுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசுகிறேன். திரு. புகழேந்தி, உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புகழேந்தி, பேசுங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நீண்ட நெடிய விளக்கத்தை இங்கே சொன்னார்கள். அப்படிச் சொல்லுகின்றபொழுது எப்படி நாங்கள் கேட்டுக்கொண்டு இருந்தோமோ....*(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. திரு. புகழேந்தி இதில் விவாதம் கிடையாது.

**திரு. இ. புகேழந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவாதம் இல்லை, நான் சில விளக்கங்களை மட்டும் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விளக்கமெல்லாம் ஒன்றும் கிடையாது. உட்காருங்கள். குழுக்களுடைய அறிக்கைகளை அளித்தல். *(குறுக்கீடுகள்)* விளக்கமெல்லாம் இதிலே ஒன்றும் கிடையாது. உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* திரு. மணி, நீங்கள் சொல்லுங்கள். *(குறுக்கீடுகள்)* திரு. மணி, சொல்லுங்கள். *(குறுக்கீடுகள்)* விளக்கம் சொல்வதற்கு இதிலே ஒன்றும் இல்லை. திரு. மணி, நீங்கள் சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அரசினுடைய நிலைப்பாட்டை, நிதி நெருக்கடியை இறுதியாகச் சொல்லி இருக்கிறார்கள். அதை ஏற்றுக்கொண்டு அரசு ஊழியர்கள் வேலைக்குச் செல்ல வேண்டாம்; அவர்களுக்கு ஆதரவாக இருக்கிறோம் என்று நாங்கள் இங்கே வலியுறுத்தவில்லை. இருந்தாலும் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நாங்கள் சொல்லிக்கொள்ள விரும்புவது, அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள்





பணிக்குத் திரும்ப வேண்டுமென்ற எண்ணம் எங்களுக்கும் இருக்கிறது. அதிலே மாறுபட்ட கருத்தே இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாக அரசினுடைய நிலைப்பாட்டைச் சொல்லி விட்டார்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிலே எங்களுக்கு மாறுபாடு இல்லை. அவர்கள் பணிக்குப் போக வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிறகு வேறு என்ன? இதிலே விவாதம் கிடையாது.

**திரு. ஜி.கே. மணி:** இருந்தாலும், இறுதியாக அவர்களை ஒரு பேச்சு வார்த்தைக்கு அழைக்க வேண்டுமென்பதுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். இதிலே ஒன்றுமே இல்லையே. பேச்சுவார்த்தையில் பேசுவதற்கு ஒன்றும் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* அவர் பேசட்டும். யாராவது ஒருவர்தான் பேச முடியும். திரு. புகழேந்தி, கட்சியின் சார்பாக உங்களுடைய கருத்து என்ன என்பதை மட்டும் சொல்லுங்கள். *(குறுக்கீடுகள்)* திரு. புகழேந்தி, சொல்லுங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்களும் மக்களுக்காகத்தான் இருக்கிறோம்; மக்களுக்காகத்தான் பேசுகிறோம். அரசு ஊழியர்களும் மக்களில் ஒரு பகுதிதான். ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அரசு ஊழியர்கள் அன்றைக்குக் கேட்ட சில கோரிக்கைகளுக்கு இதே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பகிரங்கமாக ஆதரவு தந்தார்கள். அவர்களுக்காக அறிக்கையும் விட்டு, போராட்டத்திற்கு அன்றைக்கு வழிவகை காண வைத்ததும் இன்றைய முதலமைச்சர் அவர்கள்தான், அன்றைக்கு இருக்கின்றபோது. ஆனால், மக்களுக்காக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புகழேந்தி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். ஏற்கெனவே அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது கேட்டதெல்லாம் கொடுத்தார்கள்; இப்பொழுது நிலைமை அப்படி இருக்கிறது என்று சொல்லிவிட்டார்கள், இல்லையா? மறுபடியும் மறுபடியும் விளக்கம்

[பேரவைத் தலைவர்] [2002 அக்டோபர் 30

சொல்லிக்கொண்டிருந்தால் எப்படி? (குறுக்கீடு) திரு. பழனிசாமி, சொல்லுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவிப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன். தமிழ்நாட்டு மக்கள்மீது அக்கறை இருக்கின்ற காரணத்தால்தான், தமிழ்நாட்டு மக்கள் நலனில் அக்கறை இருக்கின்ற காரணத்தால்தான், இந்தப் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டுமென்று நாங்கள்-எதிர்க்கட்சிகள்—வலியுறுத்துகிறோம். ஏதோ ஒருதரப்பாக அரசு ஊழியர்கள் பக்கம் மட்டுமே இருக்கிறோம் என்று பொது மக்களுக்கு விரோதமாக எதிர்க்கட்சிகளெல்லாம் இருப்பது போன்று முதலமைச்சர் அவர்களுடைய குற்றச்சாட்டு அமைந்திருக்கிறது. அந்த நோக்கம் அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, நேற்றே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லவேண்டிய விளக்கங்களைச் சொல்லிவிட்டார்கள். இன்றைக்கும் அரசின் நிலைப்பாட்டை விளக்கி விட்டார்கள். இதிலே வேறு ஒன்றும் இல்லை. இதிலே விவாதத்திற்கு ஒன்றும் இடம் கிடையாது. (குறுக்கீடு) திரு. பரிதி இளம்வழுதி, சொல்லுங்கள். (குறுக்கீடு). திரு. பரிதி இளம்வழுதி சொல்லுங்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே, மொத்த வருவாயில் 94 சதவீதம் அரசு ஊழியர்களுக்குச் சென்று விடுகின்றது என்று சொன்னார்கள். ஒரு அரசாங்கத்திற்கு பல கூறுகளில், பல வழிகளில் வருமானங்கள் வருகின்றன. அந்த மொத்த வருவாயில் 94 சதவீதம் போகிறதா என்பது ஒரு கேள்வி. அடுத்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பரிதி இளம்வழுதி, இதிலே விளக்கம் எல்லாம் ஒன்றும் கிடையாது. உட்காருங்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) நான் பதில் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் மொத்த வருவாய் என்று சொல்லவில்லை. மாநிலத்தினுடைய மொத்த வரி வருவாயில் 94 சதவீதம் போகிறது. பிற நெறிகளில் வருகின்ற பணத்தை அரசு ஊழியர்களுடைய சம்பளத்துக்கு ஒதுக்க முடியாது. இது மைய அரசினுடைய வரையறை.



2002 அக்டோபர் 30] [திரு. சி. பொன்னையன்]

Planning Commission, Finance Commission இவை கடைபிடிக்கின்ற வரைமுறை; நெறிமுறை. மாநிலத்தின் மொத்த வரி வருமானத்திலிருந்து 94 சதவீதம் அரசு ஊழியர்களுக்குச் செல்கிறது. அதைத்தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெளிவுபடுத்தினார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த விவாதம் இத்தோடு முடிந்தது.

*பிற்பகல் 12-05*

## 5. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 2001-2003 ஆம் ஆண்டுகளுக்கான பொதுக் கணக்குக் குழுவின் 111 முதல் 113 வரையிலான 3 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேர்வைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி.

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2002-2003 ஆம் ஆண்டுகளுக்கான பொது நிறுவனங்கள் குழுவின் 60 முதல் 62 வரையிலான 3 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (இ) அரசு உறுதிமொழிக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2002-2003 ஆம் ஆண்டுகளுக்கான அரசு உறுதிமொழிக் குழுவின் 6-வது அறிக்கையைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஈ) மனுக்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. பி.எம். நரசிம்மன்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2001-2003 ஆம் ஆண்டுகளுக்கான மனுக்கள் குழுவின் 9 முதல் 14 வரையிலான அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு நபர் ஒருவரை உயிருடன் புதைக்கின்ற சடங்கு மற்றும் பழக்கத் தடைச் சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். 2002ஆம் ஆண்டு தமிழ்நாடு நபர் ஒருவரை உயிருடன் புதைக்கின்ற சடங்கு மற்றும் பழக்கத் தடைச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆண்டு தமிழ்நாடு நபர் ஒருவரை உயிருடன் புதைக்கின்ற சடங்கு மற்றும் பழக்கத் தடைச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.



மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) தமிழ்நாடு கட்டாய மதமாற்றத் தடைச் சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டாய மதமாற்றத் தடைச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அறிமுகம் செய்த பிறகு கொடுங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அறிமுகம் செய்துவிடுகிறேன். உங்களுடைய கருத்துகளைச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அந்த Bill-க்கா; இதற்கா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நபர் ஒருவரைப் புதைக்கிற சட்டம். (குறுக்கீடுகள்). அது முடிந்துவிட்டது. ஆய்வுக்கு வரும்போது பேசுங்கள். அது முடிந்துவிட்டது. வாக்கெடுப்புக்கு விட்டு அது நிறைவேறிவிட்டது. ஆய்வுக்கு வரும்போது பேசுங்கள். இப்போது நீங்கள் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டாய மதமாற்றத் தடைச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக்கோருகிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கட்டாய மதமாற்றத் தடைச் சட்டத்தை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், இது நிராகரிப்புத் தீர்மானம் இல்லை. எதிர்க்கிறேன் என்று மட்டும்தான் சொல்ல வேண்டும். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. பேசக்கூடாது.

[2002 அக்டோபர் 30

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அறிவிப்புக் கொடுத்து விட்டுச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, நிராகரிப்புத் தீர்மானம் இல்லை. (குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அந்த அவசரச் சட்டத்தையும் எதிர்க்கிறேன். அறிமுக நிலையிலேயும் எதிர்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, அவ்வளவுதான்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களாலே அறிமுகம் செய்யப்பட்ட கட்டாய மதமாற்றத் தடைச் சட்டம் தேவையில்லாதது என்பதைக் கருதி, அறிமுக நிலையிலேயே பாட்டாளி மக்கள் கட்சி சார்பிலே கடுமையாக எதிர்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பரிதியா? திரு. புகழேந்தியா, இல்லை இரண்டு பேரும் நிற்கிறீர்கள். என்னது, உங்களுக்குள்ளே கட்டப் பஞ்சாயத்து பண்ணுவதுபோல் கொண்டு வந்து விட்டுவிட்டீர்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டாய மதமாற்றத் தடைச் சட்டம் தேவையில்லை என்கின்ற காரணத்தால் இதை அறிமுக நிலையிலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எதிர்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைக்குத்தான் கண்ணியமாகப் பேசியிருக்கிறீர்கள். (சிரிப்பு).

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்தச் சட்டத்தை disapproval பண்ணக்கூடிய முறையிலே ஒரு தீர்மானம் கொடுத்து இருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிராகரிப்புத் தீர்மானம் என்பது இப்போது கிடையாது. ஆய்வுக்கு வரும்போதுதான் எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இப்போது நீதிமன்றத்தில் இருக்கிறது.



2002 அக்டோபர் 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கிறீர்களா; இல்லையா என்பதை மட்டும் இப்போது சொல்லுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நாங்கள் இதை எதிர்க்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவுதான், உட்காருங்கள். திரு. பழனிச்சாமி, திரு. ஹேமச்சந்திரன் உட்காருங்கள். உட்காருங்கள். அதற்கு அரசு விளக்கம் சொல்லும்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை அறிமுக நிலையிலே நாங்கள் எதிர்க்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. (குறுக்கீடுகள்) திரு. எச். ராஜா.

*பிற்பகல் 12-10*

**திரு. எச். ராஜா:****

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆதரவு என்பது கூடாது. (குறுக்கீடுகள்) ஆதரவு என்பது அறிமுக நிலையிலே தேவையில்லை. ஆகவே அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2002 அக்டோபர் 30

**(இ) தமிழ்நாடு பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலைத் தடைசெய்கின்ற (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலைத் தடைசெய்கின்ற (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

''2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலைத் தடைசெய்கின்ற (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்''

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர். (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஒரு நிமிடம். ஒரு விளக்கம். Point of order. அந்தச் சட்டமுன்வடிவு பற்றி நிகழ்ச்சி நிரலில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Supplementary Agenda-வில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அந்த Agenda-படிதானே வரவேண்டும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதெல்லாம் என்னுடைய அறையிலே கேட்க வேண்டிய விளக்கம்.



2002 அக்டோபர் 30]

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அதைத்தான் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**(ஈ) தமிழ்நாடு பல்கலைக்கழக (திருத்தச்) சட்டங்களுக்கான திருத்தச் சட்டமுன்வடிவு, 2002**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழக (திருத்தச்) சட்டங்களுக்கான திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

***மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழக (திருத்தச்) சட்டங்களுக்கான திருத்தச் சட்டமுன்வடிவினைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்''

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**(உ) சென்னைப் பல்கலைக்கழகச் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகச் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

[2002 அக்டோபர் 30

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''2002 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகச் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்''

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**(ஊ) திருவள்ளுவர் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு திருவள்ளுவர் பல்கலைக்கழகச் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''2002 ஆம் ஆண்டு திருவள்ளுவர் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்.''

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.



2002 அக்டோபர் 30]

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**(எ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (எட்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (எட்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (எட்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்.''

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 7. அறிவிப்புகள்

### (அ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஒன்பதாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஒன்பதாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

### 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (ஏ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஒன்பதாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஒன்பதாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஒன்பதாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்''

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.



### (ஐ) தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு உள்ளாட்சி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

''2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்.''

எனக்கோருகிறேன்.

பிற்பகல் 12-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஒ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு உள்ளாட்சி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு **ஊராட்சிகள்** (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்."

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே அறிமுக நிலையிலேயே நாங்கள் எதிர்க்கிறோம்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீரிப்பட்டி, பாப்பாபட்டி பஞ்சாயத்துகளில் தேர்தலை நடத்த முடியாமல், தனி அலுவலர்களை நியமிக்கின்ற இந்தச் சட்டமுன்வடிவை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஓ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்த) திருத்தச் சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்த) திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு உள்ளாட்சி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்.



**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்த) திருத்தச் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஔ) தமிழ்நாடு கால்நடை மருத்துவ மற்றும் விலங்கின அறிவியல்கள் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ மற்றும் விலங்கின அறிவியல்கள் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ மற்றும் விலங்கின அறிவியல்கள் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 8. அமைச்சரவையின் குறிப்பிட்ட ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பேரவை விதி 72(2)-ன்கீழ் கொடுக்கப்பட்டுள்ள தீர்மானம். பேரவை விதி 72(2)-ன்படி கீழ்க்காணும் தீர்மானம் வரப்பெற்றுள்ளது:

"பொது வினியோக முறையில் 10 கிலோவுக்கும் மேலாக வழங்கப்படும் அரிசியின் விலையை ரூ. 3.50 லிருந்து ரூ. 6.00 ஆக உயர்த்திய இந்த அமைச்சரவையின் கொள்கைக்கு இப்பேரவை எதிர்ப்புத் தெரிவிக்கிறது" என்று திருவாளர்கள் எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன், ஜே. ஹேமச்சந்திரன், ஜி. பழனிசாமி, இ. புகழேந்தி, ஜி.கே. மணி மற்றும் ஐ. கணேசன் ஆகியோர் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். தீர்மானங்கள் முறைப்படி உள்ளன. எனவே, பேரவை விதி 72(2)-ன்படி தீர்மானத்தை முன்மொழிய பேரவை அனுமதி அளிக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். அனுமதி அளிக்கலாம் என்று கருதும் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் இடங்களில் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(எதிர்க்கட்சியைச் சார்ந்த அனைத்து உறுப்பினர்களும் தங்கள் இருக்கைகளிலிருந்து எழுந்து நின்றனர்.)

பேரவை விதி 72(2)-ன்படி தேவையான உறுப்பினர்கள் எழுந்து நிற்பதால் இத்தீர்மானத்தை முன்மொழிய பேரவை அனுமதியளிக்கிறது என்று நான் அறிவிக்கிறேன். இத்தீர்மானம் இன்று விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவதால், திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்களைத் தீர்மானத்தை முன்மொழியுமாறு கேட்டுக்கொள்கிறேன்.



**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பொது வினியோக முறையில் 10 கிலோவுக்கும் மேலாக வழங்கப்படும் அரிசியின் விலையை ரூ.3.50 லிருந்து ரூ.6.00 ஆக உயர்த்திய இந்த அமைச்சரவையின் கொள்கைக்கு இப்பேரவை எதிர்ப்புத் தெரிவிக்கிறது."

என்னும் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தின்மீது விவாதம். திரு. பொன்முடி.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்ற காலத்திலேயிருந்து, அரிசியைக் கொள்முதல் செய்வதிலும், அரிசியை வினியோகம் செய்வதிலும் ஒரு திடமான, மக்களுக்கு ஏற்புடைய கொள்கையைப் பின்பற்றவில்லை என்பது இந்தத் தீர்மானத்தினுடைய முக்கிய குற்றச்சாட்டு. குறிப்பாக, இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, சென்ற நிதிநிலை அறிக்கை கூட்டத்தொடரிலேயே இந்த அரசில் ஓர் அறிவிப்பை வெளியிட்டார்கள். இவர்கள் அடிக்கடி மாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு ஒரு உதாரணமாக இதைச் சுட்டிக்காட்டுகிறேன். அரிசியின்மீது 2% வரி என்று சொன்னார்கள். இங்கே இருக்கிற அனைத்து எதிர்க்கட்சிகளும் 2% வரி இருக்கக் கூடாது என்று அப்பொழுதே எச்சரிக்கை விடுத்தோம். ஆனால் எந்த மாநிலத்திலும் வரி இல்லை என்று நாங்கள் சொன்னதற்குப் பிறகும்கூட, சில மாநிலங்களில் இருக்கிறது, ஆகவே இதை நாங்கள் இங்கே அமல்படுத்துகிறோம் என்று சொன்னார்கள். அப்பொழுது நாங்கள் இந்த வரியை எடுக்க வேண்டுமென்று பலமுறை வலியுறுத்தினோம். வரியை எடுக்கவில்லை. ஆனால் நேற்றைக்கு முன் நாள் திடீரென்று அந்த இரண்டு சதவீத வரியைக் குறைத்திருக்கிறீர்கள். ஏனென்றால் ஆலைத் தொழிலாளிகள், பொதுமக்களிலே 98 சதவீதம் பேர் இருக்கிறார்கள், அவர்களுக்காக இந்த இரண்டு சதவீத வரியைக் குறைத்திருக்கிறீர்கள். மொத்த பொதுமக்களிலே ஆலைத் தொழிலாளிகள், அரிசி ஆலைத் தொழிலாளிகள் 98 சதவீதம் இருப்பார்களோ என்று எனக்கு சந்தேகம் இருக்கிறது. ஒருகால் அரசாங்கத்தினுடைய நிதிநிலை சரியாக இருந்திருக்கலாம், அதனால் இந்த இரண்டு சதவீதத்தைக்

குறைத்திருக்கலாம். ஆனால் இந்த அரிசி விலையைப் பொறுத்தவரையில் எதிர்க்கட்சியாக இருக்கிறபோது ஒரு நிலைப்பாடு, ஆளுங்கட்சியாக இருக்கிறபோது ஒரு நிலைப்பாடு என்பது எப்போதும் ஏற்புடையதாக இருக்காது. இருக்கிற பொறுப்பிலே எப்படியிருந்தாலும் நாட்டு நலனிலே அக்கறை உடையவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதை நீங்கள் எண்ணிப் பார்த்திட வேண்டும்.

*பிற்பகல் 12-20*

தினத்தந்தியில் 14-10-1999-லே ஓர் அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையிலே சில வரிகளை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். "அரிசி விலையை உயர்த்தி ஏழையெளிய மக்கள் வாழ்க்கையோடு விளையாடாமல் அரசு கிலோ இரண்டு ரூபாய்க்கு வழங்கும் அரிசியை ரூபாய் 3.75-க்கு விற்க ஆணையிட்டதை உடனடியாக வாபஸ் பெறவேண்டும். பொதுமக்களுக்கு கிலோ அரிசி இரண்டு ரூபாய் விலையில் தொடர்ந்து வழங்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்." இந்த அறிக்கையை வெளியிட்ட நபர் யார் தெரியுமா? முன்னால் அமர்ந்திருக்கிற இன்றைய முதலமைச்சர் அவர்கள்தான். அதுவும் எப்போது தெரியுமா? 20 கிலோ அரிசியில் இரண்டு கிலோ அரிசி, மூன்று கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்கு விற்றதை 3½ ரூபாய்க்கு உயர்த்தியதற்காக அன்று கண்டனம் தெரிவித்த முதலமைச்சர் அவர்கள் இன்று 3½ ரூபாய்க்கு விற்ற அரிசியை ஆறு ரூபாய்க்கு உயர்த்தியிருப்பது எந்த விதத்திலே நியாயம்? மத்திய அரசு அரிசி விலையை உயர்த்தியபோதுகூட அன்றைய முதல்வர் கலைஞர் அவர்கள் எக்காரணத்தைக் கொண்டும் அரிசி விலையை உயர்த்த மாட்டேன் என்று சொல்லி அதைக் கடைசிவரை கடைப்பிடித்தார்களே! கேட்டீர்களே! வாக்களித்தவர்கள் என்ன, இவர்கள் எல்லாம் இரண்டு சதவீதத்து மக்களா? ரேஷன் கடையிலே அரசி வாங்கிச் சாப்பிடுகிறவர்கள் எத்தனை பேர்? ஒரு கோடியே அறுபத்தியோரு இலட்சம் கார்டுகள் விநியோகிக்கப்பட்டிருந்த காலகட்டத்திலே இன்று மக்கள் தொகையிலே 50 சதவீதத்தினருக்கு மேல் அங்கே வாங்கிக் கொண்டிருக்கிறார்களே அவர்கள் நமக்கு வாக்களிக்கவில்லையா?

அரசு ஊழியர்கள் எல்லாம் பொதுமக்கள் இல்லையா? அப்படி இருக்கிற காலகட்டத்திலே அரிசி விலையை இன்று 3½ ரூபாயிலிருந்து ஆறு ரூபாயாக உயர்த்தி இருக்கிறீர்களே ஏன்? சென்ற சட்டமன்றக் கூட்டத்தொடரிலே இதே முதலமைச்சர் இதே சட்டமன்றத்திலே அளித்த



வாக்குறுதியை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர்கள் சொன்ன வாக்குறுதி. "மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் பேசும்போது, தமிழ்நாட்டில் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்களுக்குப் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அரிசியின் விலை மூன்று ரூபாய் 50 பைசாவிலிருந்து மேலும் உயர்த்தப்படமாட்டாது என்ற உத்தரவாதத்தை அரசு அளிக்கவேண்டுமென்று கோரினார். ஆண்டிப்பட்டி தொகுதி இடைத் தேர்தல் பிரச்சாரத்தின்போது நான் மிகத் தெளிவாக ஓர் உறுதிமொழியைத் தமிழக மக்களுக்கு அளித்திருந்தேன். அதாவது வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்களுக்குப் பொது வினியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அரிசியின் விலை எக்காரணத்தைக்கொண்டும் மூன்று ரூபாய் 50 பைசாவிலிருந்து நிச்சயம் உயர்த்தப்படமாட்டாது" என்று வாக்குறுதி அளித்திருந்தேன். தேர்தல் வாக்குறுதிகள் மிகவும் புனிதமானவை என்று நான் கருதுவதால் நான் ஆண்டிப்பட்டியில் ஏற்கெனவே கூறியபடி இந்த வாக்குறுதி நிச்சயம் காப்பாற்றப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். "மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே**,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அதாவது சட்டமன்றத்திலே பேசுவதற்கும் பொதுக் கூட்டங்களிலே...(குறுக்கீடுகள்) கொஞ்சம் உட்காருங்கள். உட்காருங்கள், பொன்முடி, பொன்முடி, டாக்டர் பொன்முடி, சட்டமன்றத்திலே பேசுவதற்கும் பொதுக் கூட்டங்களிலே பேசுவதற்கும் ஒரு வேறுபாடு இருக்க வேண்டும். சட்டமன்றப் பேச்சு என்பது வேறு; பொதுக் கூட்டப் பேச்சு என்பது வேறு. இங்கேயே பேராசிரியர் போன்றவர்கள், பேசுவதை நீங்கள் கேட்டிருப்பீர்கள். எஸ்.ஆர்.பி. போன்றவர்கள், மணி அவர்கள் எல்லாம் பேசுகிறார்கள். ஆகவே கண்ணியக்குறைவான வார்த்தைகளை, கொஞ்சம் புண்படுத்தக்கூடிய வார்த்தைகளைப் பயன்படுத்தாமல் நீங்கள் சொல்லவேண்டிய கருத்தைச்சொல்லலாம். அழுத்தமாகச் சொல்லலாம். ஆகவே ** என்று சொன்ன வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் புனிதமானவை என்று சொல்லியிருக்கிற..

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூன்று மணித்துளிகளிலே முடித்துக்கொள்ளுங்கள். மற்ற உறுப்பினர்களும் பேசவேண்டும். மூன்று மணித்துளிகளிலே உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** இதுதான் புனிதமான தன்மையா? 3½ ரூபாய்க்கு விற்ற அரிசியை ஆறு ரூபாய்க்கு விற்க விலையை உயர்த்தியிருக்கிறீர்களே, வாக்களித்த மக்கள் கேட்க மாட்டார்களா? அப்படி வாக்களித்தவர்கள், இங்கே நீங்கள் சுட்டிக்காட்டியதைப்போல, அரசு ஊழியர்களும் வாக்களித்திருக்கிறார்கள்; பொதுமக்களும் வாக்களித்திருக்கிறார்கள்; சதவீதம் வேறுபடலாம். இரண்டு சதவீதமாக இருப்பவர்களை நம்பி எத்தனையோ குடும்பங்கள் இருக்கின்றன. 14 இலட்சம் அரசு ஊழியர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னால், 14 இலட்சம் அரசு ஊழியர்களை நம்பி ஒரு குடும்பத்திற்கு ஐந்து பேர் என்று சொன்னாலும் ஒரு கோடி பேர் இருக்கிறார்கள். ஏதோ பொது மக்கள் என்றால் வேறு, அரசு ஊழியர்கள் என்றால் வேறு; விவசாயிகள் என்றால் வேறு, இப்படி ஒவ்வொரு தரப்பினரும் வருகிறபோது பிரித்துக் காண்பிப்பது சரியாக இருக்காது.

*பிற்பகல் 12-25.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரும் அவர் சார்ந்திருக்கிற கட்சியின் தலைவர்களும் அரசு ஊழியர்களிடம் பேசி இந்த 4 சதவிகித அகவிலைப்படி உயர்வு வேண்டாம் என்று முடிவெடுத்துவிட்டால் மாதத்திற்கு அரசுக்கு 22 கோடி ரூபாய் மிச்சமாகும். அப்போது நிச்சயமாக நியாயவிலைக் கடைகளில் வழங்குகின்ற ரேஷன் அரிசியின் விலையைக் குறைத்துவிடுகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிற அமைச்சர்கள், இங்கே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் நாம் எல்லாம்கூட சம்பளமே வேண்டாம் என்று சொல்லிவிட்டு, எங்களுக்கு கார் படி எந்தப் படியும் வேண்டாம் என்று சொல்லி பணியாற்றினாலேகூட இதைக் கொடுக்க முடியும். அரசு ஊழியர்களுக்கும் வயிறு இருக்கிறது. பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். அரசு ஊழியர்கள் என்று சொன்னால் விரோதிகள் என்று தயவுசெய்து எண்ணிவிடாதீர்கள். அரசு ஊழியர்கள் என்பவர்கள் உங்களுடைய திட்டங்களை நடைமுறைப்படுத்துபவர்கள்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை தீர்மானத்திற்கு வாருங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** இல்லை, அவர்கள் சொன்னதனாலே வருகிறேன். அவர்கள் அரசு ஊழியர்கள் என்று சொன்னதாலே நான் சொல்ல வேண்டியிருக்கிறது இல்லையா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தீர்மானத்திற்கு வாருங்கள். 2 நிமிடம்தான் பேச அனுமதிக்க முடியும்.

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, என்னைப் பொறுத்தவரையிலே அரசு ஊழியர்கள் என்று சொல்கிறபோதும் சரி,. பொதுமக்களாக இருந்தாலும் சரி அவர்களும் இந்த ரேஷன் அரிசியை வாங்கிக் கொண்டிருப்பவர்கள்தான். அரசு ஊழியர்களைப் பொறுத்தவரையிலே அவர்கள் ஒன்றும் நீங்கள் கொடுப்பதைப் போய்த் தடை செய்யவில்லை. ஒவ்வொருவருக்கும் தங்களுக்கு வேண்டும் என்று கேட்பதற்கு உரிமை இருக்கிறது. விவசாயிகளைப் பொறுத்தவரையில் விளைந்த நெல்லை விற்க முடியாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிற நிலைமையில் இருக்கிறார்கள். கொள்முதல் கொள்கையிலே ஏற்பட்டிருக்கிற தடுமாற்றங்கள் வேறு இருக்கிறது. இத்தனைக்கும் மேலாக நீங்கள் சொன்னதைப் போல; நாங்கள் என்ன 2 சதவிகிதத்திற்காகவா பேச வருகிறோம். மீதி 98 சதவிகிதம் என்று சொன்னீர்களே, 60 சதவிகிதத்திற்கு மேல் ரேஷன் அரிசி வாங்கிக் கொண்டிருக்கிறார்களே அவர்களுடைய நிலை என்னவாயிற்று? அவர்களுக்கு எப்படி ஏறியிருக்கிறது விலை? ஆட்சிக்கு வருகிறபோது சொன்னீர்களே? 3.50 ரூபாயிலிருந்து 6.00 ரூபாய் என்பது என்ன நான்கணா உயர்வா, 50 பைசா உயர்வா; 6.00 ரூபாயாக உயர்த்தி இருக்கிறீர்களே, எப்படி முடிந்தது? எதற்குக் கேட்டாலும் கடந்த கால நிதிநிலை அறிக்கையின் மீது குற்றம் சொல்லிக் கொண்டிருக்கிறீர்களே? 1½ ஆண்டு கால ஆட்சிக்குப் பிறகு ஏன் அப்போது நிதிநிலைமை தெரியாதா? இந்தப் புத்தகத்திலே நீங்கள் சட்டமன்றத்திலே இதைச் சொல்கிறபோது நிதி நிலைமை தெரியாதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, உரையை முடித்துவிடுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** அந்த உணர்வோடு கேட்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையெளிய மக்கள் போராடுகிற இந்தக் காலகட்டத்திலே இந்த அரிசி விலையை நீங்கள் குறைக்க வேண்டும். ஏனென்றால் இந்த ரேஷன் அரிசியை வாங்கிச் சாப்பிடுபவர்கள் எல்லாம் பெரிய மிட்டா மிராசுகள் அல்ல. ஏன், அரசு ஊழியர்கள்கூட யாரும் மிட்டா மிராசுகள் அல்ல. காலையிலே பல்லவன் போக்குவரத்து பஸ்ஸைப்பிடித்து Secretariat-லே பணியாற்றிவிட்டு மத்தியானம் தயிர் சாதத்தைச் சாப்பிட்டுவிட்டு சாயங்காலம் 5 மணிக்கு வீட்டுக்குப் போக முடியுமா என்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை மாண்புமிகு திரு. எஸ்.ஆர்.பி. (குறுக்கீடு) மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்களே, நீங்கள் பேசுகிறீர்களா, கடைசியாகப் பேசுகிறீர்களா? (குறுக்கீடு) நீங்கள் பேசுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கடைசி வாக்கியத்தோடு முடியுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** இதோ முடித்துவிடுகிறேன். இந்த அரிசியிலேகூட பல நியாயவிலைக் கடைகளிலே என்ன சொல்கிறார்கள் என்று சொன்னால் 6 ரூபாய் கொடுத்து 10 கிலோ அரிசி வாங்கினால்தான் மீதமிருக்கிற 10 கிலோ அரிசியை 3.50 ரூபாய்க்குக் கொடுப்போம் என்ற நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அந்த உணர்வோடு நான் உங்களிடம் கேட்டுக்கொள்வது, இந்த 20 கிலோ அரிசியையும் முழுமையாக 3.50 ரூபாய்க்குக் கொடுக்க வேண்டும். அது தான் இந்த நாட்டிலே வாக்களித்த பெரும்பான்மையான மக்களுக்கு வாய்ப்பாக இருக்கும் என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு)

**டாக்டர் க. பொன்முடி:** அதை உயர்த்தியிருப்பதற்கு நான் எங்களுடைய கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி (குறுக்கீடு) திரு. ஜி. பழனிசாமி, திரு. பழனிசாமி இருக்கையில் இல்லை.. திரு. ஜே. ஹேமச்சந்திரன், பேசுங்கள்.



**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜா, பேசவேண்டுமா? (குறுக்கீடு) நீங்கள் தீர்மானம் கொடுக்கவில்லை.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிசியின் விலை ஏற்றப்பட்ட பிரச்சினை சம்பந்தமான தீர்மானமாக இருந்தாலும், அரிசி விலையை உயர்த்த அரசு எடுத்த முடிவு ஓர் ஆழமான கொள்கை முடிவு என்று நாங்கள் கருதுகிறோம். ஆகவே இந்தக் கொள்கையைப் பற்றி ஒரு சில விஷயங்களைச் சொல்வதற்கு நாங்கள் கடமைப்பட்டிருக்கின்றோம். அதுமட்டுமல்ல, சற்று முன்னாலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கிற எங்களைப் பார்த்து சில கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். நியாயவிலைக் கடைகளிலே கொடுக்கப்படுகிற அந்த அரிசியினுடைய விலையை ஏற்றக்கூடாது என்று இங்கே இந்த அவையிலே நான் கேட்ட ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கக்கூடிய நேரத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே நியாயவிலைக் கடைகளில் வழங்கப்படுகிற அரிசியினுடைய விலையை உயர்த்த மாட்டோம் என்று சொன்னார்கள். ஆனால், இப்போது அதை உயர்த்தி இருக்கிறார்கள். 3 ரூபாய் 50 காசுக்கு 10 கிலோ; அடுத்த 10 கிலோ, 6 ரூபாய்க்கு கிடைக்கின்ற நிலையை இன்றைக்கு உருவாக்கி இருந்தாலும், இந்தக் கடைகளில் 6 ரூபாய்க்கு உள்ள 10 கிலோ அரிசியை வாங்கினால்தான் 3 ரூபாய் 50 காசுக்குள்ள அரிசி கிடைக்கும் என்ற ஒரு நிலை இருந்துகொண்டிருக்கிறது.

பிற்பகல் 12-30

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் குறிப்பிடுவதுபோல, அப்படி நியாய விலைக்கடைகளில் 6 ரூபாய் அரிசியை வாங்க வேண்டுமென்று ஊழியர்கள் பொதுமக்கள் யாரையும் கட்டாயப்படுத்தவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி ஒரு நிலைமையே இல்லை. மேலும் மாண்புமிகு உறுப்பினர், அவர்கள் சார்ந்திருக்கின்ற மார்க்ஸிஸ்ட் கட்சி ஆளுகின்ற மாநிலங்களில் நியாயவிலைக் கடைகளில் அரிசியின் விலை என்ன என்பது மாண்புமிகு உறுப்பினர்

அவர்களுக்குத் தெரியுமா என்பதையும் நான் இங்கே அறிய விரும்புகிறேன். மார்க்ஸிஸ்ட் கட்சி ஆளுகின்ற திரிபுரா மாநிலத்தில் நியாயவிலைக் கடைகளில் ரேஷன் கார்டுகளை A.P.L., B.P.L.-ல் என்று பிரித்து இருக்கிறார்கள். வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழ்பவர்களுக்கு திரிபுராவில் 6 ரூபாய் 15 காசு என்ற விலையில் கிலோ அரிசி வழங்கப்படுகிறது. அதில் வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ளவர்களுக்கு 8 ரூபாய் கிலோ என்ற விலைக்கு வழங்கப்படுகிறது.

அதைப்போலவே, மேற்கு வங்காளத்திலும் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆட்சிதான் நடைபெறுகிறது. அங்கேயும் A.P.L., B.P.L என்று பிரித்து இருக்கிறார்கள். அங்கேயும் B.P.L.-க்கு கிலோவுக்கு 6 ரூபாய் 15 காசு என்ற விலைக்கும், A.P.L.-க்கு 8 ரூபாய் என்ற விலைக்கும் வழங்கப்படுகிறது. ஆகவே, தமிழ்நாட்டில் நாங்கள் வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ளவர்கள், வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் என்று பிரிக்கவில்லை. எல்லோருக்கும் ஒரே விலையில் வழங்குகின்றோம். 10 கிலோ அரிசி, கிலோ ஒன்றுக்கு 3 ரூபாய் 50 காசு என்ற விலைக்கும், 10 கிலோ அரிசி கிலோ ஒன்றுக்கு 6 ரூபாய் என்ற விலைக்கும் எல்லோருக்கும் வழங்குகிறோம். எல்லா கார்டுகளுக்கும் வழங்குகிறோம். ஆனால் நீங்கள் ஆளுகின்ற மாநிலங்களில் பிரித்துவிட்டு, அங்கே கிலோ 6 ரூபாய் 15 காசு என்ற விலைக்கும் 8 ரூபாய் என்ற விலைக்கும் நீங்கள் கொடுத்துவிட்டு, இங்கே ஏன் எதிர்க்கிறீர்கள் என்பது எங்களுக்குப் புரியவில்லை.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையெல்லாம் பட்ஜெட் கூட்டத்திலே பேசப்பட்ட விஷயம்தான். மேற்கு வங்காளத்திலே ஏற்கெனவே 6 ரூபாய்தான் இருந்தது. திரிபுராவிலே ஏற்கெனவே 6 ரூபாய்தான். ஆனால் தமிழகத்திலே, தமிழக அரசு வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கிற மக்களுக்கு மலிவு விலையிலே வழங்கவேண்டுமென்று சொல்லி, 1800 கோடி ரூபாய் வரை மானியமாகக் கொடுத்து, இங்கே மலிவு விலையிலே கொடுக்கப்பட்ட அந்தக் கொள்கை இந்த அரசால் கைவிடப்பட்டிருக்கிறது என்பதுதான் எங்களுடைய கருத்து. ஆகவே ஒரு கொள்கை முடிவை எடுத்த பிறகு, அது அமல்படுத்தப்பட்டதற்குப் பிறகு, அந்த மக்கள் பாதிக்கப்படக்கூடிய முறையிலே நடவடிக்கை எடுக்க மாட்டோம் என்று இந்த அரசு அறிவித்ததற்குப் பிறகு இப்போது அது மாற்றப்பட்டு இருக்கிறது என்பது, ஒரு கொள்கை



ரீதியான நிர்பந்தத்திற்குப் பணிந்து செய்யப்பட்டிருக்கிறது என்பது எங்களுடைய கருத்து. ஏனென்றால், மத்திய அரசு இப்படிப்பட்ட மானியங்களைக் கைவிட வேண்டுமென்று வலியுறுத்தியதை இந்த அரசு இன்றைக்குக் கடைப்பிடித்து வருகிறது என்பது எங்களுடைய கருத்து. ஏற்கெனவே, நேற்றையதினம் நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்கூட இங்கே பேசுகின்ற நேரத்திலே 2,946 கோடிக்கு அதிகமான ரூபாய் மத்திய அரசு இந்த அரசுக்கு வழங்கவேண்டி இருக்கிறது என்று சொன்னார்கள். எப்படி பதினொன்றாவது நிதி கமிஷனிடம் பரிந்துரை வைத்திருக்கிறோம் என்று சொன்னார்கள். அதைப் பெறுவதற்கு என்ன நடவடிக்கையை எடுத்தீர்கள்? அதை எடுக்காமல் மத்திய அரசினுடைய நிர்பந்தத்திற்குப் பணிந்து நீங்கள் 2,946 கோடி ரூபாய் இழப்பை ஏற்றுக்கொண்டு, இங்கே ஏழையெளிய மக்களுடைய தலையிலே இப்போது இந்தச் சுமையைத் திணிக்கிறீர்கள் என்பதுதான் எங்களுடைய குற்றச்சாட்டு. ஏழையெளிய மக்களை நீங்கள் தாக்குகிறீர்கள் என்பதுதான் எங்களுடைய குற்றச்சாட்டு. நான் ஒன்றை இந்த நேரத்திலே பணிவன்புடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். 3 ஆயிரம் கோடி ரூபாய் 18-10-2002 அன்று டெல்லியிலே நடந்த முதல்வர்கள் மாநாட்டிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வேண்டுமென்று கேட்டார்கள். ஆனால், அதை வலியுறுத்தினீர்களா? அதைப் பெறுவதற்கான நடவடிக்கையை எடுத்திருக்கிறீர்களா? சென்ற சட்டமன்றக் கூட்டத்திலேயே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் 6 ஆயிரம் கோடி ரூபாய் இந்த நாட்டிலே இருக்கின்ற வசதிபடைத்தவர்களிடமிருந்து அரசுக்கு வர வேண்டியிருக்கிறது என்று சொன்னார்கள். அதை வசூலிக்க என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள்? அதில் எவ்வளவு வசூலித்திருக்கிறீர்கள்?

பிற்பகல் 12.35

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலை அவைக்குத் தந்து கொண்டிருக்கிறார்கள். 6 ஆயிரம் கோடி ரூபாய் வசதிபடைத்தவர்களிடமிருந்து வர வேண்டுமென்று சொல்லவில்லை. விற்பனை வரியைப் பொறுத்தவரைக்கும். Sales Tax-ஐப் பொறுத்தவரைக்கும், அவையெல்லாம் நிலுவையில் இருக்கின்றன. உயர்நீதிமன்றத்திலே, அதற்கும் அடுத்த நிலையிலே உச்சநீதிமன்றத்திலே, Sales Tax Appellate Tribunal-லே நிலுவையில் உள்ளன.

அவற்றையெல்லாம் விரைவிலே வசூல் செய்வதற்காக எந்தக் காலத்திலும் இல்லாத அளவிற்குத் துரிதமான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது. சமாதான் ஸ்கீம் என்ற ஒரு ஸ்கீமும் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. நீதிமன்றங்களால் விதிக்கப்பட்ட தடையாணைகளை எல்லாம் நீக்கி அந்தப் பணத்தையெல்லாம் வசூல் செய்ய கடும் நடவடிக்கைகளை, தக்க நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொண்டு வருகிறது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசுக்கு வர வேண்டிய பணத்தை வசூலித்து அதன் மூலம் ஏழை மக்களுக்கு ஆசுவாசத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கையை இந்த அரசு எடுக்கவில்லை என்பதுதான் எங்களுடைய கருத்து. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே 94 சதவீதம் அரசு ஊழியர்களுக்காகச் செலவு செய்யப்படுகிறது என்று சொன்னார்கள். உண்மை என்ன? அரசு ஊழியர் ஊதியம் 20 சதவீதம்தான். அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், மாநில அரசால் உதவிபெறும் பள்ளிகள் மற்றும் காவல் துறை செலவுகள் எல்லாம் தமிழக அரசு ஊழியர்களுடைய செலவு என்ற முறையிலே கணக்கிட்டுத்தான் இந்த 94 சதவீதம் என்று சொல்லப்படுகிறது. காவல் துறை...(குறுக்கீடு) அதைத்தான் இங்கே சொல்கிறேன். காவல் துறையை நவீனப்படுத்துவதற்கு செலவு செய்யப்படுகிறது. காவல் துறைக்குச் செலவு செய்யப்படுகிறது. இது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகளில் பேசி முடியுங்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தவறான கருத்துகளைக் கூறி அவையெல்லாம் பதிவாகிக்கொண்டிருக்கின்றன. ஆகவே, விளக்கம் கூற வேண்டிய கட்டாயத்திற்கு நாங்கள் தள்ளப்பட்டிருக்கிறோம். மாநில அரசின் மொத்த வருவாயில் நாங்கள் 94 சதவீதம் என்று குறிப்பிடவில்லை. மாநில அரசுக்கு வருகின்ற வரிப் பணத்தில் 94 சதவீதம் அரசு ஊழியர்களுக்குச் செலவிடப்படுகிறது என்று சொன்னோம். அதில் காவல் துறையும்தான் அடக்கம். ஆனால், காவல் துறையை நவீனமயமாக்குகின்ற திட்டத்திற்கு இந்தப் பணம் செலவிடப்படவில்லை. அதற்குத் தனியாக மாநில அரசு ஒதுக்குகின்றது. அதற்கு மத்திய அரசும் ஓரளவுக்கு நிதி அளிக்கின்றது. அதைப் பற்றி



நாங்கள் குறிப்பிடவில்லை. இந்த மாநில அரசுக்கு வருகின்ற மொத்த வரிப் பணத்தில் 94 சதவீதம் என்பது அரசு ஊழியர்களுக்குச் சம்பளங்கள் கொடுப்பதற்கும், அகவிலைப்படி கொடுப்பதற்கும், பென்ஷன் கொடுப்பதற்கும் செலவிடப்படுகிறது என்பதைத் தெளிவாக்க விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, இன்றையதினத்திலேகூட, இன்றைய நிலைமையில்கூட இந்தியாவிலேயே நியாயவிலைக் கடைகளில் மிகவும் குறைந்த விலைக்கு அரிசி வழங்கிக்கொண்டிருக்கின்ற ஒரே மாநில அரசு தமிழ்நாடுதான். (மேசையைத் தட்டும் ஒலி) மற்ற எல்லா மாநிலங்களிலும் குறைந்தபட்ச விலை 6 ரூபாயாக இருக்கிறது. அதிகபட்ச விலை அரிசிக்கு கிலோ ஒன்றுக்கு 9 ரூபாய் என்று இருக்கிறது. ஆனால், தமிழ்நாட்டில்தான் குறைந்தபட்ச விலை 3.50 ரூபாய் என்றும் அதிகபட்ச விலை 6 ரூபாய் என்றும் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன், இரண்டு மணித்துளிகளில் பேசி முடியுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி வரிசையிலே அதாவது, எங்களைத் தாக்கி, தவறான கருத்துகளை ஆதரித்துக் இருக்கக்கூடியவர்கள் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டிருக்கிறார்கள் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசி, அதற்கு நாங்கள் பதில் சொல்ல வேண்டாமா? வெளியிலே இருக்கின்ற மக்கள் எங்களைத் தவறாக நினைக்கமாட்டார்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பதில் சொல்லுங்கள். அன்றாடம் பதில் சொல்கிறீர்கள். இரண்டு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** ஆகவே, இது நியாயமல்ல. எங்களுக்கு இதன்மேல் விளக்குவதற்கு நியாயமான அவகாசம் தர வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. பொன்முடி 7 நிமிடம்தான் பேசினார். 7 நிமிடம்தான் மற்ற உறுப்பினர்கள் எல்லாம் பேச வேண்டும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நான் ஒன்றும் அதிகமான நேரமோ, தேவையில்லாமல் நேரமோ எடுக்கவில்லை. அதாவது அரசு

ஊழியர்களுக்கு ஊதியம் கொடுக்கப்படுவது என்பது இன்றைக்கு பஞ்சாலைத் தொழிலாளர்கள் மாதிரியோ, மின்சாரத் தொழிலாளர்கள் மாதிரியோ, தோட்டத் தொழிலாளர்கள் மாதிரியோ பேசி, அவர்களும் அவர்களுடைய பிரதிநிதிகளும், அரசு நிர்வாகத்திலுள்ள பிரதிநிதிகளும் பேசி முடிக்கப்படுகிற விஷயம் அல்ல. அரசினுடைய ஏற்பாடுகள் வழி அல்லது அந்த machinery வழி நிர்ணயித்து அமல்படுத்தப்பட்டிருக்கிற ஒன்று. அதிலே ஏதாவது குறையிருந்தால் அவர்கள் மனுதான் கொடுக்க முடியும். அவர்கள் பேசி அவர்களுடைய அந்த representation அடிப்படையிலே முடிவு பண்ணுவதல்ல, அவர்களுடைய representatives அரசோடு பேசி முடிவு செய்யப்படுவதல்ல. ஆகவே, இன்றைக்கு 94 சதவீதம் கொடுக்கப்படுகிறது என்றால், அது அரசால் கொடுக்கப்பட்டது. அரசினுடைய ஏற்பாட்டால் கொடுக்கப்பட்டது. ஆனால், நிதியாதாரத்தைக் கண்டெடுக்க வேண்டும். எங்கிருந்து கண்டெடுக்க வேண்டும் என்றால் மத்திய அரசிடமிருந்து பெற வேண்டும். மத்திய அரசிடமிருந்து அதைப் பெறுவதற்கு, மாநிலத்திலே வசதி படைத்தவர்களிடமிருந்து அதைப் பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படாமல்.... (மணியடிக்கப்பெற்றது).

*பிற்பகல் 12-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் பேச்சை முடியுங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்;** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இயக்கத்தைச் சார்ந்த West Bengal Finance Minister அவர்கள் கலந்து கொண்ட அண்மையிலே பிரதமர் தலைமையில் நடந்த முதலமைச்சர்கள் மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் பேசியபோது தமிழகத்திற்கு மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கிற எல்லா மாநிலங்களுக்கும் நிதிப் பற்றாக்குறை இருக்கின்ற நிலையில் நிதியாதாரங்களைப் பெருக்குவதற்கு உள்ள வழிவகைகளை எவ்வளவு தெளிவாகச் சொன்னார்கள் என்பதையும், அழுத்தந்திருத்தமாகச் சொன்னார்கள் என்பதையும், வெளிப்படையாகச் சொன்னார்கள் என்பதையும், சில சீர்திருத்தங்களுக்கு மற்றவர்கள் எல்லாம் அஞ்சிக் கொண்டிருந்தபோது—பூனைக்கு யார் மணி கட்டுவது என்ற அச்சம் இருந்தபோது—பூனைக்கு மணியை நான் கட்டுகிறேன் என்று மாநிலங்களுடைய பொருளாதாரத்தைத் தலை நிமிரச் செய்ய



வேண்டும் என்று வலியுறுத்திப் பேசியதை உங்களது West Bengal Finance Minister, Mr. Gupta மனமாரப் பாராட்டினார். திரிபுரா Finance Minister மனமாரப் பாராட்டினார். அவர்களைக் கேட்டு நீங்கள் தெரிந்துகொள்ளலாம். அந்த அளவுக்கு புரட்சித் தலைவி அவர்கள் கூறிய கருத்துகள் பற்றி மத்திய அரசே சிந்திக்கத் துவங்கி விட்டது. அத்தகைய சிந்தனைக்கு வித்திட்டு தற்போது நடந்த முதலமைச்சர்கள் மாநாட்டில் வலியுறுத்திப் பேசினார் என்பதை அவைக்கு கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** ஆகவே, நிதியமைச்சர் அவர்கள் எங்களிடம் என்ன கேட்கிறார்கள்? முதல்வர்கள் மாநாட்டில் வந்து இப்படியெல்லாம் பேசிய முதலமைச்சர் அவர்களா உங்கள் மாநிலத்தில் இப்படியெல்லாம் செய்கிறார்கள் என்று கேட்கிறார்கள். அதாவது முதலமைச்சர் அவர்கள் இன்று நிதிப் பற்றாக்குறை என்ற பெயரிலே இந்த நாட்டிலே இருக்கிற மக்களுடைய பல்வேறு வசதிகளை இன்றைக்குக் குறைத்துக் கொண்டிருக்கிறார்கள். தேர்தல் காலத்தில் அவர்களுடைய தேர்தல் அறிக்கையில் விவசாயிகளைப் பொறுத்த அளவிலே அவர்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த கரும்பு, பருத்தி அதேபோன்று இரப்பர், தேயிலை, மிளகாய்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், ஒரு நிமிடத்தில் பேச்சை முடியுங்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விஷயத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்களின் கவனத்திற்கு, இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வர நான் விரும்புகிறேன். மத்திய அரசிடமிருந்து மாநில அரசு ஏன் நிதியுதவியை கேட்டுப் பெறவில்லை, ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை, என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி எழுப்பினார்கள். மத்திய அரசிடமிருந்து 3,000 கோடி ரூபாய் உதவி வேண்டுமென்று திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டே இருக்கிறோம். அவர்கள் கொடுக்கவில்லை. இதைப்போலவே West Bengal மாநில அரசும் மத்திய அரசிடமிருந்து நிதியுதவியைக் கோரியது. அவர்களுக்கு ஏறக்குறைய 800 கோடி ரூபாய் உதவி அளிக்கப்பட்டது. மேற்கு வங்காளத்திற்கு மத்திய அரசு இப்போதுதான், அண்மையில் 800 கோடி ரூபாய் உதவி அளித்திருக்கிறது. ஆனால், தமிழ்நாட்டிற்கு

எதுவும் தரவில்லை. அதனால்தான் அண்மையில் பிரதமர் கூட்டிய முதலமைச்சர்கள், நிதியமைச்சர்கள் மாநாட்டில் மேற்கு வங்காள நிதியமைச்சர் அவர்கள் கலந்துகொண்டார்கள். நான் மாநில அரசுகளுக்கு இருக்கின்ற சிரமங்களை எடுத்துக் கூறி இத்தகைய அகவிலைப்படியைத் தருவது சாத்தியம் ஆகாது, அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் தடுத்து நிறுத்த வேண்டும் என்று கேட்டதற்கு மேற்கு வங்காள மாநிலத்தின் நிதியமைச்சர் அவர்கள் அந்தக் கருத்தை ஆதரிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உங்களுக்கு வேண்டிய நிதி கிடைத்து விட்டது. அதனால் நீங்கள் ஆதரிக்கவில்லை. (குறுக்கீடு)

**திரு. ஜி. பழனிசாமி:** இது தமிழ்நாடு; மேற்கு வங்கம் அல்ல. இங்கே நிதியாதாரங்களுக்காக நாங்கள் போராடிக் கொண்டிருக்கிறோம், நாங்கள் ஏன் மேற்கு வங்கத்திற்காகப் போராட வேண்டும்?

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர்கள் மாநாட்டில் என்ன நடந்தது என்பது எங்களுக்குத் தெரியாது. அந்த நிதியமைச்சர் அவர்களும் இதுசம்பந்தமாகச் சொன்னது என்ன என்பதை விசாரித்து பதில் சொல்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி பேச்சை முடித்துவிடுங்கள், திரு. பழனிசாமி.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** ஐந்து நிமிடம் வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, வேண்டாம், வேண்டாம். மொத்தத்தில் 7 நிமிடம் பேசினார். ஒரு நிமிடத்தில் முடியுங்கள். ஒரு மணித்துளியில் முடியுங்கள். இன்னும் ஏழு சட்டமுன்வடிவுகளை ஆய்வுக்கு எடுக்க வேண்டும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பட்ஜெட் விவாதம் நடக்கக்கூடிய நேரத்திலே மேற்கு வங்காள நிதியமைச்சருடைய Budget Speech-ஐ இங்கே படித்துக் காட்டினேன். அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிற நடவடிக்கைகளை நான் எடுத்துச் சொன்னேன்.

மத்திய அரசிடமிருந்து இந்த நிதியைப் பெற வேண்டுமென்றால் உலகமயம், தாராளமயம் என்ற அந்தக் கொள்கையை ஏற்றுக்கொள்ளக்கூடியவர்களுக்குத்தான் நிதி கொடுக்கப்படுகிறது என்றும் அப்படி கொடுக்கப்படுவதற்குத் தகுந்த அளவிலே உள்ள agreement-



களைப் போட்டால்தான் தருகிறார்கள் என்றும் நிதியமைச்சர் அவர்களே இந்த அவையில் சொன்னார்கள்.

பிற்பகல் 12-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி முடியுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** ஆகவே, அந்த வகையிலே..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அந்த முறையிலே அவர்கள் agreement போடவில்லை. அவர்கள் அந்த மாநிலத்திலே இருக்கிற மக்களைத் திரட்டி அந்த மாநிலத்தினுடைய உரிமைகளைப் பெறுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்ததனுடைய விளைவாக மத்திய அரசு அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. ஆனால், அந்தப் பாதையை இங்கு இந்த அரசு கடைப்பிடிக்கவில்லை என்பது எங்களுடைய தாழ்மையான கருத்து.

மாண்புமிகு எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் இந்த மாநிலத்தினுடைய முதலமைச்சராக இருந்த நேரத்திலே அவர்கள் போராடினார்கள். அவர் அதற்காக உண்ணாவிரதப் போராட்டம்கூட நடத்தினார். அப்படி உரிமைகளைப் பெறுவதற்கு, இந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அன்று முயற்சி எடுத்தது. ஆனால், நீங்கள் பாரதிய ஜனதா கட்சியினுடைய, மத்திய அரசினுடைய நிர்பந்தத்திற்குப் பணிந்து இன்று மக்களைத் தாக்கக்கூடிய, அவர்களுடைய நடவடிக்கைகளை எல்லாம் இன்றைக்கு இங்கே அமல்படுத்துவது என்ற இந்த நிலையை எடுத்ததனுடைய விளைவாகத்தான் ஏழை மக்கள் தாக்கப்படக்கூடிய முறையிலே அரிசியினுடைய விலையை ஏற்ற வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும், உரையை முடித்து விடுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

225173
சென்னை-600 009

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் போராடுகின்ற நேரத்திலே அவர்களுக்கு போனஸ் மறுக்கப்படுகிறது; ஊதிய உயர்வு மறுக்கப்படுகிறது; அந்த நிலை இன்றைக்குத் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இன்று அமைதியாக இருக்கிற தமிழகத்திலே மக்களை பரஸ்பரம் மோத வைக்கக்கூடிய முறையிலே உள்ள மத மாற்றத் தடைச் சட்டத்தை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத் தனியாகப் பேசலாம். திரு. பழனிசாமி (குறுக்கீடு) திரு. பழனிசாமி, (குறுக்கீடு) திரு. பழனிசாமி பேசுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. (குறுக்கீடு) இல்லை. 10 மணித் துளிகளுக்கு மேலே ஆகிவிட்டது. (குறுக்கீடு) திரு. பழனிசாமி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும்.

**திரு. இ. புகழேந்தி:** Point of order. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். கடந்த மார்ச் 27 ஆம் தேதி....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. திரு. புகழேந்தி விளக்கம் எல்லாம் வேண்டாம். திரு. பழனிசாமி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.......



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புகழேந்தி உட்காருங்கள் (குறுக்கீடு) திரு. பழனிசாமி பேசுங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், திரு. பழனிசாமி. (குறுக்கீடு) திரு. புகழேந்தி உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. பழனிசாமி, பேசுங்கள். இல்லாவிட்டால் அடுத்த உறுப்பினரைக் கூப்பிடுகிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**திரு. ஜி. பழனிசாமி:** சரி. (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.........

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) ஆகவே, இப்படிப்பட்ட..............

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. ராஜா, உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. ராஜா, உட்காருங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**திரு. ஜி. பழனிசாமி:** மைக் இல்லாமலே பேசுகிறீர்கள். பதிவு ஆகாது. (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேண்டாம். (குறுக்கீடு) வேண்டாம்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டினுடைய மக்களுக்கு...

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** தமிழ்நாட்டினுடைய மக்களுக்கு... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதி இல்லாமல் பேசக்கூடாது. உட்காருங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

இடையூறாக இருக்கிறது. அதனாலே..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, நீங்கள் பேசுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்திலே நம்முடைய தமிழ்நாடு அரசு, நடைமுறையில் ஒரு கிலோ 3 ரூபாய் 50 பைசா என்று விற்ற ரேஷன் அரிசியை ஒரு கிலோ 6 ரூபாய் என்ற அளவுக்கு விலை உயர்த்தி, மந்திரிசபை கூடி, உடனடியாக இதை அறிவித்திருப்பது தமிழ்நாட்டு மக்களுக்கு ஒரு பேரதிர்ச்சியையும் பெரும் பாதிப்பையும் ஏற்படுத்தியிருக்கிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று சொல்லக்கூடிய ஏழை எளிய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், கிராமப்புற மக்கள் பெரிய அளவிற்கு ஒரு ஆட்சி மாற்றத்தைத் தமிழகத்தில் உருவாக்கி ஒரு நன்மை கிடைக்கும் என்ற எதிர்பார்ப்போடு இந்த ஒன்றரை ஆண்டு காலம் இருந்தார்கள். ஆனால் அவர்களுக்கு இது ஒரு பேரிடியாக இன்றையதினத்திலே அமைந்திருக்கிறது. இது சாதாரணமானது அல்ல. நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்; நிதியமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்; நீங்கள் ஒரு திட்டத்தையும் புதியதாகக் கொண்டு வரவே வேண்டாம். 5 ஆண்டு காலத்திலேயும் செய்ய வேண்டாம். எந்த ஒரு திட்டத்தையும் நீங்கள் கொண்டுவர வேண்டாம். இருக்கிற திட்டங்களை அதுவே, நடைமுறையில் இருக்கிற சட்டங்களையாவது மாற்றாமல் இருந்தால் போதும். அதுவே தமிழ்நாட்டு மக்களைப் பாதுகாக்கிறது. நீங்கள் அதற்கு உதவி புரியுங்கள். பொருளாதார நெருக்கடி இருக்கிறது; நிதி நெருக்கடி இருக்கிறது; நாங்கள் உணர்கிறோம். நான் இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், இந்தியாவிலேயே தமிழகத்தை முதல் மாநிலமாகக் கொண்டு வருவேன் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்திலே அறிவித்தார்கள். உண்மையிலேயே அது எங்களுக்கெல்லாம் எல்லையற்ற மகிழ்ச்சியை அளித்தது.



பிற்பகல் 12-50

புதிய திட்டங்களையும், புதிய சிந்தனைகளையும் தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பதை நாங்கள் இந்த மாமன்றத்தில் வரவேற்றிருக்கிறோம், பாராட்டியிருக்கிறோம். நாங்கள் இல்லை என்று சொல்ல முடியாது. ஆனால் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த ஒன்றரை ஆண்டு காலத்தில் தமிழ்நாட்டு மக்களுக்கு நீங்கள் சில நன்மைகளைச் செய்திருக்கிறீர்கள். நாங்கள் இல்லை என்று சொல்ல முடியாது. விவசாயிகள் பெற்ற கடன் ரூ.310 கோடி, வட்டியை, அபராத வட்டியைத் தள்ளுபடி செய்தீர்கள். ஆனால் 310 கோடி ரூபாய் இன்றைக்கு விவசாயிகள் நன்மை அடைந்திருந்தாலும் 3000 கோடி ரூபாய் அளவுக்கு இன்றைக்குத் தமிழ்நாட்டு மக்கள் மட்டுமல்ல, தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற விவசாயிகள் பாதிப்புக்குள்ளாகி இருக்கிறார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புகழேந்தி, அவர் பேசிக் கொண்டிருக்கிறார். உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. ஜி. பழனிசாமி:** அது இருக்கட்டும் ரைட். (குறுக்கீடு) அவர்கள் சொல்லுகிற கணக்கு; எனக்கு அனுமதி கொடுங்கள் நீங்கள். ஏனென்று சொன்னால் 3000 கோடி ரூபாய் அளவுக்குத் தமிழ்நாட்டு விவசாயிகள் பெரிய பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள். பல துறைகளிலே இருக்கக்கூடியவர்கள், வேலைவாய்ப்பை இழக்கக்கூடிய திடீர் அறிவிப்புகள் எல்லாம் நாள்தோறும் வந்துகொண்டிருக்கின்றன. சாலைப் பணியாளர்கள் பெரிய பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள். அது எல்லோருக்கும் தெரியும். ரூ.10ஆயிரம், ரூ.20ஆயிரம் சம்பளம் வாங்கக்கூடிய ஆட்கள் கிடையாது. சாதாரண ஏழை, எளியவர்கள்,

கடைக்கோடியில் இருக்கக்கூடிய கடைநிலை ஊழியர்கள்; 1500 ரூபாய், 2000 ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கக்கூடிய அந்த சாலைப் பணியாளர்களைத் திடீரென்று நீக்குகிறீர்கள். ஒரு நிமிடத்தில் நீக்குகிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. பழனிசாமி, தீர்மானத்திற்கு வாருங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** தீர்மானத்தின்மீதுதான் சொல்லுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இதிலே அதுகுறித்துப் பேசுவதற்கு நேரம் இல்லை.

**திரு. ஜி. பழனிசாமி:** சாதாரணமானவர்கள் எல்லாம் இந்த அரிசியை வாங்கி சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சியில், அவர்களுக்கு எவ்வளவோ சோதனைகள் வந்தன, எவ்வளவோ சங்கடங்கள் வந்தன, மத்திய அரசு எவ்வளவோ நிர்பந்தம் கொடுத்தும் அரிசி விலையில் அவர் கை வைக்கவில்லை. ஒரு ரூபாய் 50 காசுக்கு மேலே அரிசி விற்கப்படவில்லை. கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பின்னர், இரண்டு ரூபாய் என்று அரிசி விலையை உயர்த்தியபோது கடும் கண்டனம் வந்தது. அரிசி விலையை உயர்த்தாமல் இருந்தார்கள்.

இன்றைக்கு காவிரியிலே தண்ணீர் வரவில்லை. தமிழகம் முழுவதும் வறட்சி ஏற்பட்டிருக்கிறது, வேலைவாய்ப்புகள் இல்லை என்று எல்லா நிலைமைகளையும், கொடூரமான வறட்சி நிலைமைகளையும், அவர்கள் வாடிக்கொண்டிருக்கின்ற நிலைமைகளையும், எல்லாவற்றையும் தமிழ்நாட்டு முதலமைச்சராகிய நீங்கள் சொல்லுகிறீர்கள். ஆனால், சொல்லிவிட்டு என்ன செய்கிறீர்கள்? குருவி தலையிலே பாறாங்கல்லைத் தூக்கி வைக்கிறீர்கள். அது என்ன முறை? ஏழ்மையைச் சொல்லுகிறீர்கள்; வறுமையைச் சொல்லுகிறீர்கள்; வேலையில்லாத் திண்டாட்டம் பற்றிச் சொல்லுகிறீர்கள்; குடிப்பதற்குத் தண்ணீர் இல்லை என்று சொல்லுகிறீர்கள், சோதனை வரும் என்று சொல்லுகிறீர்கள், பொருளாதார நெருக்கடி என்று சொல்லுகிறீர்கள்; ஆனால் இவ்வளவுக்குப் பிறகும், அதனால் வாடிக்கொண்டு, வாழ்ந்து கொண்டிருக்கின்ற அந்த மக்கள்மீது குருவி தலையில் பாறாங்கல்லைத் தூக்கி வைப்பதுபோல தூக்கி வைத்தால் எப்படித் தாங்க முடியும்? எங்களுடைய திருவாரூர் மாவட்டத்தில் இதுவரை வரலாறு காணாத



அளவுக்கு எத்தனை தொற்று நோய்கள்? எவ்வளவு பேர் காலராவால் இறந்துபோய் இருக்கிறார்கள்? அரசாங்கம் கணக்குக் கேட்டிருக்கிறதா? நடவடிக்கை எடுத்து இருக்கிறதா? ஒரு பள்ளிக்கூடச் சிறுவன் பட்டினிச் சாவால் இறந்துபோய் இருக்கிறான் இன்றைக்கு.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனுபவம்மிக்க மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் சபைக் குறிப்பிலே பதிவு செய்ய வேண்டும் என்பதற்காகத் தவறான தகவல்களைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய நல்லாட்சியில் தமிழகத்தில் பட்டினிச் சாவு என்று எதுவும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல காலராவால் எந்த இறப்பும் ஏற்படவில்லை என்பதை நான் இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** குற்றம் சொல்ல வேண்டும் என்ற முறையில் சொல்லவில்லை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் பேசுகின்றபோது நியாய விலைக் கடைகளில் 3 ரூபாய் 50 காசு என்ற விலைக்கு அரிசி பெறவேண்டுமானால் கட்டாயமாக கிலோ 6 ரூபாய் என்று விற்கப்படும் அரிசியை வாங்கச் சொல்லிக் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள் என்று இங்கே ஒரு தவறான தகவலைத் தெரிவித்தார்கள். அதனால் சில விவரங்களை நான் கேட்டுப் பெற்றிருக்கிறேன்.

இந்த விலை மாற்றத்தைச் செய்த பிறகு, அக்டோபர் மாதத்தில் நியாய விலைக் கடைகளில் எவ்வளவு அரிசி விற்கப்பட்டது என்று ஓர் ஆய்வு நடத்தப்பட்டது. சென்னைக்கான விவரம் மட்டும் இப்போது கிடைத்திருக்கிறது. 20-10-2002 வரை சென்னையில் நியாய விலைக் கடைகளில் கிலோ ஒன்றுக்கு 3 ரூபாய் 50 காசு என்று விற்கப்படும் அரிசி 4774 மெட்ரிக் டன் அளவுக்கு விற்கப்பட்டிருக்கிறது. ஆனால், அதேநேரத்தில் கிலோ ஒன்றுக்கு 6 ரூபாய் என்று விற்கப்படும் அரிசி வெறும் 1584 மெட்ரிக் டன் அளவுக்குத்தான் விற்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இதை ஒப்பிட்டுப்

பார்க்கும்போது 3 ரூபாய் 50 காசு என்று விற்கப்படும் அரிசியோ 4774 மெட்ரிக் டன் அளவுக்கு விற்கப்பட்டிருக்கிறது. ஆனால் 6 ரூபாய் அரிசி வெறும் 1584 மெட்ரிக் டன் அளவுக்குத்தான் விற்கப்பட்டிருக்கிறது என்ற புள்ளிவிவரங்களில் இருந்தே யாரும் கட்டாயப்படுத்தப்படவில்லை, 6 ரூபாய் அரிசியை வாங்கினால்தான் 3 ரூபாய் 50 பைசாவுக்கு அரிசி தரப்படும் என்ற நிலை இல்லை என்பதைத் தெளிவாக்க விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-55*

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** எங்கள் கிராமப்புறப் பகுதிகளில் இப்படி நடக்கிறது என்பதை நான் ஆதாரத்தோடு நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி பேசுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதை அரசின் மீது ஏதோ ஒரு குற்றம் சுமத்த வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. இவை நடைமுறையிலே இருக்கிற, நடந்துகொண்டிருக்கிற காரியங்கள். அதேமாதிரி நோய்வாய்ப்பட்ட மக்களைப் பாதுகாப்பதிலே எங்களைப் போன்றவர்களெல்லாம் கூடவே இருந்து செய்த காரணத்தினாலேதான் நான் இதை நம்முடைய அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

பட்டினிச் சாவு இல்லை என்று நீங்கள் சொல்ல முடியாது. வறுமையிலே செத்தார்கள் என்று நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள். பட்டினிச் சாவு என்று வேண்டாம். நடந்ததா, இல்லையா? 8 மாத காலம் ஆயிற்று, விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போதுகூட 21 கோடி ரூபாய்க்கு அந்த மாவட்டங்களில் உள்ள மக்களுக்கு வறுமையிலே வாடிக் கொண்டிருக்கின்ற, வாழ்ந்து கொண்டிருக்கின்ற அந்த மக்களுக்கு தீபாவளிக்கு ஒரு பரிசு வழங்க வேண்டுமென்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள், 8 மாதகாலம் அவர்களுக்கு வேலை கிடையாதே! அப்படிப்பட்ட ஒரு பெரிய சோதனையான காலகட்டத்தில் நீங்கள் அரிசி விலையை உயர்த்தியிருக்கிறீர்கள், 1 ரூபாய் 25 பைசா ஒரு கிலோவுக்கு அரிசி விலை ஏற்றம். அது என்ன, 10 கிலோவுக்கு 6 ரூபாய்; 10 கிலோவுக்கு ரூபாய் 3.50? நீங்கள் சொல்லிவிட வேண்டியது தானே, 1.25 பைசா தான் உயர்த்தியிருக்கிறோம் என்று. ஆக, 20 கிலோ அரிசி 70 ரூபாய்க்கு வாங்கப்பட்டது; இன்றைக்கு 95 ரூபாய்க்கு வாங்க வேண்டிய அவசியம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் சொன்னதுபோன்று, இந்த 3.50 ரூபாய்க்கு அரிசி வாங்குவதற்கு இருக்கிற காசை எடுத்துக்கொண்டுபோய், நேரடியாக அமுதம் அங்காடிக்குப் போனால் அவர்கள் சொல்கிறார்கள், முதலில் இந்த 6 ரூபாய் அரிசியை வாங்கிக் கொண்டு செல்லுங்கள்; அதற்குப் பிறகுதான் உங்களுக்கு 3.50 ரூபாய் அரிசி வழங்க முடியும் என்று சொல்கிறார்கள். ஏன் என்றால் அரசாங்கத்திலே நீங்கள் உத்தரவு போட்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு) புள்ளிவிவரம் இல்லை. நான் எந்த அங்காடிக் கடையிலே வேண்டுமானாலும் வந்து சொல்கிறேன். நேரடியாக அங்கே நான் போய் விசாரித்திருக்கிறேன். பல கடைகளில் விசாரித்திருக்கிறேன். 6 ரூபாய் அரிசியை முதலில் விநியோகம் பண்ணுங்கள் என்று அவர்களுக்குச் சொல்லியிருக்கிறார்கள். இதேமாதிரி பல கடைகளிலே நடந்திருக்கிறது.......



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சர் அவர்கள் அதுகுறித்து விளக்கம் சொல்லிவிட்டார்கள். கட்டாயப்படுத்தவில்லை.; அப்படி வாங்க வேண்டுமென்று கட்டாயம் இல்லை என்று சொல்லி, அந்த விளக்கத்தையும், அளவையும் சொல்லி விவரத்தையும் சொல்லியிருக்கிறார்கள். எனவே, மீண்டும் மீண்டும் அதையே நீங்கள் பேசுவது முறையல்ல.

**திரு. ஜி. பழனிசாமி:** அதேபோன்று இன்னுமொன்று, என்னவென்று சொன்னால், இன்றைக்குத் தமிழ்நாட்டிலே இருக்கிற மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே எத்தனைபேர் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்று மத்திய அரசு தகவல்கள் கேட்டும்கூட நம்முடைய மாநில அரசு, வழங்காததாலேயேகூட, மத்திய அரசால் வழங்கப்படக்கூடிய 3 ரூபாய் ரக அரிசி, 30 கிலோ அரிசி 3 ரூபாய் விலைக்கு வழங்கப்பட முடியாமல் இருக்கிறது. இன்றைக்கு அதை வழங்க முடியவில்லை என்று நாடாளுமன்றத்திலே அறிவிக்கப்படுகிறது. உச்சநீதிமன்றத்திலே இதை எதிர்த்து வழக்கே போட்டிருக்கிறார்கள். தமிழ்நாடு அரசு அப்படிப்பட்ட கணக்கை எங்களுடைய கவனத்திற்கே கொண்டுவரவில்லை என்று மத்திய அரசு சொல்கிறது. இதெல்லாம் உண்மைதானே? இது...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவைக்குத் தவறான தகவலைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். மைய அரசினுடைய கணக்கெடுப்பின்படி 21 சதவீதம் people தான் living

below poverty line. ஆனால், மற்றொரு அமைப்பினுடைய கணக்கெடுப்பின்படி people living below poverty line 35 சதவீதம். ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஏழை எளிய மக்கள் என்ற நிலையில் இருக்கின்ற எல்லோருக்குமே 10 கிலோ அரிசி 3 ரூபாய் 50 காசு என்று கொடுக்கிறது. ஒரு கோடியே 20 இலட்சம் பேருக்கு அப்படி அரிசி தரப்படுகிறது.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பைத்தான் சொல்கிறேன். தவறான தகவலை நான் நம்முடைய இந்த மன்றத்திற்குக் கொடுக்கத் தயாராக இல்லை. ஆனால், நடைமுறையிலே இருந்ததாகச் சொல்கிறார்கள். வறுமைக் கோட்டிற்குக் கீழே எவ்வளவு பேர் வாழ்கிறார்கள் என்கிற கணக்கு இதுவரையிலே மாநில அரசால் மத்திய அரசுக்கு அனுப்பப்படவில்லை என்று மத்திய அரசு குற்றம் சாட்டுகிறது. அந்த வகையில்தான் நான் சொல்கிறேன். ஆகையினால் நம்முடைய மாநில அரசு உயர்த்தியிருக்கிற அரிசி விலையை நீங்கள் திரும்பப் பெற வேண்டும். பழைய விலையிலேயே வழங்கவேண்டுமென்று சொல்வதோடு, இப்படி மந்திரிசபை கூடி நீங்கள் முடிவெடுத்திருப்பதற்குக் கண்டனத்தைத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு)

**திரு. எச். ராஜா:** தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிஷம், மாண்புமிகு உறுப்பினர் மத்திய அரசையும், பாரதிய ஜனதா கட்சியையும் குறை சொல்லிப் பேசியிருப்பதால் அதற்குப் பதில் சொல்லாமல் விட்டால்-I don't want it to go--unrebutted ஆகிவிடும். ஒரேயொரு நிமிஷம், என்னவென்றால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் என்ன சொல்ல வேண்டும்?

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்கள் மத்திய அரசு, மாநில அரசு அரிசி விலையை உயர்த்துவதற்காக நிர்பந்தப்படுத்துகிறது என்று சொன்னார்கள். ஆனால், அம்மாதிரி



அல்ல, மத்திய அரசு 3.00 ரூபாய்க்கு 35 கிலோ அரிசி மாதத்திற்கு என்று வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்பவர்களுக்குத் தருகிறது. ஆனால், தமிழகத்திலே தமிழக அரசு அனைவருக்குமாக அதேபோல் கொடுப்பதாலே, Below Poverty Line list கொடுங்கள் என்று கேட்டதற்கு செப்டம்பர் மாதமே 16 மாநிலங்கள் பட்டியல் தரவில்லை என்று உச்ச நீதிமன்றத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே தமிழகமும் இருக்கிறது. எனவே, மத்திய அரசாங்கம் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கின்ற மக்களுக்கு அரிசி விலையை ஏற்ற வேண்டுமென்று எந்தவிதத்திலுமே நிர்பந்தப்படுத்தாதபோது மத்திய அரசாங்கத்தை இதிலே குறை சொல்வதற்கு எந்த இடமும் இல்லை என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மத்திய அரசு மானியங்களை எடுத்துவிட வேண்டுமென்று மாநிலங்களை நிர்பந்தப்படுத்துகிறதா, இல்லையா?

**திரு. எச். ராஜா:** அதற்கும் அரிசி விலை ஏற்றத்திற்கும் என்ன சம்பந்தம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. என். நன்மாறன்:** தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிஷம். அரிசி மட்டும் அல்ல. வேறு பிரச்சினைகளும் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது இந்த அந்தியோதயா அன்னயோஜனா திட்டத்தைப்பற்றிக் குறிப்பிடுகிறார்கள் என்று நினைக்கிறேன். 7.5 இலட்சம் பேருக்குத்தான் அந்த அந்தியோதயா திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று மத்திய அரசாங்கம் அனுமதி கொடுத்து, அந்தத் திட்டத்தையும் இப்போது தமிழகத்திலே செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, பேசுங்கள். (குறுக்கீடு) இல்லை, திரு. ஜி.கே. மணி பேசுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, வேண்டாம். திரு. மணி, பேசுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். திரு. சிவபுண்ணியம், உங்களுக்குப் புண்ணியமாகப் போகட்டும். உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி, பேசுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக அரசின் அமைச்சரவை கூடி சாதாரண அடித்தட்டு மக்கள் பயன்படுத்தி வந்த இந்த ரேஷன் அரிசி விலையை ரூ. 3.50-லிருந்து ரூ. 6 வரை உயர்த்தியுள்ளது. ஏதோ பாட்டாளி மக்கள் கட்சி மாத்திரம் அல்ல; சட்டமன்றத்திலே இருக்கக்கூடிய அனைத்து எதிர்க் கட்சிகளும் இந்த நாட்டிலே இருக்கக்கூடிய ஒட்டுமொத்தமான மக்களும் எதிர்க்கக்கூடிய ஒரு நிலையிலே தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய அனைத்துத் தரப்பு மக்களின் குரலாக நான் இங்கே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த 6 ரூபாய் அரிசி விலை உயர்வு என்பதை ஏதோ சாதாரண நிலையிலே உயர்த்தியதாக நான் கருதவில்லை. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், நிதி அமைச்சர் அவர்களும் சொல்வது எதற்கெடுத்தாலும் நிதி நெருக்கடி, இப்படி அரசாங்கத்தினுடைய நிதி நெருக்கடியைச் சமாளிப்பதற்காக, நிர்வாகம் செய்வதற்காக, 6 ரூபாய் என்று சொல்லி அரிசி விலையை உயர்த்தினீர்கள் என்று சொன்னால்-இப்படிப் பல தரப்பினரையும் பாதித்துள்ள-இந்த அடித்தட்டு மக்களுடைய நிலைமை என்ன?

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ராஜா அவர்கள் குறிப்பிட்ட அந்த அந்தியோதயா அன்னயோஜனா திட்டத்திற்கு 7½ இலட்சம் பேர்களுக்குத்தான் தமிழ்நாட்டிலே மத்திய அரசு அனுமதி கொடுத்திருக்கிறது. தமிழ்நாட்டிலே நாம் 1 கோடியே 20 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு 3½ ரூபாய் விலையில் அரிசி கொடுக்கிறோம் என்பதனைத் தெள்ளத் தெளிவாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதனாலே நம்முடைய மாநில அரசாங்கத்தின் சார்பில் 1,500 கோடி ரூபாய் மானியம் வழங்கிக் கொண்டிருக்கிறோம் என்பதையும் அதனால் மிகப் பெரிய இழப்பு நம்முடைய மாநில அரசாங்கத்திற்கு இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அந்தியோதயா அன்னயோஜனா திட்டம் என்பது மிகக் குறைந்த அளவிலே 7½ இலட்சம் பேருக்குத்தான் தமிழ்நாட்டிலே கொடுத்திருக்கிறார்கள் என்பதையும் புரட்சித் தலைவி அவர்களுடைய இந்த அரசு 1 கோடியே 20 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு 3½ ரூபாய்க்குக் குறைந்த விலையிலே அரிசியைக் கொடுக்கிறது என்பதையும் இந்தியாவிலேயே எந்த மாநிலமும் செய்யாததைச் செய்து கொண்டிருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. ஜி.கே. மணி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) இல்லை, ஒன்றும் இல்லை. திரு. மணி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) இல்லை ஒன்றும் வேண்டாம். (குறுக்கீடு) இல்லை, நேரம் இல்லை. அதனாலேதான் பிரச்சினை. திரு. மணி, பேசுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்களும் தமிழக அரசும் சொல்வது இந்த அரசாங்கத்திற்கு நிதி நெருக்கடி இருக்கிறது. இந்த நிதி நெருக்கடியைச் சமாளிப்பதற்காக ஏழை மக்கள், அடித்தட்டு மக்கள், உழைக்கக்கூடிய பாட்டாளி மக்கள் பயன்படுத்தக் கூடிய அரிசி விலையை உயர்த்துவதாகச் சொல்லி 6 ரூபாய்க்கு உயர்த்தியிருக்கிறீர்கள். இப்படி அரசாங்கத்தினுடைய நெருக்கடியால் உயர்த்துவதாகச் சொன்னால், இன்றைய சூழ்நிலையிலே இந்த மக்களுடைய நிலைமை என்ன? வருமானத்திற்காக அரசு உயர்த்துகிறது. ஆனால், இந்த ஏழை மக்களுக்கு வருமானம் எங்கேயிருந்து வருகிறது? கடந்த ஆண்டிலே வருமானம் ஒரு குடும்பத்திற்கு ஆயிரம் ரூபாய், இரண்டு ஆயிரம் ரூபாய் என்று எடுத்துக்கொண்டாலும்கூட இந்த ஆண்டு அரிசி விலையை உயர்த்திய காரணத்தினாலே அவர்களுடைய ஆண்டு வருமானம், மாத வருமானம் கூடிவிடவில்லை? இன்றைய நிலை என்ன? பருவ மழை இல்லை. வறட்சி; கடுமையான பஞ்சம்; குடிநீர்ப் பஞ்சம் இருக்கிறது; கால்நடைகளையெல்லாம் அடிமாட்டு விலைக்கு விற்கக்கூடிய நிலை இருக்கிறது. தமிழ்நாட்டிலே உள்ள பல்வேறு மாவட்டங்களிலிருந்து உணவுக்கு வேலை தேடி அண்டை மாநிலங்களுக்கு அலைந்து சென்று வரக்கூடிய ஓர் அவல நிலை; இப்படி மக்கள் அவல நிலையிலே இருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில் நிதி நெருக்கடி என்று சொல்லி மீண்டும் அந்த ஏழை மக்களின் வயிற்றிலே அடித்திருக்கிறீர்கள் என்பதை இங்கே நான் பகிரங்கமாகக்

குற்றம் சாட்ட விரும்புகிறேன். இப்படி நெருக்கடியான நிலையிலே பஞ்ச காலத்திலே அரசு உதவி செய்ய வேண்டுமே தவிர, உதவி செய்வதை விட்டுவிட்டு அரசு ஏழை மக்களுக்குப் பெரிய உபத்திரவம் கொடுத்திருக்கிறது என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் வாக்குறுதி பற்றியெல்லாம் இங்கே குறிப்பிட்டார்கள். ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். கடந்த முறை ஆந்திர மாநிலத்தில் திரு. என்.டி.ஆர். அவர்கள் இருக்கின்றபோது அவர்கள் தேர்தலைச் சந்தித்தபோது, கிலோ அரிசி 2 ரூபாய்க்கு வழங்கப்படும் என்று தேர்தல் வாக்குறுதி அளித்துத்தான் ஆட்சியைப் பிடித்தார்கள். ஆனால் ஆட்சிக்கு வந்தவுடன் அது சாத்தியமில்லை; அதை நீண்ட காலம் நிறைவேற்ற முடியாது என்பதை உணர்ந்து படிப்படியாக அரிசி விலையை உயர்த்தி இன்று ஆந்திராவில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்பவர்களுக்கு கிலோ ஒன்றுக்கு ரூபாய் 5.25 என்ற விலைக்கு அரிசி வழங்கப்படுகிறது. வறுமைக்கோட்டிற்கு மேலே வாழ்பவர்களுக்கு 9 ரூபாய் என்ற விலைக்குத்தான் அரிசி வழங்கப்படுகிறது.

பிற்பகல் 1-05

மேலும் இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் ஏதோ மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு கிலோ ஒன்றுக்கு 3 ரூபாய் என்ற விலையில் அரிசியை வழங்குவதைப் போலவும் அதை இங்கே அதிக விலைக்கு நாங்கள் விற்றுக் கொண்டிருப்பது போலவும் தெரிவித்தார்கள். அது ஒரு தவறான கருத்து. அந்தியோதயா அன்னயோஜனா திட்டம் என்பது வெறும் 7½ இலட்சம் பேர்களுக்கு மட்டுந்தான் இங்கே தமிழ்நாட்டில் செயல்பட மத்திய அரசு அனுமதித்திருக்கிறது. அவர்களுக்கு மட்டுந்தான் 3 ரூபாய் விலையில் அரிசி வழங்கப்படுகிறது. மற்றபடி 1 கோடியே 20 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு, நாங்கள் மத்திய அரசிடமிருந்து வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்பவர்களுக்கான விலையில்—மத்திய அரசு நிர்ணயித்து இருக்கும் கிலோ ஒன்றுக்கு 5 ரூபாய் 65 காசு என்ற விலை கொடுத்து வாங்கி, அதனை இங்கே ரூபாய் 3.50 என்ற விலைக்கு விற்றுக் கொண்டிருக்கிறோம். இந்த விலையேற்றம் செய்வதற்கு முன்பாக தமிழ்நாட்டில் நியாயவிலைக் கடைகளில் அரிசி வாங்கும் குடும்ப அட்டைதாரர்கள் அத்தனை பேர்களுக்கும் நாங்கள் இரண்டு விலைகளில் அரிசியை வாங்கி விநியோகம் செய்து கொண்டிருக்கிறோம். அதாவது, மத்திய அரசில் இரண்டு விலைகளை நிர்ணயித்து



இருக்கிறார்கள். வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்பவர்களுக்கு கிலோ ஒன்றுக்கு 5 ரூபாய் 65 காசு. அந்த விலைக்கும் வாங்கி நாங்கள் இங்கே 3 ரூபாய் 50 காசு என்ற விலைக்குக் கொடுத்துக் கொண்டிருந்தோம். ஆனால் அத்தகையவர்களுக்கு மத்திய அரசு தமிழ்நாட்டில் 48 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்குத்தான் அனுமதிக்கிறது. மத்திய அரசின் கணக்குப்படி, தமிழ்நாட்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்பவர்கள் 48 இலட்சம் பேர்தான். ஆகவே 48 இலட்சம் பேருக்குத்தான் 5 ரூபாய் 65 காசு என்ற விலையில் அரிசியைத் தருகிறார்கள். மற்றபடி வறுமைக் கோட்டிற்கு மேலே வாழ்பவர்களுக்கு என்று மத்திய அரசு நிர்ணயித்திருக்கின்ற விலை கிலோ ஒன்றுக்கு 8 ரூபாய் 30 காசு. நாங்கள் மீதமுள்ள அத்தனை இலட்சம் கார்டுகளுக்கும் 8 ரூபாய் 30 காசு என்ற விலை கொடுத்துவாங்கி அதையும் இங்கே 3 ரூபாய் 50 காசு என்ற விலைக்கு விற்றுக் கொண்டிருந்தோம்.

அது மட்டுமின்றி, நேரடிக் கொள்முதல் செய்து கொண்டிருந்தபோது கிலோ ஒன்றுக்கு இங்கே 12 ரூபாய் அடக்கம் ஆயிற்று. 12 ரூபாய் என்ற விலைக்கு வாங்கி அதையும் நாங்கள் 3 ரூபாய் 50 காசு என்ற விலைக்கு விற்றுக் கொண்டிருந்தோம். இது கட்டுப்படியாகவில்லை. இதனால்தான் மாநில அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு 1,600 கோடி ரூபாய்* அளவுக்கு மானியச் சுமை ஏற்பட்டதால்தான், மாநில அரசு திவால் ஆகும் சூழ்நிலை ஏற்பட்டதால்தான் இப்போது மிகச் சிறிய அளவில் விலையேற்றத்தைச் செய்து 10 கிலோ அரிசியை ஏற்கெனவே வழங்கிக் கொண்டிருந்த 3 ரூபாய் 50 காசு என்ற விலைக்கே வழங்கிக் கொண்டிருக்கிறோம். மீதமுள்ள 10 கிலோவிற்குத்தான் 6 ரூபாய் என்ற விலையை நிர்ணயித்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நீண்ட விளக்கத்தைச் சொன்னார்கள். அப்படி விளக்கம் சொன்னாலும்கூட, எந்த வகையிலாவது இந்த மக்களுக்கு, ஏழை மக்களுக்கு அரிசியின் விலையைக் குறைக்க வேண்டும் என்ற எண்ணத்திற்கு நீங்கள் வர வேண்டும் என்று சொல்லி நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

* மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க மாற்றப்பெற்றது.

இதிலே வறுமைக்கோட்டிற்குக் கீழே, வாழக் கூடியவர்களுடைய எண்ணிக்கை எவ்வளவு; அவர்களுடைய வாழ்க்கைத் தரம் என்ன; மாத வருமானம் எவ்வளவு; குடும்பத்திலே எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்ற கணக்குகளை, புள்ளிவிவரங்களைப் பார்த்தீர்கள் என்று சொன்னால், இந்த அரிசி விலையை உயர்த்துவதற்கு நிச்சயமாக உங்களுக்கே மனம் வராது. அப்படிப்பட்ட நிலைகளில் அடித்தட்டு மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்ற நிலையை இங்கே நான் பட்டவர்த்தனமாக சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்ன விவரம் அவைக் குறிப்புகளில் தவறாகப் பதிவாகிவிடக் கூடாது என்பதற்காக ஒரு திருத்தத்தைச் செய்யச்சொல்லி உத்தரவிடுமாறு கோருகிறேன். மாநில அரசுக்கு ஏற்கெனவே ஏற்பட்ட மொத்த மானியச் சுமை 1504 கோடி ரூபாய் என்று குறிப்பிட்டிருந்தேன். அது சரியல்ல. அது 1506 கோடி ரூபாயாகும். அதோடு போக்குவரத்துச் செலவும் சேர்ந்து ஒட்டுமொத்தமாக 1600 கோடி ரூபாய் மானியச் சுமை என்று திருத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். 1600 கோடி ரூபாய்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்களிடம் கடந்த நிதிநிலை கூட்டத் தொடரிலே அரிசிக்கு போடப்பட்ட 2 சதவீத வரியைக் குறைக்க வேண்டுமென்று சொல்லி எல்லா எதிர்க்கட்சிகளும் வற்புறுத்தினோம். இது முடியாது, மக்களுக்கு இந்த வரி போய்ச் சேராது, மில் உரிமையாளர்களைத்தான் சென்று சேரும் என்று சொல்லி, மக்களின் மீது அனுதாபத்தைக் காட்டிச் சொன்னீர்கள். இப்பொழுது 2 சதவிகிதம் வரியைக் குறைத்திருக்கிறீர்கள்; வரவேற்கிறோம். அதை நான் மாறுபாடாகச் சொல்லவில்லை. அப்படி 2 சதவிகிதம் வரியைக் குறைத்த நீங்கள் அரிசி விலையைக் குறைப்பதற்கு முயற்சி செய்யவேண்டும் என்புதுதான் என்னுடைய வேண்டுகோள்.

*பிற்பகல் 1-10*

அன்று நிதிநிலை அறிக்கைக் கூட்டத்தொடரில் கூட முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்: நாங்கள் எல்லாம் வற்புறுத்தினோம். அந்த நேரத்திலே சட்டமன்றத்திலே சொன்ன வாக்குறுதி; எந்த நிலையிலும் எக்காரணம் கொண்டும் ரேஷன் அரிசி விலை உயர்த்தப்பட மாட்டாது



என்று சொல்லி வாக்குறுதி கொடுத்தார்கள். இதை நாங்களெல்லாம் நம்பினோம். சட்டமன்றத்திலே முதலமைச்சர் அவர்களாலே கொடுக்கப்பட்ட வாக்குறுதி என்று நாட்டு மக்களெல்லாம் எதிர்பார்த்தார்கள். ஆனால் முதலமைச்சர் அவர்களே, நீங்கள் சொன்ன வாக்குறுதி மாறலாமா; மாறக் கூடாது. சட்டமன்றத்தில் கொடுத்த வாக்குறுதி உங்களுடைய வாக்குறுதியே மாறுகிறது என்று சொன்னால், இந்த நாட்டு மக்களுக்கு எப்படி நம்பிக்கை வரும்? இந்த ஆட்சியின் மீது எப்படி நம்பிக்கை வரும்? அந்தக் காரணத்தினாலே, இதை நீங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை.

முதலமைச்சர் அவர்கள் முன்பு பேசியபோது, எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கக்கூடிய எங்களுடைய மனதெல்லாம் புண்பட்டது. என்ன சொன்னார்கள்? இந்த நாட்டிலே தமிழகத்தினுடைய மொத்த வருவாயிலே, மாநிலத்தினுடைய வருவாயிலே 94 சதவிகிதம் அரசு ஊழியர்களுக்குச் செல்கிறது என்று சொன்னார்கள். அரசு ஊழியர்களுக்கு என்று சொல்கின்ற நேரத்திலே, அது முழுவதுமாக யாருக்கு என்று சொன்னால், இன்று ஆளுநர் அலுவலகம், அங்கே பணியாற்றுகிறவர்கள், அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., அதிகாரிகளுக்கெல்லாம் சேர்த்து 54 சதவிகிதம். எஞ்சி இருக்கக்கூடிய 40 சதவிகிதம் மட்டுமே, கீழே இருக்கக்கூடிய அரசு ஊழியர்களுக்கு, ஆசிரியர்களுக்கு சென்று அடைகிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மேலே இருக்கக்கூடிய ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., அதிகாரிகள், அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நான் உட்பட, கவர்னர் அலுவலகம் உட்பட அவர்களுக்கும் குறைக்கப்பட்டிருக்கிறதா என்று சொன்னால் நிச்சயமாக இல்லை. ஆகவே, அதைச் சுட்டிக்காட்டுகின்ற அதே நேரத்திலே, இப்படி அரசு ஊழியர்கள் மீது, மக்கள் தொகையில் 2 சதவிகிதம் என்று சொல்லுகின்ற அவர்களுக்காக... *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் 2 மணித் துளிகளில் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** அவர்களுக்காகப் பரிந்து பேசக்கூடிய நாங்கள் இந்த மக்களுக்காகப் பேசவில்லையே என்ற ஆதங்கத்தை வெளிக்காட்டினீர்கள். எதிர்க்கட்சிக்காரர்கள் அப்படிப்பட்டவர்கள் அல்ல. உங்களோடு சேர்ந்து நாங்களும் தேர்தலிலே போட்டியிட்டவர்கள். வாக்குகளைப் பெற்றவர்கள். அந்த மக்களுக்காகக் கேட்கிறேன். உங்கள்

உணர்வோடு சேர்ந்து நாங்களும் கேட்கிறோம். இந்த ஏழை மக்கள்மீது போட்டிருக்கக்கூடிய இந்த அரிசி விலை உயர்வு என்பது கடுமையான பாதிப்பு. நீங்கள் உண்மையிலேயே அந்த அக்கறையோடு சொன்னீர்களே, அந்த வார்த்தையைப் பயன்படுத்திக்கொண்டாவது இந்த அரிசி விலை உயர்வை நீங்கள் கட்டாயம் குறைக்க வேண்டும். எதிர்க்கட்சியிலே இருக்கக்கூடியவர்களுக்கு எல்லாம் இந்த உணர்வு இல்லையா? எல்லாம் இருக்கிறது. இப்பொழுது பால் விலை உயர்வு, பஸ் கட்டணம் உயர்வு. இப்படிக் கட்டணம் எல்லாம் உயர்ந்த நேரத்திலே இது மக்கள்மீது சுமத்தப்படக்கூடிய ஒரு மிகப்பெரிய பாதிப்பு. ஆகவே அதைக் குறைக்க வேண்டும் என்று சொல்லி, எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கின்ற நாங்கள் எல்லாம் குரல் கொடுத்தோம். அப்படிக் குரல் கொடுத்த எங்களுக்கு, எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கக்கூடிய எங்களுக்கு மக்கள் மீது உரிமை இல்லையா? அவர்களைப் பாதுகாக்கக் கடமை இல்லையா? நாங்கள் கடமை தவறவில்லை. ஆகவே மக்களின்மீது அக்கறையோடு கேட்டுக்கொள்கிறேன், பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அடித்தட்டு மக்கள், வறுமைக்கோட்டுக்குக்கீழே வாழக்கூடிய அந்த மக்களின் வாழ்வுரிமைக்காக இந்த அரிசி விலை உயர்வை கட்டாயம் நீங்கள் குறைக்க வேண்டும். இன்று எலிக் கறியை, நத்தையை, நண்டுகளையெல்லாம் சாப்பிடக்கூடிய அவல நிலை இருக்கிறது. இதை இல்லை என்று மறுக்க முடியாது. எத்தனையோ பேர் அப்படி வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இப்போது நெருக்கடியான நேரம். அரசுக்கு மட்டும் நெருக்கடி இல்லை. வறட்சியினுடைய கோரப்பிடியில் வறட்சியிலே இங்கே பசியோடு இருக்கக்கூடிய அந்த மக்களின்மீது நீங்கள் கருணை காட்ட வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள். ஆக எப்படி இருந்தாலும்கூட, எந்தக் காரணத்தையும் காட்டாமல் இந்த அரிசி விலை உயர்வை நீங்கள் கட்டாயம் குறைக்க வேண்டும். பேச வேண்டும் என்று சொன்னால் நிறையப் பேசலாம். பேரவைத் தலைவர் அவர்கள் அதிக நேரம் கொடுக்கவில்லை. மீண்டும் மீண்டும் நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்வது; ஆண்டிப்பட்டி இடைத் தேர்தலுக்கு முன்பு சட்டமன்றத்திலே நீங்கள் கொடுத்த வாக்குறுதி; நாட்டுமக்கள் நம்பிய வாக்குறுதி; ஆகவே அதையெல்லாம் நீங்கள் கவனத்திலே எடுத்துக்கொண்டு, பெரிதும் மனது வைத்து, இந்த அரிசி விலையைக் குறைக்க வேண்டும்.

மாண்புமிகு புரட்சி தலைவர் அமரர் எம்.ஜி.ஆர். அவர்கள் வழியிலே ஆட்சி செய்யக்கூடியவர்கள் நீங்கள். எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்திருந்தார் என்று சொன்னால், நிச்சயமாக இந்த ஏழை மக்கள் பயன்படுத்தக்கூடிய இந்த அரிசி விலையைக் கட்டாயம் உயர்த்தியிருக்க மாட்டார். ஆகவே, அவர்களை நீங்கள் நினைவுகூர்ந்து, இந்த அரிசி விலை உயர்வைக் கட்டாயம் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த விலை உயர்வுக்குப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே கடுமையான கண்டனத்தைத் தெரிவித்து, இந்த முடிவை மாற்றிக்கொண்டு, மறுபரிசிலனை செய்து அரிசி விலை உயர்வைக் குறைக்க வேண்டுமென்று சொல்லி மீண்டும் மீண்டும் வற்புறுத்தி அமர்கிறேன். வணக்கம்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்.

*பிற்பகல் 1-15*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''வயிற்றுக்குச் சோறிட வேண்டும் இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்'' என்று சபதம் ஏற்றார் தேசியகவி சுப்பிரமணிய பாரதி. எனவே, ஓர் அரசாங்கத்தினுடைய கடமை என்பது, தலையாய கடமை என்பது வாழுகின்ற மக்களுக்கெல்லாம் வயிற்றுக்குச் சோறிட வேண்டும். அதுதான் கடமையாக, கொள்கையாக இருக்க வேண்டும். எந்த அரசு அந்தக் கொள்கையை ஏற்றுக்கொள்கிறதோ; எந்த அரசு அந்தக் கொள்கையை கடைப்பிடிக்கிறதோ; நிச்சயமாக அந்த அரசுதான் போற்றப்படுகிறது.

பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் இருந்தபோது, பள்ளிக்கூடம் செல்லும் குழந்தைகளின் பசியைப் போக்குவது அரசாங்கத்தின் கடமை என்று கருதினார்கள். அதனாலேதான்—அன்றையதினம் நிதிநெருக்கடி, கடுமையான நிதிப் பற்றாக்குறை இருந்தது—நிதிப் பற்றாக்குறை இருந்தாலும், சமுதாயத்தின் பங்களிப்போடு பள்ளிக் குழந்தைகளுக்கான மதிய உணவுத் திட்டத்தைச் செயல்படுத்தினார்கள். பிச்சை புகினும் கற்கை நன்றே என்று அதிவீரராம பாண்டியர் சொன்னார்கள். அன்றைக்கு அரசு அலுவலர்கள் சொன்னார்கள்; இந்த மதிய உணவுத் திட்டம் என்பது பெருத்த செலவு தருகிறது. இன்றைக்கு இருக்கிற இந்த நிதி நிலையில் இதைச் செயல்படுத்த முடியாது என்று சொன்னார்கள். அதற்கு காமராஜர் அவர்கள் சொன்னார்கள்; பிச்சை எடுத்தேனும் நான் மதிய உணவுத் திட்டத்தை நிறைவேற்றுவேன். எந்தக் காரணத்தைக் கொண்டும், இந்த உணவு அளிக்கின்ற மதிய உணவுத் திட்டத்தைக் கைவிடமாட்டேன் என்று காமராஜர் அவர்கள்

அன்றையதினம் சொன்னார்கள். 'தெருவெங்கும் பள்ளிகள் கட்டுவோம்; கல்வி தெரியாத பேர்களே இல்லாமல் செய்வோம்' என்ற பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரனார் உறுதிமொழியை, பாரதத்தின் உறுதிமொழியாகப் பரவிடச் செய்யவேண்டுமென்று காமராஜர் அவர்கள் கருதினார்கள். நிதி இடர்பாடு குறுக்கிட்டது, இல்லையென்று சொல்லவில்லை. வாரியங்கள் மூலம் ஒவ்வொரு ஊரிலும் பள்ளிகளை நிறுவுவோம். அதிலே ஒரு ஆசிரியரையாவது பணியிலே அமர்த்துவோம் என்று அமர்த்தி, கல்வியைப் பரப்பிட வேண்டுமென்று காமராஜர் அவர்கள் கருதினார்கள். அத்தகைய பள்ளிகள், ஓராசிரியர் பள்ளிகள் என்றே பெயர் பெற்றன. ஆசிரியர்களை உருவாக்குவதற்காக தேச பக்தர்களே முன்வந்து ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளை நிறுவுவதற்கு உதவ வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். ஆனால், அன்றையதினம் பல தேசபக்தர்கள் பல சுதந்திரப் போராட்ட வீரர்கள் தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளைத் திறந்தார்கள்.

கோவையில் சுதந்திரப் போராட்ட வீரர், டி.எஸ். அவினாசிலிங்கம் செட்டியார் அவர்கள் அப்படியொரு ஆசிரியர் பயிற்சிப் பள்ளியைத் திறந்தார்கள். அதேபோல நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய ஊர்ப் பகுதியிலேகூட விருதுநகர் பகுதியிலே மட்டும், பாளையம்பட்டி, ஜோகில்பட்டி, வடவலாபுரம் போன்ற ஊர்களில் எல்லாம் தியாகிகளே பயிற்சிப் பள்ளிகளை நிறுவினார்கள். இன்றைக்கு வணிக நோக்கத்தோடு நடத்தப்படுகிற அத்தகைய பள்ளிகளின் எண்ணிக்கை பெருகி வருகிறது. கட்சி வேறுபாடுகளைக் கடந்து அன்றையதினம் தமிழக மக்களின்மீது அக்கறை கொண்டு இயக்கம் நடத்தி வந்த தந்தைப் பெரியார் அவர்கள், அறிஞர் அண்ணா அவர்கள் போன்றவர்கள் எல்லாம், தமிழக முதல்வராக காமராஜர் அவர்கள்தான் வரவேண்டுமென்று பெரிதும் விரும்பினார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, எஸ்.ஆர்.பி. அவர்கள் காமராஜர் நூற்றாண்டு விழாவிலே பேசுவது போலிருக்கிறது. (சிரிப்பு) தீர்மானத்திற்கு வந்துவிட்டால் பரவாயில்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இதுவும் தீர்மானம்தான், அவர்கள் சொன்னதைச் சொல்கிறனேதவிர வேறு அல்ல, அதுகூட தீர்மானம் இல்லையா? வெறும் தீர்மானத்தைப் பற்றி மட்டும் நான் பேச வேண்டுமென்றால் நான் பேசமுடியாது. நான் விட்டுவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, பேசுங்கள்.



**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நாங்கள் இங்கே கண்டனம் தெரிவித்துப் பேசுகிறோம், இதைக்கூடப் பேசவில்லை என்றால் வேறு எப்படிப் பேச முடியும்? காமராஜருக்கும் அன்றைக்கு நிதி இடர்ப்பாடு இருந்தது. அலுவலர்கள் இருக்கிறார்கள்; அவர்கள் கோப்புகளை புரட்டிப் பார்க்கட்டும். அன்றைக்கு அலுவலர்கள் சொன்னார்கள்; இந்த உணவுத் திட்டத்தை நிறைவேற்ற முடியாது என்று சொன்னார்கள். அன்றைக்கு என்ன பதிலை அவர் சொன்னார்: 'பிச்சை எடுத்தாவது நான் சோறு போடுவேன், மதிய உணவுத் திட்டத்தைக் கைவிட மாட்டேன்' என்று சொல்லியிருக்கிறாரா, இல்லையா, பாருங்கள், கோப்பை எடுத்துப் பாருங்கள். அதைத்தான் நான் சொல்கிறேன். (குறுக்கீடு) அதிலே என்ன கஷ்டம் உங்களுக்கு?

குடியாத்தம் தொகுதியிலே இடைத் தேர்தல் நடைபெற்றது. அதனால்தான் அன்றைக்குப் பெரியார் ஆதரித்துப் பிரசாரம் செய்தார். அறிஞர் அண்ணா அவர்கள் ஆதரித்தார்கள்.

எம்.ஜி.ஆர். அவர்கள் ஒரு படி மேலே போனார். 'காமராஜரே என் தலைவர், அண்ணா என் வழிகாட்டி' என்று பகிரங்கமாகவே அறிவித்தார். (குறுக்கீடு) ஏன் சொல்லக்கூடாது? காமராஜர் என் தலைவர் என்று எம்.ஜி.ஆர். சொன்னதை ஏன் சொல்லக்கூடாது? தவறா அது? அதிலே உங்களுக்கு என்ன கஷ்டம்? எம்.ஜி.ஆர். சொன்னதை நான் சொல்கிறேன். நானாக ஒன்றும் சொல்லவில்லை. எம்.ஜி.ஆர். ஏன் சொன்னார் என்றால், இதனாலேதான் சொன்னார், கல்விக் கண் திறந்தவர் காமராஜர் என்பதால்தான், காமராஜர் என் தலைவர் என்று சொன்னார் அதைச் சொல்கிறேன் நான். அதிலே என்ன கஷ்டம் உங்களுக்கு?

தமிழகத்தின் முதல்வராகப் பொறுப்பேற்பதற்கு முன்னர் அண்ணா அவர்கள் தனது தேர்தல் வாக்குறுதியாக ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுவேன் என்று அறிவித்தார்கள். அந்த அறிவிப்பே ஏழை மக்களின் இதயத்தைத் தொட்டது. அந்தக் காலத்தில் வேலையிழந்த ஆலைத் தொழிலாளர்களின் வீட்டு நிலைமை எப்படி இருந்தது என்பதை கம்யூனிஸ்ட் தலைவர் ஜீவா அவர்கள் படம் பிடித்துக் காட்டினார்கள். பெரியாருடன் சேர்ந்து, சுயமரியாதை இயக்கத்தில் பணியாற்றி விட்டு பொதுவுடைமை இயக்கத்தில் இணைந்து போர் பாடி வந்த ஜீவா, கோவையிலே மூடப்பட்ட மில் தொழிலாளர்களுடைய இல்லத்தின் அவல நிலையை எடுத்துக் கூறும்போது அனைவருடைய உள்ளத்தையும் உலுக்கியது.

"காலுக்குச் செருப்பும் இல்லை,
கால் வயிற்றுக் கூழும் இல்லை;
பாழுக்கு உழைத்தோமடா தோழா;
பசையற்றுப் போனோமடா;"

என்று சொன்னார். அதோடு அவர் நிறுத்தவில்லை.

"பாலின்றிப் பிள்ளை அழும்,
பட்டினியால் தாய் அழுவாள்,
வேலையின்றி நாம் அழுவோம் தோழனே,
வீடு முச்சூடும் அழும்."

என்று இதயத்தைப் பிழிந்திடும் வகையில் அன்றையதினம் தொழிலாளர்களுடைய நிலைமையைப் படம் பிடித்துக் காட்டினார். அதனால்தான் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற உடனேயே, அண்ணா செய்தது, உழைக்கும் மக்கள் நிறைந்த அந்தக் கோவையிலாவது ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுவது என்று முடிவு செய்தார்.

பிற்பகல் 1-20

அதேபோன்று, பாரம்பரியமிக்க பி. அண்டு சி. ஆலைத் தொழிலாளர்களும், சிம்சன் போன்ற நிறுவனங்களின் தொழிலாளர்களும் நிரம்பியுள்ள சென்னை நகரத்திலும், அந்தத் திட்டத்தை அண்ணா அவர்கள் அன்றையதினம் செயல்படுத்தினார்கள். இன்று பி. அண்டு சி. ஆலை மூடப்பட்டுவிட்டது. சிம்சன் நிறுவனத்திலே சிக்கல் முற்றியிருக்கிறது. சென்னையிலும் கோவையிலும் உள்ள இந்தியா பிஸ்டன்ஸ் மற்றும் பைமெட்டல் பேரிங்ஸ் தொழிற்சாலைகளிலே பணியாற்றும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு போனஸ்கூட வழங்கப்படாத நிலையில் தொழிலாளர்கள் குமுறிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இவர்களையெல்லாம் மதம் மாற வருமாறு அங்குள்ள சிலர் அழைப்பு விடுத்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி. அவர்கள், நான் குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும். அதாவது, தீர்மானத்திற்கு வந்துவிட்டீர்களென்றால் பரவாயில்லை. இன்னும் 7 சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன.



**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் மிகவும் சுருக்கமாகப் பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** விவசாயிகளுக்குக் கட்டுப்படியான விலை இல்லை. தண்ணீர் கிடையாது. விளைவித்த பண்டங்களுக்கு கட்டுப்படியான விலை கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் 5 மணித் துளிகளுக்குள் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** முடித்துவிடுகிறேன். கண்டிப்பாக முடித்துவிடுகிறேன். அதற்கு மேலே நான் போக மாட்டேன். நீங்கள் விட்டுவிட்டீர்களென்றால் முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நீங்கள் குறுக்கிட்டீர்களென்றால் நேரம் ஆகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, நான் குறுக்கிடவில்லை. எனக்கு என்ன தலையெழுத்தா? (சிரிப்பு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** விவசாயிகளுக்கு விளைவிக்கவே முடியவில்லை, விளைவித்த பண்டங்களுக்கு கட்டுப்படியான விலை இல்லை. தேயிலைக்கு விலை இல்லை, தேங்காய்க்கு விலை இல்லை, கரும்பு விளைவித்ததே குறைவு, அதை ஆலைகளுக்குக் கொடுத்தார்கள், ஆதார விலைகூட கடந்த 7, 8 மாதங்களாகப் பல இடங்களிலே கொடுக்கவில்லை. நேற்றைக்கு பட்டியலே போட்டார் திரு. ஞானசேகரன். திருவாலங்காட்டிலே கொடுக்கவில்லை. இங்கே பக்கத்திலே இருக்கிற ஊர்களிலே கொடுக்கவில்லை, பல ஊர்களிலே ஆதார விலை இன்றுவரை கொடுக்கப்படவில்லை என்ற அவலநிலை இருக்கிறது. அதேமாதிரி பல குரல்கள் பின்னாலிருந்து வருகின்றன. பல பண்டங்களுக்கும் விலை கிடைக்கவில்லை.

அதேபோல, தொழில் என்று எடுத்துக்கொண்டால், பெரிய தொழிற்சாலைகளெல்லாம் மூடப்பட்டிருக்கின்றன. சிறிய தொழிற்சாலைகளெல்லாம் பரிதாபகரமான நிலையிலே இருக்கின்றன.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பி. அண்டு சி. மில் மூடப்பட்டிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் எஸ்.ஆர்.பி. அவர்கள் தெரிவித்தார்கள். மூடப்பட்டிருந்த பி. அண்டு சி. மில்லை என்னுடைய கடந்த ஆட்சி காலத்தின்போது, 1991-லிருந்து 1996 வரை நான் முதலமைச்சராக இருந்தபோது, பல முயற்சிகளை மேற்கொண்டு, பல சலுகைகள் அளித்து, நான்தான் மீண்டும் திறக்கச் செய்தேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும், இவர்கள் அப்போது ஆதரித்த தி.மு.க. ஆட்சி வந்தபோது, மீண்டும் இழுத்து மூடிவிட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இன்று என்ன நிலைமை என்றால், நாங்கள் ஆதரித்த அ.தி.மு.க. ஆட்சி வந்தபோது, இரண்டு ரூபாய்க்கு இருந்த அரிசி 6 ரூபாய்க்குப் போய்விட்டது என்பதுதான் எங்களுக்கு வருத்தம். வேறு ஒன்றும் இல்லை. இருந்தாலும், எல்லாமே அரிசிப் பிரச்சினையிலேதான் இருக்கிறது. பிரச்சினை எல்லாமே அரிசியிலேதான் அடங்கியிருக்கிறது. பாடுபடும் அந்தப் பாட்டாளி மக்களுக்கு, ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசியை வழங்க வேண்டும் என அண்ணா அன்றைக்கு அறிவித்தார்கள். இன்றைக்கு ஒரு கிலோ அரிசி, ஒரு ரூபாய்க்கு அல்ல; ஒரு கிலோ அரிசியை இரண்டு ரூபாய்க்காவது கொடுக்கலாம்; இரண்டு ரூபாய்க்குக் கொடுக்காமல் கைவிட்டுவிட்டீர்கள். மூன்றரை ரூபாய்க்காவது கொடுக்கலாம். மூன்றரை ரூபாய்க்கும் கொடுக்கவில்லை; 6 ரூபாய்க்குக் கொடுக்கிறீர்கள். அது வந்து, தாங்க முடியுமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்தகை பேரறிஞர் அண்ணாகூட, ஒரு ரூபாய்க்கு 3 படி அரிசி தருவோம் என்றுகூட எண்ணினார். ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பிறகுதான் நிதிநிலையைப் புரிந்துகொண்டு, அது முடியாது என்ற காரணத்தால், ஒரு ரூபாய்க்கு என்ற திட்டத்திற்கு அவர் கொண்டு வந்தார். இந்த அரிசியை—மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணுவதைப்போல—குறைந்த விலைக்குக் கொடுக்க வேண்டுமென்றால், ஒன்று மைய அரசு நிதியைத் தரவேண்டும் அல்லது வரியைப் போட வேண்டும். எப்படி என்று நீங்கள் ஆலோசனை சொல்லுங்கள்? கிட்டத்தட்ட 1600 கோடி ரூபாய் பணச் சுமை இதிலே ஏற்படுகிறது. மைய அரசு ஒரு கிலோ 5 ரூபாய் 65 பைசா என்று தருகிறது. மைய அரசு குறைத்துத் தரவில்லை. ஏழைகளுக்குத் தருகின்ற அரிசி,



5 ரூபாய் 65 காசுக்கு, 48 இலட்சம் பேருக்குத்தான் தருகிறது. மீதமுள்ள 72 இலட்சம் பேருக்கு அரிசி எப்படித் தர முடியும்? 12 ரூபாய்க்குக் கொள்முதல் செய்து, 3.50 ரூபாய்க்குத் தருகிறபோது, அதனால் ஏற்படுகின்ற இழப்பு மட்டும் 700 கோடிக்கு மேல் ஏற்படுகிறது. ஒட்டுமொத்தமாக, 1600 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது. அந்த இழப்பைச் சரிக்கட்ட நீங்கள் வழி சொல்லுங்கள். பொது வாழ்வில் இருக்கின்றோம். அரசை நடத்த வேண்டும். எப்படி இந்த 1600 கோடி ரூபாய் இழப்பைச் சரிக் கட்டுவது? அந்த நிதியை எப்படித் தேடுவது? ஒன்று, மைய அரசு தரவேண்டும். அல்லது அவர்கள் தருகின்ற 5 ரூபாய் 65 காசு அரிசியை அவர்களே 3.50 ரூபாய்க்குத் தரவேண்டும். அதுவும் இல்லாத நிலையில் 1600 கோடி ரூபாயைப் பெறுவதற்கு வரியைத்தான் போட வேண்டும். வரி போடாமல் எப்படிப் பணத்தைச் சேர்ப்பது? ஆலோசனையைச் சொல்லுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு என்ன வருத்தம் என்றால், நான் அண்ணாவைப் பாராட்டுகிறேன்; போற்றுகிறேன். ஆனால், நிதியமைச்சர் என்ன சொல்கிறார் என்றால், அண்ணாவைத் தாக்குகிறார். அண்ணா அப்படிச் சொல்லவில்லை. அண்ணா என்ன சொன்னார் என்று....

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) சொல்லி முடித்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தவறான தகவலைச் சொல்ல வேண்டாம். பெருந்தகை பேரறிஞர் அண்ணா அவர்களே, 1967 தேர்தலுக்கு முன்னால் சொன்னதை ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பிறகு நடைமுறைப்படுத்தாமல் போனதற்குக் காரணம், காங்கிரஸ் ஆட்சி அந்த அவல நிலையில் அந்த ஆட்சியைக் கைவிட்டு விட்டுச் சென்றது. நிதி இல்லாத காரணத்தால், அண்ணா அவர்கள் சொன்னதை நடைமுறைப்படுத்த முடியாமல் போய்விட்டது.

பிற்பகல் 1-25

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அது ஒன்றும் இல்லை. அண்ணா அவர்கள் மூன்று படி லட்சியம், ஒரு படி நிச்சயம் என்று சொன்னார்கள். அந்த ஒரு படியாவது கொடுத்தார்கள். நீங்கள் இரண்டு ரூபாய்க்கு அரிசி போடுகிறேன் என்று சொன்னீர்கள். (குறுக்கீடுகள்)

இரண்டு ரூபாய் அரிசி என்பது எந்த நிலைமை ஏற்பட்டாலும் எந்தக் காரணத்தைக் கொண்டும் அரிசி விலையை அதிலேயிருந்து உயர்த்தமாட்டேன் என்று எம்.ஜி.ஆர். ஒரு முறை அல்ல பலமுறை உறுதி சொல்லியிருக்கிறார். அதே உறுதிமொழியை காப்பாற்றுவேன் என்று நீங்களும் பலமுறை சொல்லியிருக்கிறீர்கள். இந்த இரண்டு ரூபாய், மூன்று ருபாய் ஆக்கப்பட்டு....

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்திலே இப்படி மைய அரசு இந்த மாநிலத்திற்குத் தர வேண்டிய நிதியைத் தராமல் விட்டுவிடவில்லை. ஆனால், தற்போது ஒட்டுமொத்தமாக நிதிப் பகிர்விலே 2946 கோடி ரூபாய் இல்லையென்று சொல்லி ஆண்டிற்கு சராசரியாக, 590 கோடி ரூபாய் இந்த ஆண்டு கிட்டவில்லை. அதோடு ஒதுக்கிய நிதியிலேயே மேலும் 540 கோடி ரூபாய் இல்லை. 1100 கோடி ரூபாய் எங்களுக்கு மைய அரசு தரவில்லை. நிதி இல்லாத நேரத்தில் இதை எப்படி ஈடேற்ற முடியும். இதை எப்படிப் புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தோடு நீங்கள் ஒப்பிட முடியும்?

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order.. *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் திரு. செ. செம்மலை.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள் மத்திய அமைச்சராக இருந்தவர். மூத்த உறுப்பினர். அனுபவம் மிக்கவர். நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு மக்களுக்காகச் சில வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு உலக வங்கி, நபார்டு வங்கி ஆகிய இரண்டு வங்கிகளின் உதவியை நாடுகிறது. அவர்கள் சில நிபந்தனைகளை நமக்கு விதிக்கிறார்கள். குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால் மானியமாக எதையும் வழங்காதீர்கள், இலவசமாக எதையும் கொடுக்காதீர்கள், அதிக விலை கொடுத்துக் கொள்முதலையே செய்யாதீர்கள் என்ற நிபந்தனைகளை விதிக்கிறார்கள். நம்முடைய தமிழக அரசு அப்படிப்பட்ட நிதி நிறுவனங்களையோ, உலக வங்கியையோ, நபார்டு வங்கியையோ நாடும்போது மைய அரசின் மூலமாகத்தான் நாம் நாட வேண்டியிருக்கிறது. ஆனால், இப்போது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்முடி அவர்கள் இங்கே மிகவும் சாமர்த்தியமாகப் பேசினார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்களும் இங்கே மிகவும் சாமர்த்தியமாகப் பேசினார்கள். நம்முடைய அரசைப் பார்த்து காலைக் கட்டிப்போட்டுவிட்டு ஓட்டப் பந்தயத்திலே கலந்துகொள்ளுங்கள் என்ற வகையிலே பேசுகின்றார்கள். நான் அவர்களைப் பணிவன்போடு கேட்கிறேன். அவர்களுடைய கட்சிதான் அங்கே ஆட்சியிலே இருக்கிறது. அந்த ஆட்சியிலே, மத்திய ஆட்சியிலே பங்கு கொண்டிருக்கிறவர்கள் மைய அரசின் மூலமாக இதுபோன்ற நிபந்தனைகளை விதிக்கக் கூடாது என்று சொல்லி, தாராளமாக நிதியை நீங்கள் பெற்றுத்தந்தீர்களேயானால் இந்த நிலைமைக்கு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு மக்களுக்குச் சுமையை நிச்சயமாக வைக்காது. *(மேசையைத் தட்டும் ஒலி)* அதைச் செய்வதற்கு அந்தக் கட்சிகள் அங்கே மத்திய அரசிலே தயாராக இருக்கிறார்களா என்பதை உங்கள் மூலமாகக் கேட்க விரும்புகிறேன்.



**டாக்டர் க. பொன்முடி:** Point of order..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, சொல்லுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நபார்டு போன்ற வங்கிகள் எல்லாம் கட்டுப்பாடு விதிப்பதாகச் சொன்னார்கள். ஆனால் இதே சட்டமன்றத்திலேயே, விவசாயிகளுக்குக் கடனைத் தள்ளுபடி செய்வதற்காக நீங்கள் நபார்டிலே போராடிப் பெற்றோம் என்று பெருமையாகப் பேசிக்கொண்டீர்களே அது எப்படி முடிந்தது. அதை எப்படி உங்களால் செய்ய முடிந்தது. அதைச் செய்த நீங்கள், அதுவும் இந்த அரிசிப் பிரச்சினையில், 5 மாதத்திற்கு முன்பு, மார்ச் மாதத்திலே நீங்கள் அறிக்கையைப் படித்தபோது நிதி நிலைமை உங்களுக்குத் தெரியாதா, அந்த உணர்வோடு கேட்கிறேன்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துக்கொள்ளுங்கள். முடித்துக்கொள்ளுங்கள். திரு. எஸ்.ஆர். பி. அவர்கள் 1-30 மணிக்குள்ளாக பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** சரி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே அவையிலே முதலமைச்சர் அவர்கள் உறுதிமொழி கொடுத்திருக்கிறார்கள். எந்தக் காரணத்தைக் கொண்டும் இனிமேல் 3 ரூபாய் 50 காசுக்கு மேலே நான் உயர்த்த மாட்டேன் என்ற உறுதிமொழியைக் கொடுத்திருக்கிறார்கள். ஆண்டிப்பட்டி தேர்தலின்போது, ஒரு முறை 9 ரூபாய்க்கு உயர்த்தினீர்கள் உண்மைதான். உயர்த்தியபிறகு மீண்டும் குறைத்து, எந்தக் காரணத்தைக் கொண்டும் அரிசியின் விலையை 3 ரூபாய் 50 காசுக்கு மேலே நான் உயர்த்த மாட்டேன் என்ற உறுதிமொழியை அளித்திருக்கிறீர்கள். எம்.ஜி.ஆர். கொடுத்த உறுதிமொழியை அன்றையதினம் எம்.ஜி.ஆர். காப்பாற்றினார். அதனால் ஏழை மக்கள் மிகவும் சந்தோஷமாக இருந்தார்கள். இன்றைய நிலை என்ன? அரை வயிற்றுக் கஞ்சி, கால் வயிற்றுக் கஞ்சிகூட இல்லாத நேரத்தில் இரண்டு ரூபாயை ரூ.3.50-ஆக்கி, ரூ.3.50-ஐ ரூ.6-ஆக ஆக்கினீர்கள் என்று சொன்னால் (குறுக்கீடுகள்) இரண்டு ரூபாய்க்கு இருந்த அரிசிதானே—தெரியுங்க இரண்டு ரூபாய்க்கு இருந்த அரிசிதானே—சரி, ஆட்சிக்கு வந்த பிறகு மூன்று ரூபாய், ஒரு item இரண்டு ரூபாய் என்று இருந்ததை எடுத்துவிட்டீர்கள் சரி, விட்டுவிடுங்கள்.

நாட்டில் உணவு தானியங்களினுடைய விளைச்சல் பெருகி இருக்கிறது. மத்திய அரசின் உணவுக்கிடங்குகளில் ஏராளமான உணவுதானியங்கள் நிரப்பி வைக்கப்பட்டிருக்கின்றன. மேலும் இருப்பு வைக்க முடியாத நிலையில் வெளிநாடுகளுக்கு மத்திய அரசு ஏற்றுமதி செய்கிறது. உள்நாட்டிலே உணவுதானியங்களின் விலையைக் குறைத்து, மாநில அரசுகள் தேவையான அளவிற்கு எடுத்துச் செல்லலாம் என்று மத்திய அரசு கூறிவிட்டது. பரம ஏழைகளாக இருக்கும் மக்களுக்கு மிகவும் குறைந்த விலையில் வழங்குவதற்கு என்று மத்திய அரசு குறிப்பிட்ட அளவு அரிசியை மாநில அரசுகளுக்குக் கொடுத்தது. அதை அவரே ஒத்துக்கொண்டார். வேலைக்கு உணவுத் திட்டத்தின்கீழ் கூலியாக உணவுதானியங்களை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பொது விநியோகத் திட்டத்தின்கீழ் மானிய விலையில் அரிசியை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த வாய்ப்புகள் அனைத்தையும் பயன்படுத்தியும் தேவையான மானியத்தை வழங்கியும், நியாய விலைக் கடைகள் மூலம் குறைந்த விலையில் அரிசி வழங்கப்படும் நிலை பல ஆண்டுகளாகத் தொடர்ந்து வந்திருக்கிறது. ஆனால், அந்த நிலை தொடர முடியாமல் இந்த அரசு மலிவு விலையில் அரிசி வழங்குவதை மாற்றி அமைத்திருக்கிறது.



குடும்ப அட்டை வைத்திருப்போருக்கு 10 கிலோவிற்கு 3.50 ரூபாய், இன்னொரு 10 கிலோவிற்கு 6.00 ரூபாய் என்று உயர்த்தப்பட்டு இருக்கிறது. இந்த அறிவிப்புத்தான் ஏழைமக்களின் தலையில் இடியாக இறங்கியிருக்கிறது; எல்லோருடைய ஏகோபித்த எதிர்ப்பிற்கும் இடம் அளித்திருக்கிறது.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சி ஆளுகின்ற மாநிலங்களிலும் காங்கிரஸ் கட்சி தலைமையிலான கூட்டணி அரசுகள் ஆளுகின்ற மாநிலங்களிலும் ஏழைமக்களே இல்லையா? அங்கே இருக்கின்ற காங்கிரஸ் அரசுகளுக்கு ஏழை மக்களைப்பற்றி அக்கறையே இல்லையா? காங்கிரஸ் ஆளுகின்ற மாநிலங்களிலும் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி அரசுகள் ஆளுகின்ற மாநிலங்களிலும் அரிசியின் விலை என்ன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அஸ்ஸாம், காங்கிரஸ் ஆளுகின்ற மாநிலம். அங்கே குறைந்தபட்ச விலை 6 ரூபாய் 47 காசு, அதிகபட்ச விலை 13 ரூபாய் 13 காசு. சட்டீஸ்கர் மாநிலத்தில், காங்கிரஸ் ஆளுகின்ற மாநிலத்தில் அரிசியின் குறைந்தபட்ச விலை 6 ரூபாய் 15 காசு, அதிகபட்ச விலை 8 ரூபாய் 03 காசு. காங்கிரஸ் ஆளும் கர்நாடக மாநிலத்தில் குறைந்தபட்ச விலை 6 ரூபாய் 15 காசு, அதிகபட்ச விலை 9 ரூபாய். காங்கிரஸ் ஆளும் மத்திய பிரதேச மாநிலத்தில் குறைந்தபட்ச விலை 6 ரூபாய் 50 காசு, அதிகபட்ச விலை 8 ரூபாய். நாகாலாந்தில் காங்கிரஸ் ஆளுகின்ற மாநிலத்தில் 6 ரூபாய் 15 காசு; 8 ரூபாய். பஞ்சாப் மாநிலத்தில் 5 ரூபாய் 77 காசு; 8 ரூபாய் 45 காசு. ராஜஸ்தான் மாநிலத்தில் 6 ரூபாய் 15 காசு; 7 ரூபாய் 90 காசு. உத்தராஞ்சல் மாநிலத்தில் 6 ரூபாய் 15 காசு; 8 ரூபாய் 80 காசு. காங்கிரஸ் கூட்டணி ஆட்சி நடைபெறுகின்ற மாநிலங்களில், கேரளத்தில் 6 ரூபாய் 20 காசு; 8 ரூபாய் 90 காசு. மகாராஷ்டிரா மாநிலத்தில் 6 ரூபாய் 75 காசு; 9 ரூபாய். பீகார் மாநிலத்தில் 6 ரூபாய் 22 காசு; 8 ரூபாய் 17 காசு. அருணாச்சல பிரதேச மாநிலத்தில் 6 ரூபாய் 15 காசு; - 7 ரூபாய் 80 காசு. மணிப்பூர் மாநிலத்தில் 6 ரூபாய் 21 காசு;

8 ரூபாய் 95 காசு. டில்லியில் 6 ரூபாய் 15 காசு; 7 ரூபாய் 80 காசு. இங்கெல்லாம் காங்கிரஸ் ஆட்சி நடைபெறுகிறது; இவர்கள் எங்களைப் பார்த்து ரூ. 3.50-க்குக் கொடுக்கின்ற ஒரு மாநிலத்தில் விலை அதிகம் என்று கூறுகிறார்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அதுதான் வித்தியாசம். அவர்கள் யாரும் நான் 2 ரூபாய்க்கு விற்பேன், 3.50 ரூபாய்க்குக் கொடுப்பேன் என்று சொல்லவில்லை.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் சொல்வதை நான் மறுக்கவில்லை. ஆனால் வடமாநிலங்களிலே உணவுக்கு அதிகமாகப் பயன்படுத்துவது கோதுமை. அரிசியை மிகக் குறைவாகத்தான் பயன்படுத்துவார்கள். அரிசி உற்பத்தியும் குறைவு. அங்கு விலையேற்றம் இருப்பதில் நியாயம் இருக்கிறது. ஆனால் அந்த அரிசி உற்பத்தி இங்கே நடைபெறுகிறது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரளா, கர்நாடகம் இவையெல்லாம் என்ன வடமாநிலங்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி. அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** எத்தனையோ இடர்ப்பாடுகள் இருந்த நேரத்திலேகூடத் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் ஏழைமக்களுக்கு உணவு அளிக்கும் திட்டத்தில் எந்தத் தலைவரும் கை வைக்கவில்லை. காமராஜர், அண்ணா, எம்.ஜி.ஆர். கடைப்பிடித்த அணுகுமுறைகளையும், கொள்கைகளையும், காற்றில் பறக்கவிட்டு விட்டார்கள். தனது தோல்வியை மூடி மறைப்பதற்காக, கோவில்களில் அன்னதானத் திட்டம்; தீபாவளி பரிசளிப்புப் பட்டாசுத் திட்டம் என்று அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள்.

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1967-க்கு முன்னால் எலிக் கறியைச் சாப்பிடச் சொன்னவர்கள் காங்கிரஸ் கட்சிக்காரர்கள் என்பதை இந்த நாடு மறந்துவிடாது. அதற்குப் பிறகுதான் பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்நாட்டினுடைய ஆட்சிப்பீடத்தில் அமர்ந்தார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்பொழுது எஸ்.ஆர்.பி. அவர்கள் திராவிட இயக்கத்திலே இருந்தார்கள் என்று கருதுகிறேன்.



**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** என்ன சொன்னீர்கள்? நான் கேட்கவில்லை, என்ன சொன்னீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்பொழுது எஸ்.ஆர்.பி. அவர்கள் திராவிட இயக்கத்திலே இருந்தார்கள் என்று நான் கருதுகிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நிச்சயமாக இல்லை. எனக்கு வாக்குரிமை வந்து முதன்முதலாக வாக்களித்தது மைலாப்பூர் தொகுதியில்; 1962-லே நான் முதன்முதலாக வாக்களித்தேன். எனது முதல் வாக்குச் சென்றது காளைமாட்டுச் சின்னத்திற்கு; வரதப்ப செட்டியாருக்கு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படியானால் எப்போது நீங்கள் திராவிட இயக்கத்தில் இருந்தீர்கள்?

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அதைப்பற்றி நீங்கள் கவலைப்படாதீர்கள். அது திராவிட இயக்கத்திலே மாணவர் இயக்கம்; அதைப்பற்றி உங்களுக்கு என்ன கவலை. (சிரிப்பு) நான் மாணவனாக இருந்தபோது திராவிட மாணவ இயக்கத்திலே இருந்தேனே தவிர திராவிட முன்னேற்றக் கழகத்திலோ அல்லது எந்த திராவிட இயக்கத்திலோ நான் ஒருநாளும்கூட உறுப்பினராக இருந்தது கிடையாது. மாணவர் இயக்கத்திலே இருந்தேன் என்பது உண்மை. மாணவர் இயக்கத்தோடு அது முடிந்துவிட்டது. அதோடு நான் தேசிய இயக்கத்திற்கு வந்துவிட்டேன். தேசிய இயக்கத்திற்கு வந்து 40 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. ஆகையினாலே அதைப்பற்றி இப்போது பேசுவது பிரயோஜனம் இல்லை. என்னுடைய வயதிலே மூன்றிலே இரண்டு பங்குக்கு மேலே நான் தேசிய இயக்கத்திலே இருந்திருக்கிறேன். அதுவல்ல கணக்கு. அதையெல்லாம் எடுத்து ஏதாவது குறைத்துவிட முடியும் என்று நீங்கள் நினைக்காதீர்கள். என்னுடைய முதல் வாக்குரிமை, என்னுடைய முதல் வாக்கு வரதப்ப செட்டியாருக்கு. இரட்டை காளைமாட்டுச் சின்னத்திற்கு என்னுடைய முதல் ஓட்டைப் போட்டேன். அதனாலே மக்களுடைய பசியோடு யாரும் விளையாடக்கூடாது.

*பிற்பகல் 1-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்களே, இன்னும் எவ்வளவு நேரம் வேண்டும்?

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் இரண்டு நிமிடங்களிலே பேசி முடித்து விடுகிறேன். போதுமா? மக்களின் பசியோடு விளையாடுவது மன்னர்களுக்கு அழகல்ல. எனவே இந்த அரசு மக்களுக்குக் குறைந்த விலையில் அரிசி வழங்கும் திட்டத்தைக் கைவிடுவது, தனது தோல்வியை வெளிப்படையாக ஒப்புக்கொள்வதாகத்தான் அமையும். எனவே, நான் மீண்டும் கேட்டுக்கொள்கிறேன், அருள்கூர்ந்து குறைந்த விலையில், குறைந்தபட்சம் 3 ரூபாய்க்காவது தொடர்ந்து அனைவருக்கும் 20 கிலோ அரிசி கிடைப்பதற்கு, நீங்கள் அளிப்பதற்கு முன்வரவேண்டுமென்று நான் மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். நான் வேறு சில விஷயங்களையெல்லாம் பேசலாம் என்று இருந்தேன். அதெல்லாம் வேண்டாம் என்று நினைக்கிறேன். சீக்கிரம் முடித்து விடுகிறேன். ஏனென்று சொன்னால், அண்ணா கூறியதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். "கும்பி எரியுது; குடல் கருகுது; கோலேந்திகளே, குளுகுளு வாசம் ஒரு கேடா?" என்று கேட்டார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதைப்பார்த்துக் கேட்டார்?

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** எதைப்பார்த்துக் கேட்டார்? இந்தமாதிரி உட்கார்ந்து கொண்டு இருப்பதைப் பார்த்துத்தான். இப்போது குளுகுளு அவையில் தானே உட்கார்ந்துகொண்டு இருக்கிறோம். அதைப் பார்த்துத்தான் கேட்டார். இதைப் பார்த்துத்தான் கேட்டார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி., காங்கிரஸ் ஆட்சி ஊட்டியிலே சட்டசபையை நடத்திய காரணத்தால் அப்படிக் கேட்டார்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஆமாம். நீங்கள் ஊட்டிக்குப் போவது இல்லையா? இப்போது நீங்கள் ஊட்டிக்குப் போகவில்லையா? அங்கே தங்குவது இல்லையா? அதைத்தான் சொல்லுகிறேன். காய்ந்த தலை; பசித்த வயிறு. அவர்கள் நம்மைப் பார்த்துக் கேட்கிற கேள்வியைத்தான் நான் இங்கே கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி., நான் உங்களோடு வாதம் பண்ணவில்லை. "கும்பி எரியுது; குடல் கருகுது; குளுகுளு வாசம் ஒரு கேடா" என்று அன்றைக்கு காங்கிரஸ் சட்டசபையை ஊட்டியில் நடத்திய காலத்தில் அதைக் கண்டித்து அண்ணா அவர்கள் கேட்டார்கள்.



**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் இன்றைக்கு நடத்துவது இல்லையா?

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு உண்மையிலேயே காங்கிரஸ் ஆளுகின்ற இராஜஸ்தான் மாநிலத்தில் 20-க்கும் மேற்பட்ட பட்டினிச் சாவுகள் ஏற்பட்டதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகி இருக்கின்றன. ஆகவே, மக்களின் பசியோடு விளையாடக்கூடாது என்பதை, மாண்புமிகு உறுப்பினர் எஸ்.ஆர்.பி. அவர்கள் இராஜஸ்தான் மாநில அரசுக்கு இந்த அறிவுரையைக் கூறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது எந்த அளவுக்குச் சரியான செய்தி என்பதை முதலில் பார்க்க வேண்டும். அங்கே 3 ஆண்டுகாலமாக கடும் வறட்சி; ஒரு சொட்டு மழைகூடப் பெய்யாமல் கடும் பிரச்சினை. இங்கேகூடப் பட்டினிச்சாவு என்று சொன்னாரே திரு. பழனிச்சாமி. (குறுக்கீடு) ஏன் கோபம் வருகிறது உங்களுக்கு? பட்டினிச்சாவுதான். ரமேஷ். பட்டினிச்சாவுதான். அதில் என்ன சந்தேகம்? நிச்சயமாகப் பட்டினிச் சாவுதான் ரமேஷினுடைய சாவு.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மருத்துவப் பரிசோதனை நடத்தப்பட்டது. உடல் நலக் குறைவால்தான் அந்தச் சிறுவன் இறந்தானே தவிர, நிச்சயமாக அது பட்டினிச்சாவு அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** வறுமையால் ஏற்பட்ட உடல் நலக் குறைவே தவிர, வேறு குறையல்ல. சாப்பிடவில்லை, அதுதான் பிரச்சினை. வேறு ஒன்றுமே கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்...

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** பேசி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) திரு. பழனிசாமி, நான் பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டினிச் சாவை மூடி மறைப்பதற்கு இப்படி அபாண்டமாகச் சொல்லக் கூடாது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்களே, பேச்சை முடித்துவிடுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் கொள்கைக்கு எனது கண்டனத்தைத் தெரிவித்து அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள், பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற அரிசி விலை உயர்வுக்குக் கண்டனம் தெரிவிக்கிற இந்தத் தீர்மானத்தின்மீது உணவு அமைச்சர் என்ற முறையிலே ஒரு சில கருத்துகளை இந்த மாமன்றத்தின் முன்னாலே வைக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இந்த விலை உயர்வை அறிவித்த உடனேயே தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த விலை உயர்வு எதனாலே உருவாக்கப்பட்டது என்பதைப் பற்றியும், இந்த விலை உயர்வுக்கு என்னென்ன காரணங்கள் என்பது பற்றியும், எவ்வளவு கனத்த இதயத்தோடு இதைச் செய்கிறேன் என்றும் புரட்சித் தலைவி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் ஒரு நீண்ட அறிக்கையை நாட்டு மக்களுக்குக் கொடுத்தார்கள். அதுமட்டுமல்ல, பத்திரிகையாளர்களைச் சந்தித்து இப்போது சொன்ன அத்தனை விளக்கங்களையும் பத்திரிகையாளர்கள் மத்தியிலேயும் தெளிவாக நாட்டு மக்களுக்குச் சொல்லி இருக்கிறார்கள். ஆக, மிகப்பெரிய விளக்கங்கள் தமிழ்நாட்டு மக்களுக்குப் புரட்சித் தலைவி அம்மா அவர்களாலே, முதலமைச்சராலே தெளிவாகக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. கொடுக்கப்பட்ட அத்தனை விவரங்களையும் நாட்டு மக்கள் ஏற்றுக்கொண்டு இந்தத் திட்டத்திற்குக் கடந்த ஒரு மாத காலமாக ஆதரவைக் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள்.



*பிற்பகல் 1-40*

ஆனாலும் தூங்குபவர்களை எழுப்பலாம், தூங்குபவர்களைப் போல நடிப்பவர்களை எழுப்பமுடியாது என்பதற்கு உதாரணமாகத்தான் இன்றைக்கு நம்முடைய மாமன்ற உறுப்பினர்கள், அவர்கள் கொண்டுவந்த இந்தத் தீர்மானத்தின்மீது பேசுகிறபோது, அத்தனை விவரங்களையும் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஏற்கெனவே பேசி, அவர்களும் அதை அறிந்திருந்தும், தவிர்க்கமுடியாத ஒரு சூழ்நிலையிலேதான் கனத்த இதயத்தோடு, புரட்சித்தலைவர் அவர்கள் பெயரால் அரசாங்கத்தை நடத்திக் கொண்டிருக்கிற புரட்சித்தலைவருடைய அரசியல் வாரிசு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இந்த அரிசி விலை உயர்வை ஒரு இக்கட்டான சூழ்நிலையில், தவிர்க்கமுடியாத சூழ்நிலையில் கொண்டு வந்திருக்கிறேன் என்று திரும்பத் திரும்ப இந்த நாட்டு மக்களுக்குச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இந்த மாமன்றத்தின் உறுப்பினர் அவர்களும் அத்தனை உண்மைகளையும் தெரிந்துகொண்டதற்குப் பின்னாலேயும் அவர்கள் இதை ஒரு முழக்கமாக வைக்கவேண்டும், இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவேண்டும் என்பதற்காக இன்றைக்கு இந்த மாமன்றத்திலே ஒரு கண்டனத் தீர்மானமாகக் கொடுத்திருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை உருவாவதற்கு என்ன காரணம் என்பதை ஏற்கெனவே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தெளிவாகச் சொல்லியிருந்தாலும், அவர்கள் சொல்லியிருக்கிற அத்தனை விவரங்களையும் சொல்லாவிட்டாலும் அந்த விவரங்களிலிருந்து ஒருசில உண்மைகளை இந்த அவையிலே உணவு அமைச்சர் என்ற முறையில் அவர்கள் சொல்லியிருக்கிற அந்த உண்மைகளை மீண்டும் ஒருமுறை இந்த மாமன்ற உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகின்றேன்.

இன்றைக்கு இந்த மாமன்றத்திலே பேசிய உறுப்பினர்கள் அத்தனைபேரும் அரிசி விலையை ஏற்றிவிட்டோம் என்று சொன்னார்கள். என்ன சூழ்நிலையில் ஏற்றப்பட்டிருக்கிறது என்பதனை உங்களுக்கு நான் கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன். இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கிற அத்தனை மாநிலங்களையும்விட தமிழ்நாட்டிலேதான் அரிசி விலை மிகக் குறைந்த விலைக்கு ரூ. 3.50க்குக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். எவ்வளவு குடும்ப அட்டைகளுக்குக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம் என்று சொன்னால் ஒரு கோடியே 20 இலட்சம் குடும்ப அட்டைகளுக்கு நாம் ரூ. 1,600 கோடி மானியத்திலே இவ்வளவு பெரிய நிதிச் சுமையிலும் இன்றைக்கு

அரிசியைக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். மிகப் பெரிய பட்டியலை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் இங்கே படித்துக் காட்டினார்கள். காங்கிரஸ் கட்சி ஆளுகின்ற மாநிலங்களைப் பற்றிப் படித்தார்கள். காங்கிரஸ் கட்சி கூட்டணி வைத்து ஆளுகின்ற மாநிலங்களின் நிலைமைகளைப் படித்துக் காட்டினார்கள். கம்யூனிஸ்ட் கட்சி ஆளுகின்ற மாநிலத்தில் இருக்கிற புள்ளிவிவரங்களைப் படித்தார்கள். அதுமட்டுமல்ல, பி.ஜே.பி. ஆளுகிற மாநிலங்களுடைய விவரங்களையும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இந்திய துணைக் கண்டத்திலே இருக்கிற எந்த ஒரு மாநிலத்திலும் நம்முடைய மாநிலத்தைப் போலக் குறைந்த அளவில் அரிசி விலை எங்கேயும் இல்லை. அதேபோல இவ்வளவு குடும்ப அட்டைகளும் எந்த மாநிலத்திலும் இல்லை. இவ்வளவு மானியத்தை இந்தியத் துணைக் கண்டத்திலே எந்த மாநில அரசும் கொடுத்தது இல்லை. புரட்சித்தலைவி அம்மா அவர்கள்தான் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் பகிரங்கமாக இந்த மாமன்றத்தின் மூலம் நாட்டுமக்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே வறியவர்களுக்கு உதவி செய்வதிலே எங்களுடைய தலைவியைப் போல இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கிற எந்தத் தலைவர்களும் செய்யவில்லை என்பதை நான் மீண்டும் மீண்டும் வற்புறுத்தித் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல, இந்தச் சூழ்நிலை உருவாவதற்கு யார் காரணம் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 1967 ஆம் ஆண்டில் அன்றைய மத்திய அரசாங்கம் ஒரு சட்டம் போட்டது. என்ன சட்டம் போட்டது? வறியோர் நலன் காக்கும் பொது விநியோகத் திட்டம் என்கின்ற முறையினை இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கிற அத்தனை மாநிலங்களும் பின்பற்ற வேண்டுமென்று சொன்னது. அதன்படி அன்றைக்கு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், முதல்முறையாக வறுமைக்கோட்டுக்குக் கீழே, வறுமைக் கோட்டுக்கு மேலே என்கின்ற அந்தப்பாகுபாட்டினை வகுக்கவேண்டுமென்று 1967-ல் இருந்த மத்திய அரசாங்கம் அனைத்து மாநில அரசாங்கங்களுக்கும் ஒரு தாக்கீது அனுப்பி, அதை நிறைவேற்றவேண்டுமென்று சொன்ன நேரத்திலே, இங்கேயிருந்த மாநில அரசாங்கம், அன்றைக்கு இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம், வறுமைக்கோட்டுக்குக் கீழே, வறுமைக் கோட்டுக்கு மேலே என்ற மத்திய அரசின் கொள்கையை நிறைவேற்றியிருந்தால் இன்றைக்கு



இந்த மாநிலத்திலே புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இவ்வளவு பெரிய நிதி நெருக்கடி ஏற்பட்டிருக்காது. வறுமைக்கோட்டுக்குக் கீழே, மேலே என்ற அந்தச் சூழ்நிலையை எளிதாக....(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** I am not yielding. வறுமைக்கோட்டுக்குக் கீழே...(குறுக்கீடு) நான் பேசி முடிக்கிற வரையில் யாரும் தயவுசெய்து குறுக்கிடவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே வறுமைக்கோட்டுக்கு மேலே, வறுமைக்கோட்டுக்குக் கீழே என்ற அந்த மத்திய அரசாங்கத்தின் பொது விநியோகத் திட்டத்தை அன்றைக்கு நிறைவேற்ற மறுத்த அரசு, திராவிட முன்னேற்றக் கழக அரசு, என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதற்குப் பின்னாலே அந்த வறுமைக் கோட்டுக்குக் கீழே, வறுமைக்கோட்டுக்கு மேலே என்ற பாகுபாடு செய்யப்பட்டிருந்தால் இன்றைக்கு இவ்வளவு குடும்ப அட்டைகள் வந்திருக்காது. மத்திய அரசாங்கம் இன்றைக்குத் சொல்வதைப்போல, வெறும் 48 லட்சம் என்கின்ற அளவுக்கு வறுமைக் கோட்டுக்குக் கீழே என்கிற அந்தச் சூழ்நிலை, நமது மாநிலத்திற்கு வந்திருக்கும். 1997-லே திராவிட முன்னேற்றக் கழகம் அதனைச் செய்யாமல் விட்டுவிட்டது. ஆனால், 1998-லே புதிய குடும்ப அட்டைகளைக் கணக்கெடுப்பு நடத்தி அவர்கள் ஆட்சியில்தான் வழங்கினார்கள். குறைந்தபட்சம் அந்தக் குடும்ப அட்டைகளை வழங்குகிறபோது, வறுமைக்கோட்டிற்கு மேலே, வறுமைக்கோட்டிற்குக் கீழே என்று அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்பாடு செய்து அறிவித்திருந்தால், இப்படி ஒரு கோடியே 20 இலட்சம் குடும்ப அட்டைகளுக்கு 3 ரூபாய் 50 காசு அரிசி வழங்க வேண்டிய சூழ்நிலை இந்த அரசுக்கு வந்திருக்காது. அன்றைக்கு அவர்கள் 3 வகையான அட்டைகளை அச்சடித்தார்கள் (குறுக்கீடு)

பிற்பகல் 1-45

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசி முடித்து விடட்டும்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** அந்த அரசாங்கம் 3 வகையான அட்டைகளை அச்சடித்து, இறுதியில், குழப்பத்திலே, ஒரு உணவுக் கொள்கையை, தெளிவான கொள்கையை இந்த நாட்டுக்குச் சொல்ல

முடியாமல் தவித்தார்கள். இறுதியிலே, அரிசி வாங்குகிறவர்கள், அரிசி வாங்காதவர்கள் என்கின்ற அளவிலே, அந்தக் குடும்ப அட்டைகளை அவர்கள் நிர்ணயித்தார்கள். அவர்கள் கணக்கு எடுத்து, ஒரு கோடியே 61 இலட்சம் குடும்ப அட்டைகளை வழங்கினார்கள். அந்த ஒரு கோடியே 61 இலட்சம் குடும்ப அட்டைகளிலே... (குறுக்கீடு) அரிசி வாங்குகிறவர்களுடைய குடும்ப அட்டைகள் ஒரு கோடியே 36 இலட்சம் என்று அவர்கள் நிர்ணயித்தார்கள். ஏறக்குறைய பத்து, பதினைந்து இலட்சம் போலி கார்டுகள் அன்றைக்கு உருவாகியிருந்தன. அது தொடர்ந்து உருவாக்கப்பட்டது. அந்த போலி கார்டுகளுக்கு வழங்கப்படுகிற அரிசியும் இந்த அரசாங்கத்தின் தலையிலே வந்து விழுந்தது என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அரசாங்கம் அட்டைகளை வழங்குவதற்குச் சரியான கணக்கெடுப்புச் செய்யாத காரணத்தினாலேதான், அவர்களுடைய குளறுபடிகளால்தான், சரியான உணவுக் கொள்கையை அவர்கள் வகுக்கத் தவறிய காரணத்தினாலேதான் அத்தனைச் சுமையும், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசாங்கத்தின்மீது வந்தது என்பதனையும் இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல: இறுதியாக ஆட்சியை விட்டுப் போகிறபோது அவர்கள் செய்த ஒரு மிகப் பெரிய காரியம் என்னவென்றால் தவறான உணவுக் கொள்கையை அவர்கள் வகுத்ததுதான். ஆந்திராவிலே இருந்து, கர்நாடகாவிலே இருந்து அவர்களுக்கு வேண்டியவர்களிடமிருந்தெல்லாம் 19 இலட்சம் டன் நெல்லை வாங்கி, 'godown' களிலே அடுக்கி வைத்து-தரமில்லாத நெல்லை, குப்பைக் கூளங்களோடு வாங்கி அடுக்கி வைத்து-விட்டுப் போனதன் காரணமாக, 1500 கோடி ரூபாய் அளவுக்கு ரிசர்வ் வங்கியிலே, இந்த அரசாங்கத்திற்கு ஒரு நிதிச் சுமை ஏற்பட்டது என்பதனையும், இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான், அவர் முடித்தவுடனே கூப்பிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** ஆகவே, இந்த ஆட்சி அமைந்தவுடனே, அவற்றையெல்லாம் சரி செய்ய வேண்டுமென்று எண்ணுகிற நேரத்திலேதான்...(குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புகழேந்தி, நான் உங்களைக் கூப்பிடுகிறேன். நிச்சயமாகக் கூப்பிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** 650 கோடி ரூபாயை உடனடியாக, ரிசர்வ் வங்கிக்கு, அதன் 'Over Draft'-ஐ சரி செய்தால்தான், மேலே இந்த அரசாங்கத்திற்கு, ரிசர்வ் வங்கி கடன் கொடுக்கும்.....(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான், உங்களை, அமைச்சர் முடித்தவுடன் கூப்பிடுகிறேன். (குறுக்கீடு) அமைச்சர் முடித்த பிறகு கூப்பிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** அப்படி சொன்ன காரணத்தினாலே, அதையும் கட்ட முடியாத ஒரு சூழ்நிலை அரசாங்கத்திற்கு இருந்தது என்பதையும் உங்களுக்கு நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்படிப்பட்ட சூழ்நிலைகள் மட்டுமல்ல; எந்தச் சூழ்நிலையிலே, நாம் எவ்வளவு அரிசி எப்படிக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்கிற விவரங்களை எல்லாம், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இடையிடையே உங்களிடத்திலே சொன்னார்கள்; அறிக்கையிலேயும் சொல்லியிருக்கிறார்கள்; பத்திரிகையாளர்களிடத்திலேயும் பேசி இருக்கிறார்கள். தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசாங்கம் தமிழ்நாட்டிற்கு வறுமைக்கோட்டிற்குக் கீழே என்று, B.P.L. rate-லே 48 இலட்சம் பேரைத்தான் நிர்ணயித்திருக்கிறார்கள். ஆனால், நாம் ஒரு கோடியே 36 இலட்சம் கார்டுதாரர்களுக்கு அரிசி கொடுக்க வேண்டும். ஏறக்குறைய 2.25 இலட்சம் டன் அரிசி ஒரு மாதத்திற்குக் கொடுக்கவேண்டிய சூழ்நிலை இந்த அரசாங்கத்திற்கு வந்தது. எப்படி? 48 இலட்சத்திற்குத்தான் கிலோ ஒன்றுக்கு 5 ரூபாய் 65 காசுக்கு என்ற விலையில் B.P.L. rate-லே அவர்கள் அரிசி கொடுத்தார்கள். அந்த அரிசியை B.P.L. rate-லே நாம் வாங்கி, ஒரு கோடியே 36 இலட்சம் கார்டுகளுக்கும் (குறுக்கீடு) கிலோ ஒன்றுக்கு 3 ரூபாய் 50 காசுக்குத்தான் நாம் கொடுக்கிறோம்.

அதுமட்டுமல்ல; நாம் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக நெல்லைக் கொள்முதல் செய்து, அரிசியாக்கி, அதை ரேஷன் கடைகளுக்குக் கொண்டு போகிறபோது, அதனுடைய கொள்முதல் விலை, ஒரு கிலோவுக்கு 12 ரூபாய். 12 ரூபாய்க்கு உருவாக்கப்பட்ட அந்த அரிசியை ரேஷன் கடைகளிலே நாம் கொண்டுபோய், 3 ரூபாய் 50 காசுக்குத்தான் கொடுக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதுமட்டுமல்ல;

அதற்கு மேலும் அரிசி போதாமல் மத்திய அரிசிடமிருந்து A.P.L. rate-லே ஒரு கிலோ 8 ரூபாய் 30 பைசாவுக்கு வாங்கி, அந்த அரிசியையும் 3 ரூபாய் 50 காசுக்குத்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கொடுக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. (குறுக்கீடு)

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு Clarification.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனது உரையை முடித்ததற்குப் பிறகு Clarification கேளுங்கள்.

*பிற்பகல் 1-50*

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** இப்படி அரிசியை அதிகமான விலைக்கு வாங்கி, குறைந்த விலையில் கிலோ ரூ. 3.50-க்குக் கொடுக்கிறபோதுதான் 1600 கோடி ரூபாய் இந்த அரசாங்கத்திற்கு நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டது. (குறுக்கீடு)

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு நிமிடம்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். அமைச்சர் பேசி முடித்தவுடன் கூப்பிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** ரிசர்வ் வங்கி 650 கோடி ரூபாயை உடனடியாகக் கட்ட வேண்டுமென்று வற்புறுத்தியது. நம்முடைய அரசாங்கம் அமைந்த உடனேயே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எப்படியாவது இந்த நிதிப் பற்றாக்குறையைச் சரிசெய்ய வேண்டும் என்பதற்காகத்தான் பல வழிகளிலே சிக்கன நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். இந்த அரிசி விலையை அதிகப்படுத்தாமல் இருப்பதற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு முயற்சி எடுத்தது. அதிலே முதல்படியாகத்தான் மத்திய அரசாங்கம் ஏற்கெனவே தாக்கீது அனுப்பியதன் அடிப்படையிலே, நமக்கு இருக்கிற நிதிப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு மத்திய அரசாங்கத்திடமிருந்து புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 3000 கோடி ரூபாய் பணம் உதவி, பேக்கேஜ் உதவி வேண்டும் என்று கேட்டார்கள். அதற்கும் மத்திய அரசாங்கம் கொடுக்காத ஒரு சூழ்நிலை; இப்படி மத்திய அரசாங்கமும் உதவி செய்யவில்லை; ரிசர்வ் வங்கியும் நெல்லை வாங்குவதற்குப் பணம் கொடுக்கவில்லை. நமக்கு இருக்கிற அதிகப்படியான மானியச் செலவையும் தாங்குவதற்கு இந்த அரசாங்கத்தாலே முடியவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையிலேதான், இந்த அரசாங்கம் இந்த மானியத்தைக் குறைக்க வேண்டும் என்கிற அடிப்படையிலே, வறுமைக் கோட்டுக்குக் கீழே, வறுமைக் கோட்டுக்கு மேலே என்று இரண்டு பிரிவாகப் பிரிப்பதற்கு ஒரு கணக்கெடுப்பு நடத்தி, அதன் மூலம் மானியச் செலவை ஓரளவாவது குறைக்க முடியுமா என்று இந்த அரசாங்கம் முயற்சி செய்தது. ஆனால், அந்தக் கணக்கெடுப்புக்கு ஆணையிடப்பட்டு, ஒரு வாரத்திற்குள்ளாகவே பொது மக்களிடத்திலேயிருந்து அப்படி வேண்டாம் என்கின்ற பல்வேறு கோரிக்கைகள் வந்ததனாலே, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அதை நிறுத்தி வைத்துவிட்டது.



அதற்கு அடுத்தபடியாக எப்படியாவது இந்த மானியத்தைக் குறைக்க வேண்டும் என்பதற்காகத்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ரேஷன் கடைகளிலே தவறான முறையிலே போகிற அந்த அரிசியைத் தடுக்க வேண்டும்; சமூக விரோதிகளாலே கடத்தப்படுகிற அந்த அரிசியைத் தடுக்க வேண்டும் என்பதற்காக 1999-லே Auditor General Report பிரகாரம் தமிழகத்தினுடைய ரேஷன் கடைகளிலே வழங்கப்படுகிற அரிசி 33 சதவீதம் சமூக விரோதிகளாலே கடத்தப்பட்டு-விலை குறைவாக ரூ. 3.50-க்கு கொடுக்கிற அந்த அரிசியை—வெளி மாநிலத்திலே கொண்டுபோய் சமூக விரோதிகளால் அதிக விலைக்கு விற்கப்படுகிறது என்கின்ற அந்த அறிக்கை வந்ததற்குப் பின்னாலே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நாம் ரூ. 3.50-க்கு கொடுக்கிற அரிசி தமிழ்நாட்டில் இருக்கிற உண்மையான ஏழைகளுக்கு, வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிற அடித்தளத்து மக்களுக்குத்தான் போய்ச் சேர வேண்டுமேயொழிய, அதைப் பயன்படுத்தி சமூக விரோதிகள் கொள்ளை அடிக்கக் கூடாது என்பதற்காகத்தான் இந்த A.P.L., B.B.L.,-ஐ கொண்டுவருவதிலே முயற்சி செய்து, அதிலேயும் முடியாமல் போய், இறுதியிலே கூப்பன் சிஸ்டத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிமுகம் செய்தார்கள். நல்லமுறையிலே நடந்துகொண்டிருந்த அந்தக் கூப்பன் சிஸ்டத்தைச் சிலர் வதந்தியான செய்திகளைப் பரப்பி, நீங்கள் கூப்பன் வாங்கவில்லை என்றால், உங்களுடைய ரேஷன் கார்டு போய்விடும் என்று சொல்லித் தவறான பிரச்சாரத்தைச் செய்ததனால், அரிசி வாங்காதவர்கள்கூட அந்தக் கூப்பனை வாங்கிக் கொண்டு போனதனாலே 1 கோடியே 36 இலட்சம் என்கின்ற அந்த அரிசி அட்டைகளின் எண்ணிக்கை, இறுதியாக கூப்பன் வாங்கியவர்களைப்

பொறுத்தவரை 1 கோடியே 20 இலட்சம் என்கின்ற அளவுக்கு வந்திருக்கிறது. ஏறக்குறைய 16 இலட்சம் கார்டுகளுக்கு bogus bill போடுவதிலிருந்து இந்த அரசாங்கம் தடுத்து இருக்கிறது. அரசாங்கம் நினைத்தது ஓரளவு அதிலே நிறைவேறி இருக்கிறது என்று சொன்னாலும், முழுமையாக இந்த அரசாங்கத்தினுடைய எண்ணம் அந்தக் கூப்பன் சிஸ்டத்திலே கொண்டுவரப்பட முடியாமல் போனதனாலேதான், தொடர்ந்து, 1600 கோடி ரூபாய் நிதிச் சுமையிலே இருந்து இந்த உணவு மானியத்தை மாற்ற வேண்டும் என்று பல்வேறு வகைகளிலே போராடி, இறுதியிலே வேறு வழியே இல்லாமல் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்திலே நாங்கள் போய் நின்றோம். எப்படியாவது இதற்கு ஒரு மாற்றுத் திட்டம் தாருங்கள் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்களைக் கேட்டோம். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எப்போதுமே கோரிக்கையோடு-இருக்கிற பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமென்று-அவர்களிடத்திலே நாங்கள் போகிறபோது across the table என்று சொல்வார்களே, அதுபோல், உடனடியாக உத்தரவுகளை வழங்கினார்கள். அப்படி வழங்கித்தான் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குப் பழக்கம்; உடனுக்குடன் உத்தரவுகளை வழங்குவார்கள்; சரியான மாற்றுத் திட்டங்களைத் தருவார்கள்; அது அவர்களுடைய வழக்கம்; அதை நல்லமுறையிலே செயல்படுத்துவார்கள். ஆனால், இந்த உணவு மானியத்தைக் குறைக்க வேண்டும் என்று நாங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்திலே போனபோது-அவர்கள் மிகவும் வருத்தத்தோடு—உடனே உத்தரவு தருகிற அவர்கள் 2, 3 மாத காலம் அதற்காக நிறையப்பேச்சுவார்த்தைகள் நடத்தினார்கள். நிறைய விவரங்களைச் சேகரித்தார்கள். அதற்குப் பின்னாலே எங்களிடத்திலே, அமைச்சர்களிடத்திலே அதற்குப் அதிகாரிகளிடத்திலே விவாதித்தார்கள். இறுதியிலே உணவு மானியத்தைக் குறைப்பதற்கு வேறு வழியே இல்லை; அரிசியினுடைய விலையை ஏற்றுவதைத்தவிர வேறு வழியே இல்லை என்கிற சூழ்நிலை உருவானபோதுதான் மிகுந்த மன வேதனையோடு, மிகுந்த கனத்த இதயத்தோடு, அதுமட்டுமல்ல, மிகுந்த வருத்தத்தோடு — அவர்களை நாங்கள் எல்லாம் என்றைக்குமே அப்படிப் பார்த்ததே இல்லை — அப்படிப்பட்ட ஒரு சோகத்தோடுதான் இந்தத் திட்டத்திற்கே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒத்துக்கொண்டார்கள். ஒத்துக்கொள்கிறபோதுகூடத் தெளிவாகச் சொன்னார்கள், ரூ. 3.50-க்கு இருக்க வேண்டும் என்பதிலே கட்டாயமாக நின்ற காரணத்தாலேதான்,



10 கிலோ அரிசி பொறுத்தவரை கிலோ ரூ.3.50-என்றும் அதற்கு மேலே வாங்குகிற ஒவ்வொரு கிலோவிற்கும் 6 ரூபாய் என்றும் இரண்டு விதமாக அரிசியை வழங்க வேண்டுமென்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவு வழங்கினார்கள். அந்த உத்தரவு பிரகாரம் இன்றைக்கு நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கிறது. மக்கள் ஏற்றுக்கொண்டு புரட்சித் தலைவியினுடைய திட்டத்திற்கு ஒத்துழைப்பைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

*பிற்பகல் 1-55*

இந்தத் திட்டத்தின் மூலமாகப் பெரிய செலவு ஒன்றும் இல்லை. சாதாரணமாக 10 கிலோ வாங்குகிறவர்களுக்கு ரூ.3.50. அதற்கு மேலே நம்முடைய குடும்ப அட்டைகளுக்கு நாம் விதித்திருக்கிற வழிமுறைகள் என்னவென்று சொன்னால், யூனிட் பிரகாரம், குடும்பத்தினுடைய அங்கத்தினர்களின் எண்ணிக்கையை ஒட்டி, குடும்ப அட்டைகளுக்கு நாம் வழங்குகிற அந்த அளவை நிர்ணயம் செய்திருக்கிறோம்;. 12 கிலோ, 14 கிலோ, 16 கிலோ, 20 கிலோ என்று நாம் நிர்ணயித்திருக்கிறோம். புரட்சித் தலைவியினுடைய உத்தரவு பிரகாரம், 12 கிலோ வாங்குகிறவர்களுக்கு கூடுதல் செலவு ஐந்தே ரூபாய்தான் மாதத்திற்கு; 14 கிலோ வாங்குகிறவர்களுக்கு ஒரு மாதத்திற்கு 10 ரூபாய்தான்; 16 கிலோ வாங்குகிறவர்களுக்கு மாதத்திற்கு 15 ரூபாய்தான். அதுபோல 20 கிலோ வாங்குகிறவர்களுக்கு மாதத்திற்கு 25 ரூபாய்தான் கூடுதல் செலவு. கனத்த இதயத்தோடுதான் இவ்வளவு குறைந்த அளவுக்கு ஒத்துக்கொண்டார்கள். இதனாலே பெரிய அளவிலே ஒன்றும் யாருக்கும் பாதிப்பு வராது என்று தெரிந்ததனாலேதான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் திட்டத்திற்கு மிகுந்த ஆராய்ச்சிக்குப் பின்னாலே, மிகுந்த வருத்தத்தோடு வேறு வழியின்றி ஒத்துக்கொண்டார்கள். மத்திய அரசாங்கமும் உதவி செய்யவில்லை. இந்த அரசாங்கத்தினுடைய உணவுக் கொள்கையையும் காப்பாற்ற வேண்டும்; இப்படிப்பட்ட சூழ்நிலையிலேதான் உணவு மானியத்தைக் குறைக்க வேண்டும் என்ற நிலையில் இப்படிப்பட்ட நடவடிக்கையை எடுத்தார்கள். 1600 கோடி ரூபாய் என்பதை நினைத்துப் பாருங்கள். புரட்சித் தலைவி எவ்வளவு புள்ளிவிவரங்களை இன்றைக்குத் தொடர்ந்து கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட கடுமையான நிலையை மாற்றுவதற்காகத்தான் இன்றைக்கு இந்த அரிசி விலை உயர்வை வேறு வழியின்றி ஒத்துக்கொண்டார்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசுகின்றபோது இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்தில் அரிசி விலை உயர்த்தப்படவே இல்லை என்று குறிப்பிட்டார்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்குக்கூட ஒரு காலகட்டத்தில் அரிசி விலையை உயர்த்த வேண்டிய ஒரு கட்டாயம் ஏற்பட்டது. 1.11.1985-லிருந்து புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது fine என்று கூறப்பட்ட அரிசியின் விலை கிலோ ஒன்றுக்கு 2 ரூபாயிலிருந்து 2 ரூபாய் 25 காசாக உயர்த்தப்பட்டது. அதைப்போலவே super fine என்று கூறப்பட்ட அரிசியின் விலை கிலோ ஒன்றிற்கு 2 ரூபாய் 15 காசு என்ற விலையிலிருந்து 2 ரூபாய் 50 காசாக உயர்த்தப்பட்டது. அப்போது common variety அரிசி மட்டும். ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த கிலோ ஒன்றுக்கு 1 ரூபாய் 75 காசு என்ற விலைக்கே தொடர்ந்து வழங்கப்பட்டது. அப்போது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் என்ன முறையைக் கடைப்பிடித்தாரோ அதே முறையைத்தான் இப்போது இந்த அரசும் கடைப்பிடித்திருக்கிறது என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். மேலும் அப்போது புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் ஒரு குடும்ப அட்டைதாரருக்கு 12 கிலோ அரிசிதான் வழங்கப்பட்டு வந்தது. அந்த 12 கிலோ அரிசியில் common variety, அதாவது, குறைந்த விலைக்கு, கிலோ 1 ரூபாய் 75 காசு என்ற விலைக்கு வழங்கப்பட்டு வந்த அரிசியின் அளவு மிகவும் குறைவாகத்தான் வழங்கப்பட்டது. ஆனால் இன்றைக்கோ ஒரு குடும்ப அட்டைக்கு 20 கிலோ அரிசி வழங்குகிறோம். அதில் 10 கிலோவை கிலோ 3 ரூபாய் 50 காசு என்ற விலைக்கு வழங்குகிறோம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகப் பெரிய விளக்கங்களை எல்லாம் அம்மா அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்து விட்டார்கள். ஒரேயொரு விளக்கத்தை மட்டும் சொல்லி என்னுடைய உரையை நிறைவு செய்ய விரும்புகிறேன். இவ்வளவு விலையேற்றத்திற்குப் பின்னாலேயும் இந்த அரசாங்கத்திற்கு 1600 கோடி ரூபாயில், ரூ. 774 கோடி அளவுக்குதான் நிதிச் சுமை குறைந்து இருக்கிறது. இன்னும் 800 கோடி ரூபாய்க்கு மேலே, மேலும் தொடர்ந்து உணவு மானியமாகக் கொடுக்க வேண்டிய நிலையிலேதான் இந்த அரசாங்கம் இருக்கிறது. ஒன்றைத் தெளிவாக, மீண்டும் ஒருமுறை தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்தியாவிலேயுள்ள அத்தனை மாநிலங்களுடைய புள்ளிவிவரங்களையும் இங்கே சொல்லி இருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தைப் போல.... (குறுக்கீடுகள்)

பிற்பகல் 2-00

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி இந்த நிர்வாகச் சீர்திருத்தம் கொண்டுவந்த நிலையிலே ஒட்டுமொத்தமாக நமக்கு 1600 கோடி ரூபாய் இழப்பு. மைய அரசு நமக்கு நிதியைத் தரவில்லை. 650 கோடி ரூபாய் உடனடியாக ரிசர்வ் வங்கிக்குக் கட்டினால்தான், இந்தமாதிரி ஏழைகளிடமிருந்து நெல்லைக் கொள்முதல் செய்ய பணம் அனுமதி. ரிசர்வ் வங்கியிடமிருந்து கிடைக்கும் என்ற நிலை. இப்படி எடுத்த சீர்திருத்தத்தில் நமக்கு ஏற்பட்டு இருக்கின்ற மிச்சம் 826 கோடி ரூபாய் இன்னும் 724 கோடி ரூபாய் பணச் சுமை அரசுக்கு இருக்கிறது; மானியச் சுமை இருக்கிறது. அதற்கு நிதிக்கு எங்கே போவது என்ற ஒரு வேதனையான நிலையிலேதான் புரட்சித் தலைவி அவர்கள் தாராள மனதோடு 22 கோடி ரூபாய் மாதத்திற்கு அரசு ஊழியர்களுக்கும்-உதவியாக அவர்களுக்கு-D.A. தருவதற்கு முன்வந்தார்கள் என்பதை நான் கூற விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வளவுக்குப் பின்னாலேயும், உணவு மானியத்தை நம்முடைய மாநிலத்திலேதான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏழை எளியவர்களுடைய நலன் காக்க, தொடர்ந்து வழங்கிக்கொண்டு இருக்கிறார்கள் என்பதனை எண்ணிப்பார்த்து, கொடுத்து இருக்கிற இந்த விளக்கத்தை ஏற்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்களுடைய கண்டனத் தீர்மானத்தை வற்புறுத்தாமல் இருந்து, புரட்சித் தலைவியினுடைய அரசுக்கு ஆதரவு தெரிவிக்க வேண்டும் என்று கேட்டு அமர்கின்றேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? சொல்லுங்கள். யாராவது ஒருவர் சொல்லுங்கள். திரு. பொன்முடி சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை.

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் withdraw பண்ண வேண்டும் என்று.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இல்லை. நானே கேட்கிறேன்.

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் மிக நீண்ட விரிவான பதிலை இங்கே அளித்து இருக்கிறார்கள்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை.

**திரு. பரிதி இளம்வழுதி:** நாம் அவரிடம் கேட்க விரும்புவது எல்லாம்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தக் கிண்டல் எல்லாம் வேண்டாம். இது அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்படுகிறது.

**திரு. பரிதி இளம்வழுதி:** சார். நான் அவரிடம் தெரிந்துகொள்ள விரும்புவது எல்லாம், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே 19 இலட்சம் டன் அரிசி வாங்கி வைத்து இருந்தோம்; அது குப்பைக் கூளமாக இருந்தது. கெட்டதாக இருந்தது. புழுத்த அரிசியாக இருந்தது என்று சொன்னார். வாதத்திற்கு—அவர் வாதத்திற்கு—நான் ஒத்துக்கொண்டாலும். அப்படிப் புழுத்த அரிசியாக அது இருந்தால் கேரள மாநில அரசாங்கத்திற்குக் கடிதம் எழுதி, இங்கே தரமான அரிசி இருக்கிறது. வந்து வாங்கிக்கொள்ளுங்கள் என்று எழுதியது உண்மையா, இல்லையா என்று கேட்க விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அது டி.கே.எம்.-9 என்ற அந்த ரகத்தைத்தான் சொல்லப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் கூறிய கூற்று தவறானது. (குறுக்கீடுகள்) புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, 1991-1996 காலத்திலே 8 இலட்சம் டன், 10 இலட்சம் டன், 7 இலட்சம் டன், 4 இலட்சம் டன் என்று கொள்முதல் செய்து இந்தப் பொது விநியோக முறையைச் செம்மையாக நடத்தி

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



வந்தார்கள். 48 இலட்சம் பேர்தான். அதுதான் ஏழைகள் கார்டுக்கு உரியவர்கள் என்பது மைய அரசினுடைய கணிப்பு. 1,60,000 பேருக்கு PDS முறையில் விநியோகம் எனும் நிலை; 19 இலட்சம் டன் தேவையில்லாமல் கொள்முதல் செய்யப்பட்டது. அரிசி கெட்டுவிட்டது. கெட்டுவிட்ட நிலையிலே அதை மேலும் சுத்தப்படுத்தி, அரிசியினுடைய குறைகளை எல்லாம் போக்கி, சுத்தப்படுத்தப்பட்ட பிறகுதான் கேரள மாநிலத்திற்கு விற்கப்பட்டது. அதனால் அரசுக்கு பலகோடி ரூபாய்— 300 கோடி ரூபாய்க்கு மேல் — அரசுக்கு இழப்பு ஏற்பட்டது. அதற்கு அன்றைய தி.மு.க. ஆட்சியினுடைய இந்தத் தவறான அணுகுமுறைதான் காரணம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இல்லை.

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே. பேரவைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் இந்த கண்டனத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததனுடைய நோக்கம், அரசுக்குக் கண்டனம் தெரிவித்து மகிழ வேண்டும் என்பதல்ல. எங்களுடைய நியாயமான கோரிக்கையை ஏற்று தமிழகத்திலே வாழ்கின்ற கோடிக்கணக்கான மக்கள் பயன்பெறுகின்ற வகையில் அரிசி விலையை மீண்டும் குறைப்பார்கள் என்ற நம்பிக்கையோடுதான், அந்தத் தீர்மானத்தை நாங்கள் முன்மொழிந்தோம். அரசாங்கம் இறுதியாக, நிச்சயமாக அது முடியாது, 6 ரூபாய் அரிசி, 6 ரூபாய் என்று தெரிவித்துவிட்டது. எனவே அரசினுடைய இந்தக் கொள்கையைக் கண்டிக்கும் வகையில் நாங்கள் அத்தனைபேரும் வெளிநடப்புச் செய்கிறோம்.

(இந்திய தேசிய காங்கிரஸ் உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்தனர்)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தல். (குறுக்கீடுகள்) இல்லை. அவர்கள் வெளிநடப்புச் செய்துவிட்ட காரணத்தால், திரு. எஸ்.ஆர்.பி. அவர்களுடைய தீர்மானத்தை வலியுறுத்தவில்லை என்று தீர்ப்பளிக்கிறேன். (குறுக்கீடுகள்)

அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தல் (குறுக்கீடுகள்) திரு. ஜி.கே. மணி வலியுறுத்துகிறீர்களா? (குறுக்கீடுகள்) திரு. ஜி.கே. மணி வலியுறுத்துகிறீர்களா? (குறுக்கீடுகள்) தீர்மானத்தை வலியுறுத்துகிறீர்களா? (குறுக்கீடுகள்)

பிற்பகல் 2.05

**DR. K. PONMUDI:** Hon. Speaker Sir, Point of Order.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, நாங்களும் அரசினுடைய முடிவுக்கு, முடிவான கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவித்த தீர்மானத்தின்மீது பேசி, அரிசி விலையை எப்படியாவது குறைக்க வேண்டுமென்று வற்புறுத்தினோம். அரிசி விலையைக் குறைக்காமல், முதலமைச்சர் அவர்கள் இம்மாமன்றத்திலே கொடுத்த வாக்குறுதியையும் நிறைவேற்றாமல், இந்த நாட்டு மக்களுக்குச் செய்த பாதகச் செயலைக் கண்டித்து, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வெளிநடப்புச் செய்கின்றோம். (கூச்சல்)

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்)

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) உறுப்பினர்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும் அவையைவிட்டு வெளியேறினார்கள்)

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே_

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்களுடைய தீர்மானம், திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் வெளிநடப்புச் செய்துவிட்ட காரணத்தால் வலியுறுத்தப்படவில்லை என்பதைத் தீர்ப்பாக அளிக்கிறேன்.

## 9. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)

### தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 46/2002), மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 46/2002)(a) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

---

@ 29-10-2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 46/2002) நிறைவேற்றப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 7. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (ஆ) பேரவை அலுவல்கள் மாற்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுவதாக இருந்த இனம் 2 முதல் 7 வரையிலான சட்டமுன்வடிவுகள் நாளை (31-10-2002) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (31-10-2002) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-07 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.





## 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

55. வணிகவரிகள் துறையின் 27.6.2002 ஆம் நாளிட்ட 79 ஆம் எண் அரசாணையில் கீழ்க்காணும் பொருள்கள் குறித்து வெளியிடப்பட்ட அறிவிக்கைகள்;

1. யாதொரு அறிவிக்கை மூலம், அட்டவணையிடப்பட்ட விலை வீதத்தைக் காட்டிலும் குறைவான விலை வீதத்தில் பொருட்களை விற்பனை செய்யக் கூடாது என்ற நிபந்தனைக்கு உட்பட்டு, வணிகர் ஒருவர் மேற்சொன்ன பொருட்களின் தயாரிப்பில் பயன்படுத்தப்படும் எரிபொருள் நீங்கலாக ஏனைய பொருட்களின் கொள்முதல் குறித்து 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் செலுத்திய வரித் தொகை அளவிற்கு, சில பொருட்களின் விற்பனைக்கு செலுத்தத்தக்க வரித் தொகையில் குறைப்பது குறித்து.

2. அச்சிடப்பட்ட பொருட்களின் விற்பனைக்கு யாதொரு வணிகரால் செலுத்தத்தக்க வரித் தொகையில் பயன்படுத்துவதற்காக அல்லது அச்சிடப்பட்ட பொருட்களின் தயாரிப்பில் பயன்படுத்துவதற்காக வாங்கிய அச்சுத் தாள், அச்சுமை ஆகியவற்றுக்கு 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் நேரடியாக செலுத்தப்பட்ட வரித் தொகை அளவிற்கு குறைப்பது குறித்து.

3. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) பதினொன்றாம் விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆல்கஹால் கலந்த மதுவகைகள், வெளிநாட்டு மது வகைகள் மற்றும் பெட்ரோலிய உற்பத்திப் பொருட்கள் ஆகியவற்றின் மறு விற்பனைக்கு மேற்சொன்ன சட்டத்தின் 3-எச் பிரிவின்கீழ் செலுத்தத்தக்க வரியைப் பொறுத்தமட்டில் விலக்களிப்பது குறித்து.

4. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) பதினொன்றாம் விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மண்ணெண்ணெய், திரவ பெட்ரோலிய எரிவாயு, ஆல்கஹால் கலந்த மது வகைகள் மற்றும் வெளிநாட்டு மது வகைகள் ஆகியவற்றின் விற்பனை மீது செலுத்தத்தக்க வரிக்கு மேற்சொன்ன சட்டத்தின் 3-1 பிரிவின்கீழ், யாதொரு வணிகர் செலுத்த வேண்டிய மேல்வரியைப் பொறுத்தமட்டில் விலக்களிப்பது குறித்து.

5. 27.3.2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின், சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட வணிகவரித் துறையின் II(1) வ.வ./19 (பி-8) 2002 ஆம் எண் அறிவிக்கையில் (பின்னர் திருத்தப்பட்டது) மாற்றம் செய்தது குறித்து.

6. உயர் வேக டீசல் எண்ணெய் மற்றும் பெட்ரோல் ஆகியவற்றின் விற்பனை அல்லது கொள்முதலுக்கு 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1970)-ன்கீழ் யாதொரு வணிகரால் செலுத்தத்தக்க கூடுதல் வரியைப் பொறுத்தமட்டில் விலக்களிப்பது குறித்து.

7. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 3-எச் பிரிவின்கீழ் ஒவ்வொரு வணிகரால் செலுத்தத்தக்க மறுவிற்பனை வரி வீதத்தை ஒரு சதவீதம் என்று நிர்ணயிப்பது குறித்து.

8. பொன், வெள்ளி, பிளாட்டினம் நகைகள் மற்றும் விலையுயர்ந்த கற்கள் ஆகியவற்றின் விற்பனைக்கு 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ், யாதொரு வணிகரால் செலுத்தத்தக்க வரித் தொகையைப் பொறுத்தமட்டில், வரி வீதத்தை நான்கு சதவீதத்திலிருந்து இரண்டு சதவீதமாகக் குறைப்பது குறித்து (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

56. வணிகவரிகள் துறையின் 1.7.2002 ஆம் நாளிட்ட 82 ஆம் எண் அரசாணையில் கீழ்க்காணும் பொருட்கள் குறித்து வெளியிடப்பட்ட அறிவிக்கைகள்:

1. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) முதல் விவர அட்டவணையில் பகுதி-ஏ-ல் இனம் 1-இல் குறிப்பிடப்பட்ட பொன், வெள்ளிக் கட்டிகளின் விற்பனை குறித்து மேற்சொன்ன சட்டத்தின்கீழ் வணிகர் செலுத்தத்தக்க வரியை 0.5 சதவீதமாகக் குறைப்பது குறித்து.

2. தைக்கப்பட்ட கைத்தறி மற்றும் ஆலை தயாரிப்பு கைக்குட்டைகளின் விற்பனைமீது 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து.



3. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) முதல் விவர அட்டவணையில் பகுதி-பி, இனம் எண் 18-இன் துணை இனம் (111)-இல் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு சில பொருள்கள் மேற்சொன்ன துணை இனத்தின்கீழ் வருவதாக அறிவிப்பது குறித்து.

4. சில பொருட்களின் மறு விற்பனை குறித்து 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 3-எச் பிரிவின்கீழ் யாதொரு வணிகர் செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து.

5. இறக்குமதி செய்யப்பட்ட சில மூலப்பொருள்களிலிருந்து/ பாகங்களிலிருந்து மாநிலத்திற்குள் யாதொரு வணிகர் தயாரித்த யாதொரு பொருளின் விற்பனை குறித்து அவர் செலுத்தத்தக்க வரியைப் பொறுத்தமட்டில், இப்பொருள் மீது 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளூர்ப் பகுதிகளில் பொருள்கள் நுழைவதன் பேரில் விதிக்கப்படும் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/2001) கீழ் தொகையைத் திருப்பியளிக்காமல், செலுத்தப்பட்ட நுழைவு வரி அளவுக்கு அவ்வரியைக் குறைப்பது குறித்து. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

57. வணிக வரிகள் துறையின் 27.3.2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட II(1)/வ.வ./19(பி.11) 2002 ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்தது குறித்தும் மற்றும் அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பயனுக்காக/விற்பனைக்காக சில நிறுவனங்களுக்கு விற்பனை செய்ய வரும் பெட்ரோல், டீசல், சிமெண்ட் நீங்கலான யாதொரு பொருளின் விற்பனை மீது வணிகர் ஒருவர் செலுத்தத்தக்க வரியை, நான்கு சதவீதமாகக் குறைப்பது குறித்தும் வணிக வரிகள் துறையின் 16.7.2002 ஆம் நாளிட்ட 91 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

58. வணிக வரிகள் துறையில் 29.6.2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட II(1)/வ.வ./40(பி-3)/ 2002 ஆம் எண்ணுள்ள அறிவிக்கையை ரத்து செய்தது குறித்தும் மற்றும் அச்சிடப்பட்ட பொருட்களைத் தயாரிக்கப் பயன்படுத்துவதற்காக அல்லது உபயோகப்படுத்துவதற்காக வாங்கப்பட்ட அச்சு காகிதம்

[2002 அக்டோபர் 30

மற்றும் அச்சு மை ஆகியவை குறித்து 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் நேரடியாகச் செலுத்தப்பட்ட வரி அளவிற்கு மேற்சொன்ன அச்சிடப்பட்ட பொருட்களின் விற்பனையின் பேரில் யாதொரு வணிகர் மேற்சொன்ன சட்டத்தின் கீழ் செலுத்தத்தக்க வரியைக் வரிக் குறைப்பு செய்வது குறித்தும் வணிக வரிகள் துறையின் 2.9.2002 ஆம் நாளிட்ட 102 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள் (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

59. திருவாளர்கள் மினரல்ஸ் & மெட்டல்ஸ் டிரேடிங் கம்பெனி லிமிடெட் நிறுவனம், சென்னை, மீனம்பாக்கம், அண்ணா பன்னாட்டு விமான நிலையத்தில் உள்ள வரியில்லா விற்பனை நிலையத்தில் விற்பனை செய்யப்படும் தங்கம், வெள்ளி நகைகள் மற்றும் கடிகாரங்களின் மீது 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் செலுத்தத்தக்க வரியைப் பொறுத்தமட்டில், ஏனையவற்றுக்கிடையே, இந்திய ரிசர்வ் வங்கியின் பொருத்தமான விதிகள் மற்றும் வழிகாட்டிக் குறிப்புகளின்படி இந்த விற்பனைகளுக்கு வெளிநாட்டு கரன்சியில் அல்லது அந்நியச் செலாவணியில் தொகை செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் துறையின் 11.9.2002 ஆம் நாளிட்ட 105 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

60. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் (1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு பணிகள் நடைமுறை நூல் தொகுதி-I) திருத்தம் செய்தது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 30.7.2002 ஆம் நாளிட்ட 90 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

61. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் (1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு பணிகள் நடைமுறை நூல் தொகுதி-I) திருத்தம் செய்தது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 30.7.2002 ஆம் நாளிட்ட



2002 அக்டோபர் 30]

91 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

62. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் ஆண்டு விவர கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை. (1948 ஆம் ஆண்டு மின்சாரச் (விநியோகம்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 69 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (ஆங்கிலம்)

**ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்**

32. 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 74/1956) 8 ஆம் பிரிவைச் சேர்ந்த (5) உட்பிரிவின்கீழ் அறிவிக்கப்பட்ட குறைவான வீதத்தில் மாநிலங்களுக்கிடையே பொருட்களை விற்பனை செய்யக் கூடாது மற்றும் அவ்வாறு குறைத்து வரி விதிப்பானது மேற்சொன்ன சட்டத்தின்கீழ், வரி விதிக்கத்தக்க மொத்த விற்பனைத் தொகையில் இரண்டு சதவீதத்திற்குச் சமமான அளவிற்கு மிகாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒருவர் எரிபொருள் நீங்கலாக, யாதொரு பொருட்களை வாங்குவதன் பேரில் மேற்சொன்ன பொருட்களைத் தயாரிப்பில் பயன்படுத்தப்பட்ட எரி பொருள் நீங்கலாக வாங்குகின்ற ஏனைய பொருட்களுக்கு 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) கீழ், செலுத்தப்பட்ட வரி அளவிற்கு மாநிலங்களுக்கிடையே விற்பனை செய்யப்படுகின்ற சில பொருட்களுக்குச் செலுத்தத்தக்க வரித் தொகையில் குறைக்கப்படும் என்று உத்தரவிடுவது குறித்து வணிக வரிகள் துறையின் 27.6.2002 ஆம் நாளிட்ட 79 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

33. பொதுக் கணக்குக் குழுவின் நூற்றுப் பதினோராவது அறிக்கை. (2001-2003)

34. பொதுக் கணக்குக் குழுவின் நூற்றுப் பன்னிரெண்டாவது அறிக்கை. (2001-2003)

35. பொதுக் கணக்குக் குழுவின் நூற்றுப் பதிமூன்றாவது அறிக்கை. (2001-2003)

36. பொது நிறுவனங்கள் குழுவின் அறுபதாவது அறிக்கை. (2002-2003)

37. பொது நிறுவனங்கள் குழுவின் அறுபத்தி ஒன்றாவது அறிக்கை. (2002-2003)

38. பொது நிறுவனங்கள் குழுவின் அறுபத்தி இரண்டாவது அறிக்கை. (2002-2003)

39. அரசு உறுதிமொழிக் குழுவின் ஆறாவது அறிக்கை. (2002-2003)

40. மனுக்கள் குழுவின் ஒன்பதாவது அறிக்கை. (2001-2002)

41. மனுக்கள் குழுவின் பத்தாவது அறிக்கை. (2001-2002)

42. மனுக்கள் குழுவின் பதினொன்றாவது அறிக்கை. (2001-2002)

43. மனுக்கள் குழுவின் பன்னிரண்டாவது அறிக்கை. (2002-2003)

44. மனுக்கள் குழுவின் பதிமூன்றாவது அறிக்கை. (2001-2003)

45. மனுக்கள் குழுவின் பதினான்காவது அறிக்கை. (2001-2003)

46. 2002-2003 ஆம் ஆண்டுத் திட்டம் (திட்டம்—வரவு-செலவுத் திட்ட இணைப்பு) 2002-2003 ஆம் ஆண்டு விரிவான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளின் துணை வெளியீடு.

ஃ

225173.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.

53-323